வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959

Reg. No. : P . 1632

விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu வாரமலர்




Email : news@eelanadu.lk | மலர் : 04 | 24.09.2023 ஞாயிற்றுக்கிழமை | இதழ் : 288 | பக்கங்கள் : 16



**07** மோசமடையும் இந்திய – கனடா உறவு மேற்குலக 'பாகிஸ்தானாக' கனடா மாறுமா?



**08** மீண்டும் ஜனாதிபதி ஆட்சிமுறை ஒழிப்பின் அவசியம்



**09** ஜனாதிபதித் தேர்தல் பின்போகுமானால் பொதுத் தேர்தலுக்கும் அதே கதிதான்!



**10** கனடாவின் குடிமகன்! சீக்கியர்களின் போராளி! இந்தியாவின் பயங்கரவாதி!

# சரியான ஒரு பொறிமுறை இல்லை கடன் வழங்குவதை பரிசீலியுங்கள்!

## சர்வதேச நாணய நிதியத்திடம் தமிழ் அரசு கட்சி கோரிக்கை



யாழ்ப்பாணம், செப்ரெம்பர் 24

இலங்கையில் இடம்பெற்ற மனித உரிமை மீறல்களுக்கு சரியான பொறிமுறை ஏற்படுத்தப்படாத நிலையில் இதனை காரணமாக வைத்து கடன் வழங்குவது தொடர்பில் சர்வதேச நாணய நிதியம் பரிசீலனை செய்ய வேண்டும் என வடக்கு மாகாண சபை அவைத் தலைவர் சீ.வீ.கே. சிவஞானம் தெரிவித்துள்ளார்.

15



## அடுத்த மாதம் இலங்கை வருகின்றார் ஜெய்சங்கர்

கொழும்பு, செப். 24

"ஐயோரா" என கூறப்படும் இந்து சமுத்திரப் பிராந்தியத்தில் அமைந்துள்ள 23 நாடுகளின் வெளிவிவகார அமைச்சர்கள் கலந்துகொள்ளும் மாநாடு எதிர்வரும் ஒக்டோபர் மாதம் இலங்கையில் நடைபெறவுள்ளது.

2023-2025 காலப்பகுதிக்கான தலைமை பதவியை இலங்கை வகிப்பதால் இம்முறை "ஐயோரா" மாநாடு இலங்கையில் இடம்பெறவுள்ளது.

கடந்த ஆண்டு மாநாடு

15

## இலங்கை ஸ்திரத்துக்கான பயணத்தில் கருத்து சுதந்திரத்தை பலியிடக்கூடாது!

### அமெரிக்கத் தூதுவர் வலியுறுத்து

கொழும்பு, செப். 24

இலங்கை ஸ்திரத்தன்மையை அடைவதற்கான பயணத்தில் கருத்து சுதந்திரத்தை பலியிடக் கூடாது என இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் திருமதி ஜூலி சுங் தெரிவித்தார்.

அமைதியான போராட்டங்கள் மூலமாகவோ, கலை வெளிப்பாடுகள் மூலமாகவோ அல்லது சமூக ஊடகங்கள் மூலமாகவோ கருத்துக்களை வெளிப்படுத்த முடியும் என்று அவர் சுட்டிக்காட்டினார்.



சர்வதேச சமாதான தினத்தை முன்னிட்டு மஹரகம இளைஞர் சேவை மன்ற மண்டபத்தில் இடம்பெற்ற நிகழ்வொன்றில்

15

## பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமூலத்தை அரசு உடனடியாக மீளப்பெறவேண்டும்!

### சட்டத்தரணிகள் ஒன்றிணைவு வலியுறுத்தல்

கொழும்பு, செப். 24

பயங்கரவாத எதிர்ப்பு சட்டமூலம் மற்றும் நிகழ்நிலை காப்புச் சட்டமூலங்களை வன்மையாகக் கண்டிப்பதாக சட்டத்தரணிகள் ஒன்றிணைவு அறிக்கை மூலம் தெரிவித்துள்ளது.

சம்பந்தப்பட்ட இரண்டு சட்டமூலங்களையும் உடனடியாக மீளப்பெறவேண்டும் என சட்டத்தரணிகள் ஒன்றிணைவு அரசாங்கத்தை வலியுறுத்தியுள்ளது.

மார்ச் மாதம் வெளியிடப்பட்ட வர்த்தமானியில் பயங்கரவாத எதிர்ப்பு சட்டமூலம் தொடர்பில் முன்வைக்கப்பட்ட விமர்சனங்கள் குறித்து தற்போது வெளியிடப்பட்டுள்ள சட்டமூலத்தில் கவனத்திற்கொள்ளப்படவில்லை என சட்டத்தரணிகள் ஒன்றிணைவு சுட்டிக்காட்டியுள்ளது.

மக்களின் கருத்துகளைப் பெறாமல்

15



## ஐ.நா. கூட்டங்களில் அலி சப்ரியின் மகன்

### வெடித்தது சர்ச்சை

நியூயோர்க், செப். 24

ஐக்கிய நாடுகளின் பொதுச் சபைக் கூட்டத்தில் கலந்துகொள்ள சென்ற இலங்கைக் குழுவில் அமைச்சர்கள் அல்லாத எம்.பிக்களை அழைத்து சென்றுள்ளமை பொதுமக்கள் மத்தியில் கடுமையான எதிர்ப்பை ஏற்படுத்தியிருந்தது.

இந்த நிலையில், அமைச்சர் அலி சப்ரி அமெரிக்காவில் கலந்து கொண்ட சந்திப்புக்களில்

15

*'ஷி யான் 6' சர்ச்சை ஓய்வதற்கு முன்*

## மற்றுமொரு ஆய்வுக் கப்பலை இலங்கைக்கு அனுப்பும் சீனா?

கொழும்பு, செப். 24

சீனாவின் "ஷி யான் 6" என்ற உளவு கப்பல் நேற்று இலங்கைவரவிருந்த நிலையில், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் சீன விஜயம்வரை குறித்த கப்பலின் வருகையை ஒத்திவைக்க சீனா தீர்மானித்துள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ள பின்புலத்தில் சீனாவின் மற்று மொரு ஆய்வு கப்பலான 'சியாங்

15

## பங்களாதேஷிடம் பெற்ற கடனை திருப்பிச் செலுத்தியது இலங்கை

கொழும்பு, செப். 24

இரண்டு வருடங்களுக்கு முன்னர் நாணய மாற்று ஒப்பந்தத்தின் கீழ் பெறப்பட்ட 200 மில்லியன் அமெரிக்க டொலர் கடனின் இறுதி தவணையாக இலங்கை பங்களாதேஷுக்கு 50 மில்லியன் அமெரிக்க டொலர்களை செலுத்தியுள்ளது.

15



## 3 இலங்கை இளைஞர்கள் மலேசியாவில் படுகொலை!

### 2 இலங்கையர்கள் தலைமறைவு!!

கோலாலம்பூர், செப். 24

மலேசிய தலைநகர் கோலாலம்பூரில் செந்தூல், ஜாலான் பெர்ஹெண்டியன் கம்பங் கோவில் ஹிலிரில் உள்ள ஒரு வீட்டில் நேற்று முன் தினம் இரவு மூன்று இலங்கை ஆண்கள் கை, கால்கள் கட்டப்பட்டு தலையை பிளாஸ்ரிக்கால் மூடிய நிலையில்

15

**உண்மைகள் புனிதமானவை; கருத்துக்கள் சுதந்திரமானவை**

## இப்படியும் நடக்கிறது

ஒருவர் விறகு வெட்டுவதற்காக ஒரு நாள் தனது பத்து வயது மகனையும் அழைத்துக் கொண்டு காட்டுக்கு சென்றார்.

பையனோ விடாமல் வழியெல்லாம் அவரைக் கேள்விகளால் துளைத்தெடுத்துக் கொண்டே வந்தான். அவரும் பொறுமையாகப் பதில் சொல்லிக் கொண்டே வந்தார். விறகு வெட்ட ஆரம்பித்தார். பையன் அப்போதும் கேள்விகள் கேட்டான்.

அப்போது தகப்பன் சொன்னார்: ‘நாம அப்புறம் பேசிக் கொள்ளலாம். நீ நல்ல பையனாம். அப்பா வெட்டுற விறகுகளை எல்லாம் எடுத்து அடுக்கி வைப்பியாம்’.

பையனும் மகிழ்ச்சியுடன் தலையசைத்தான்.

அவர் விறகு வெட்ட ஆரம்பித்தார்.

‘அப்பா.. அப்பா..’ என்றான் பையன். ‘என்னடா?’ கோபத்துடன் கேட்டார்.

‘இந்த ஆறு எங்கே போகுது?’ ‘நம்ம வீட்டுக்குத்தான்’.

பையன் அதற்குப் பிறகு கேள்விகள் கேட்கவில்லை. மாலை நேரம் ஆனது. விறகு வெட்டியவர் பையனின் கையைப் பிடித்துக் கொண்டு ‘வா, போகலாம். நான் வெட்டிய விறகு எல்லாத்தையும் எங்க அடுக்கி வைச்சிருக்கிறாய்?’ என்று கேட்டார்.

பையன் சொன்னான்: ‘நீங்க வெட்டினதை எல்லாம் ஆற்றிலே போட்டுட்டேன். இந்நேரம் அது நம்ம வீட்டுக்குப் போயிருக்கும்..!’

- இதுதான் சொல்வார்கள், குழந்தைகளுடன் பேசும்போது கவனமாக பேசவேண்டும் என்று.

கடந்த இரண்டு நாட்களாக பாராளுமன்றத்தில் நடைபெற்ற உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பாக எம்.பிக்கள் பேசிய பேச்சுக்கள் பற்றிய செய்திகளைப் படித்தபோது மேலேயுள்ள கதைதான் ஞாபகத்திற்கு வந்தது.

இந்த விவாதம் ஏற்பாடு செய்யப்பட்டது, சனல் 4 தொலைக்காட்சி ஆவணப்படம் வெளியிடப்பட்டதால்தான் என்பது தெரிந்ததுதான். அதில் முக்கியமாக தெரிவிக்கப்பட்டது கோட்டாபய தேர்தலில் வெற்றி பெறுவதற்காக இந்த தாக்குதல் ஏற்பாடு செய்யப்பட்டது என்று. அதைச் சொன்னவர், பிள்ளையானின் உதவியாளர். அவர் சொன்ன முக்கிய தகவல், தற்போதைய தேசிய புலனாய்வு இயக்குநருக்குத் தானே தாக்குதல் தற்கொலை தாரிகளை அறிமுகம் செய்ததாக. ஆனால் அந்த ஆவணப்படம் வெளிவந்த பின்னரும் அதே புலனாய்வு இயக்குநரே அந்தப் பதவியில் தொடர்கிறார். அது பற்றிய எந்த பரபரப்பும் இல்லாமல் விசாரணைக்கான குழு ஒன்றை நியமித்துவிட்டு ஜனாதிபதி ரணில் ‘கூலாக’ வெளிநாடு சென்றுவிட்டார். ஆனால் இங்கோ, பாராளுமன்றிலும் வெளியிலும் ஒவ்வொருவரும் தத்தம் விருப்பு வெறுப்புக்களுக்கு அமைவாக பேசிக்கொண்டிருக்கின்றனர்.

அதில் உச்சக்கட்டமாக, இராணுவத் தளபதியாக இருந்து யுத்தத்தை நடத்தி முடித்துவைத்த இன்றைய எம்.பியான சரத் பொன்சேகாவோ, தாக்குதலின் சூத்திரதாரிகள் மைத்திரியும் கோட்டாபயவும்தான் என்கிறார்.

மறுபுறத்தில் முன்னாள் ஜனாதிபதியான மைத்திரிபால சிறிசேனவோ, இராணுவத்தளபதியாக இருந்தபோது இராணுவ தலைமையகத்தையே பாதுகாக்க முடியாதவர் சரத் பொன்சேகா என்பதோடு மாத்திரமல்லாமல், இராணுவ தலைமையகம் தாக்குதலுக்குள்ளானபோது பொன்சேகாவை ஒரு வாகனத்திலும் அவரது வயிற்றுப்பாகத்தை மற்றுமொரு வாகனத்திலுமே கொண்டு போகவேண்டிவந்தது என்றும் பாராளுமன்றில் பேசியிருக்கிறார்.

ஆக, குழந்தைப்பிள்ளைகளிடம் ஒரு கதையைச் சொன்னால் அவர்கள் எப்படி நடந்து கொள்வார்களோ அதுபோலவே நமது எம்.பிக்கள் - தலைவர்கள் பாராளுமன்றில் நடந்துகொள்கின்றார்கள்.

உயிர்த்த ஞாயிறு தாக்குதலுக்கு முன்னர், தற்கொலை குண்டுதாரிகள் ஏழு பேரும் எதற்காக தமது உயிர்களை தற்கொடை செய்கின்றோம் என்பது தொடர்பாக அவர்கள் உறுதியெடுத்துக்கொள்வதை வீடியோவாக பதிவு செய்து வைத்திருந்தனர். அவர்கள் தங்கியிருந்த இடம் பொலிஸாரால் முற்றுகையிடப்பட்டபோது அந்த வீடியோ முழுமையாக கைப்பற்றப்பட்டிருந்தது.

அதுபற்றி இதுவரை பல்வேறு கோணங்களிலும் இந்தப் பத்தியில் எழுதியாகிவிட்டது.

பாராளுமன்றில் எப்போதும் சரியான வாதங்களை முன்வைக்கின்ற எம்.பிக்களில் நளின் பண்டார முக்கியமானவர். ஆனால் அவர் கூட, பிரதான தற்கொலை தாரி சஹ்ரானின் மனைவியின் வாக்குமூலத்தில் இந்தியாவிலிருந்து ஒருவர் அடிக்கடி சஹ்ரானுடன் தொடர்புகொண்டதாக சாட்சியமளித்திருந்ததைக் குறிப்பிட்டு அந்த நபர் பற்றி ஏன் விசாரணை நடத்தப்படவில்லை என்று கேள்வி எழுப்பியிருந்தார்.

ஆனால் இன்று வரை யாரும் ஒரு முக்கியமான விடயத்தை கேள்வி கேட்டதாக தெரியவில்லை.

இந்த தாக்குதல் பற்றிய தகவலை முன்கூட்டியே இந்திய உளவுத்துறை இலங்கைக்கு தெரிவித்திருந்தது. தாக்குதல் எங்கு நடைபெறும் என்பதைக் கூட துல்லியமாக தெரிவித்திருந்தது. அதனைத் தடுக்க நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்பது வேறு சங்கதி. ஆனால் அத்தகைய துல்லியமான தகவலை கேரளாவில் கைது செய்யப்பட்ட முஸ்லிம் தீவிரவாதி ஒருவர் மூலமே இந்தியா பெற்றிருந்ததாகவும் சில தகவல்கள் தெரிவித்திருந்தன. ஆனால் இன்றுவரை இலங்கைப் புலனாய்வாளர்கள் அந்த இந்தியாவில் கைது செய்யப்பட்டு தடுப்பில் இருக்கும் முஸ்லிம் தீவிரவாதியை விசாரணை செய்யவேண்டும் என்று முயற்சி எடுக்காததை இதுவரை யாரும் கேள்விக்கு உட்படுத்தியதாக தெரியவில்லை.

இந்த இலட்சணத்தில் தொடர்ந்து விசாரணை குழுக்கள் அமைக்கப்படுவதில் எதுவித பயனும் ஏற்படப்போவதில்லையே.!

- ஊர்க்குருவி.

# இறுதிப்போர் தொடர்பில் சனல் 4 வெளியிட்ட காணொலி குறித்தும் சர்வதேச விசாரணை!

## சாள்ஸ் நிர்மலநாதன் எம்.பி. கோரிக்கை

கொழும்பு, செப். 24

“2009 ஆம் ஆண்டுக்கு முன்னர் கொழும்பில் இடம்பெற்ற ஒரு சில தற்கொலை குண்டு தாக்குதல்கள், கிளைமோர் தாக்குதல்கள் என்பன ராஜபக்ச அரசின் புலனாய்வு பிரிவின் ஆதரவுடன் இடம்பெற்ற சம்பவங்களாகும். ஆனால் அவை புலிகள் அமைப்பின் கணக்கில்போடப்பட்டன. சம்பந்தப்பட்ட குடும்பங்கள் இன்று இதனை உணர ஆரம்பித்துள்ளன. முன்னாள் அமைச்சர்கள்கூட இராணுவ புலனாய்வு பிரிவின் உதவியுடன் தென்பகுதியில் வைத்து கொலை செய்துள்ளனர். அந்த பழியும் புலிகள்மீது போடப்பட்டது. இதுதான் வரலாறு.”

- இவ்வாறு வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சார்ள்ஸ் நிர்மலநாதன் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று முன் தினம் நடைபெற்ற உயிர்த்த ஞாயிறு தாக்குதல் மற்றும் தற்போதைய தேசிய பாதுகாப்பு தொடர்பான ஒத்திவைப்பு விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர், மேலும் கூறியவை வருமாறு-

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் சம்பவம் இடம்பெற்ற பின்னர் , “நான் பாதுகாப்பு அமைச்ஷின் செயலாளராக இருந்திருந்தால் இந்த தாக்குதல் நடத்திருக்காது.” என்று கோட்டாபய அறிக்கை வெளியிட்டிருந்தார். அதன்பிற்பாடு “நான் ஜனாதிபதியாக வந்தால் மக்கள் அச்ச உணர்வு இன்றி வாழலாம்.” எனவும் அறிக்கை விடுத்திருந்தார். எனவே, தாக்குதல் சம்பவத்தின் பின்னணி செயற்பட்டது யாரென்பது அனைவருக்கும் தெரியும். ராஜபக்ஷ குடும்பம் ஆட்சியை பிடிப்பதற்காக செய்த முயற்சிதான் இது.

21/4 தாக்குதலுக்கு முன்னதாக வவுனதீவில் இரு பொலிஸ் அதிகாரிகள் கொல்லப்பட்டு ஆயுதமும் பறிமுதல் செய்யப்பட்டிருந்தது. இந்த செயலை முன்னாள் போராளிகள் செய்தனர் என இலங்கையின் புலனாய்வு பிரிவு உறுதி செய்து, கைதுகள்கூட இடம்பெற்றிருந்தன. அப்போது இச்சம்பவத்துடன் முன்னாள் போராளிகள் தொடர்புபடவில்லை, அது தொடர்பில் விசாரணை நடத்துமாறு கோரியிருந்தேன்.

இதேபோல 2009 ஆம் ஆண்டுக்கு முன்னர் கொழும்பில் நடைபெற்ற சில சம்பவங்கள் கூட புலிகளின் கணக்கில் போடப்பட்டது. தாங்கள் ஆட்சி செய்வதற்காக யாரை வேண்டுமானாலும் கொல்வார்கள், என்ன வேண்டுமானாலும் செய்வார்கள், இதுதான் அவர்களின் வரலாறு.

அரசியல் கைதிகளிடம்கூட இவர்கள் பலவந்தமாக வாக்குமூலம் பெற்றிருப்பார்கள். ஒரு சில தமிழ் அரசியல் கைதிகள் விடுதலை செய்யப்பட்டுள்ளனர். எனவே, ஏனையோரும் விடுதலை செய்யப்பட வேண்டும். அவர்கள் மீது போலி குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டிருக்கலாம். மீள் விசாரணை இடம்பெற வேண்டும்.

அதேவேளை, உயிர்த்த ஞாயிறு தாக்குதல் சம்பவம் தொடர்பில் சனல் - 4 வெளியிட்டுள்ள காணொளி தொடர்பில் மட்டும் அல்ல, இறுதிப்போர் தொடர்பில் சனல் 4 வெளியிட்ட காணொளி தொடர்பிலும் சர்வ தேச விசாரணை நடத்தப்பட வேண்டும்-என்றார். (அ)

# உள்ளக விசாரணைகளில் உண்மைகள் வெளிவராது

## ரஞ்சித் மத்தும பண்டார சுட்டிக்காட்டு

கொழும்பு, செப். 24

உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல் தொடர்பாக உள்நாட்டில் விசாரணைகள் நடைபெற்றால் ஒருபோதும் உண்மைகள் வெளிவராது என பாராளுமன்ற உறுப்பினர் ரஞ்சித் மத்தும பண்டார தெரிவித்தார்.

இவ்விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்-

ஆஸாத் மௌலானா என்பவர் யார்? பிள்ளையானின் செயலாளர். அவர் நாட்டை விட்டு செல்லும்வரை பிள்ளையானுடன்தான் இருந்துள்ளார்.

இவர் மொட்டுக் கட்சியுடன் நெருக்கமாக இருந்தவர். அப்போது நல்லவராக தென்பட்டவர். இன்று இவ்வாறான கருத்துக்களை கூறியவுடன் மோசமானவராக பார்க்கப்படுகிறார்.

ஈஸ்டர் தாக்குதலானது வவுணதீவு சம்பவத்துடன் ஆரம்பமாகவில்லை. 2015 ஜனவரி, 8 ஆம் திகதி ஜனாதிபதித் தேர்தலுடன் தான் ஆரம்பமானது.

ஜனவரி 6 ஆம் திகதியன்று, புலனாய்வுப் பிரிவின் பிரதானி சுரேஷ் சாலே, மக்கள் எதிர்ப்பார்க்கும் முடிவு வாராவிட்டால் மக்கள் வீதிக்கு இறங்குவார்கள். எனவே, அவசர காலச்சட்டத்தை நடைமுறைப்படுத்துமாறு தெரிவித்தார்.

ஆனால், அன்று அப்படி எந்தவொரு அசம்பாவிதமும் நடக்கவில்லை. இங்கிருந்துதான் ஈஸ்டர் தாக்குதலுக்கான சூழ்ச்சி ஆரம்பமானது.

லசந்த விக்கிரமதுங்க, தாஜுதீன், பிரகீத் ஹெக்னெலிகொட கொலை வழக்குகளை நாம் விசாரணை செய்தோம்.

புலனாய்வுப் பிரிவின் சிலரை கைது செய்து நீதிமன்றில் நிறுத்தினோம். சுரேஷ் சாலேயையும் நீதிமன்றில் நிறுத்தினோம். கோட்டாபயவை கைது செய்யுமாறும் தெரிவிக்கப்பட்டது.

இதனால் இவர்களுக்கு சிக்கல் வந்தது. எனவே, சர்வதேச புலனாய்வுப் பிரிவினரின் உதவியுடன் இந்த விசாரணைகளை செய்ய வேண்டும்.

உள்நாட்டில் விசாரணை நடைபெற்றால் ஒருபோதும் உண்மை வெளிவராது-என்றார். (அ)

# இலங்கைப் படகு கரை ஒதுங்கியது

சென்னை, செப். 24

கோடியக்கரையில் இலங்கை படகு கரை ஒதுங்கியது. அந்த படகை கைப்பற்றி உளவுத்துறை பொலிஸார் விசாரணை நடத்தி வருகின்றனர்.

நாகை மாவட்டம் கோடியக்கரை கடற்கரை பகுதியில் சந்தல் வாய்க்கால் உள்ளது. இந்த வாய்க்கால் அருகே கடற்கரையில் இருந்து 100 மீற்றர் தொலைவில் கடலில் கவிழ்ந்து மூழ்கிய நிலையில் ஒரு பைபர் படகு கரை ஒதுங்கி கிடப்பதாக அந்த பகுதியை சேர்ந்த மீனவர்கள் வேதாரண்யம் கடலோர காவல் குழும பொலிஸாருக்கு தகவல் தெரிவித்தனர்.

தகவல் அறிந்ததும் கடலோர காவல் குழும துணை பொலிஸ் அலுவலர் சுந்தர், இன்ஸ்பெக்டர் ஜோதி முத்துராமலிங்கம் மற்றும் போலீசார் சம்பவ இடத்திற்கு சென்று அந்த பகுதி மீனவர்களின் உதவியுடன் கரை ஒதுங்கி கிடந்த படகை டிராக்டர் மூலம் கயிறு கட்டி கரைக்கு இழுத்து வந்தனர். பின்னர் அந்த படகை வேதாரண்யம் கடலோர காவல் நிலையத்துக்கு கொண்டு வந்து விசாரணை நடத்தினர்.

விசாரணையில், அந்த படகு இலங்கையை சேர்ந்தது என்பது தெரிய வந்தது. மீனவர்கள் மீன் பிடித்தபோது அந்த படகு உடைந்து கவிழ்ந்ததா? அல்லது இலங்கையில் கடற்கரையில் கட்டி வைத்து இருந்தபோது காற்றின் வேகத்தில் தானாக அறுத்துக்கொண்டு வந்ததா? அல்லது கடத்தல் காரர்கள் வந்த படகா? என பல்வேறு கோணங்களில் பொலிஸார், கியூ பிராஞ்ச் பொலிஸார் மற்றும் உளவுத்துறை பொலிஸார் தீவிரமாக விசாரணை நடத்தியதில் கரை ஒதுங்கியப் படகு இலங்கை கிளிநொச்சி பகுதியைச் சேர்ந்தது என தெரியவந்தது. இயந்திரம் இல்லாமல் இருந்த படகு இருபுறமும் உடைந்து காணப்பட்டது. ஒரு போத்தலில் பெட்ரோல், மரத்துண்டு, கயிறு மற்றும் உருளை வடிவிலான மிதவையும் இருந்தது. கோடியக்கரையில் இலங்கை படகு கரை ஒதுங்கிய சம்பவம் அந்த பகுதியில் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

ஈழநாடு



# மக்களின் சுதந்திரத்தை இல்லாதொழிக்க சமூக ஊடகங்களை அடக்குகின்றது அரசு!

## சஜித் பிரேமதாஸ குற்றச்சாட்டு

கொழும்பு, செப். 24

**"அரசாங்கம் எல்லா சந்தர்ப்பத்திலும் மக்களின் சுதந்திரத்தை இல்லா தொழிக்க முயற்சிக்கின்றது. அதன் புதிய போக்கே சமூக ஊடகங்கள் மற்றும் சமூக ஊடக வலையமைப்புகளை கட்டுப்படுத்துவது. "நிகழ் நிலைக் காப்பு" என்ற வார்த்தை முன் வைக்கப்பட்டு, சமூக ஊடகங்களின் உரிமை அரசாங்கத்தால் கையகப்படுத்தப்பட்டு ஊடகங்களை ஒடுக்கும் செயல்பாட்டுக்கான முனைப்பு நடைபெறுகிறது"**

-இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்தார்.

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ நேற்று தெவிநுவர மீன்பிடித் துறைமுகத்திற்கு விஜயம் செய்ததுடன் இங்கு ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

அரசாங்கத்தின் இந்த ஊடக அடக்குமுறையானது பயங்கரவாதம் என்பதால் இதற்கு இடம்கொடுக்கப்போவதில்லை.

ஊடக ஒடுக்குமுறைக்கும் சமூக ஊடகங்களின் கட்டுப்பாட்டிற்கும் எதிராக மக்களுடன் வீதியில் இறங்கிப் போராடுவோம்.

சமூக ஊடகங்களின் நிகழ்ச்சி நிரல்களை ஜனாதிபதி மற்றும் நாட்டின் அரசாங்கத்தின் கைகளில் எடுக்கப் போகும் இந்த முயற்சிகளில் இன்னொரு போராட்டம் உருவாகும். இதன் மூலம் பெரிய பதவிக் கதிரை கூட இழக்கப்படலாம்.

மாளிகைகளில் குளி ரூட்டப்பட்ட அறைகளில் இருந்து கொண்டு இனிமேலும் மக்களிடமிருந்து மறைந்திருக்க முடியாது.

களத்திற்குச் சென்று மீனவர்களின் துன்பத்தை கேட்டறிய வேண்டும். அறைகளுக்குள்



இருந்து கொண்டு ஊடகங்களை அடக்கவும், ஊடக சுதந்திரத்தை அழிக்கவும் ஏற்பாடுகளை செய்வதற்குப் பதிலாக களத்தில் சென்று மக்களின் பிரச்னைகளுக்கு தீர்வு காண வேண்டும்.

ஊடகங்களை ஒடுக்குவதற்கு ஏதேனும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டால் அத்தகைய அரச பயங்கரவாதத்தை எதிர்த்துப் போராடுவ தோடு,எதிர்க்கட்சி ஒருபோதும் இதற்கு இடமளிக்காது.

நமது நாடு ஒரு தீவாக இருந்தாலும்,நாட்டில் மீன் தேவையைப் பூர்த்தி செய்ய முடியாமல் போவதற்கு வெட்கப்பட வேண்டும்-என்றார். (அ)

# நிபா வைரஸ் இலங்கைக்குள் நுழைவதை தடுக்க நடவடிக்கை

கொழும்பு, செப். 24

நிபா வைரஸ் தொற்று இலங்கைக்குள் நுழைவதைத் தடுப்பதற்காக உரிய நோய் கண்காணிப்பு நடவடிக்கைகளை உடனடியாக ஆரம்பிக்குமாறு விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீர, கால்நடை, உற்பத்தி மற்றும் சுகாதாரத் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் வைத்தியர் ஹேமலி கொத்தலாவவுக்கு ஆலோசனை வழங்கியுள்ளார்.

பேராதனையில் உள்ள சுகாதாரத் திணைக்கள அலுவலகத்திற்கு விஜயம் செய்த அமைச்சர், அங்கு நிலைமைகளை ஆராய்ந்த பின்னர் ஊடகங்களுக்கு கருத்து வெளியிடும் போதே இவ்வாறு கூறியுள்ளார்.

இந்தியாவின் பல பகுதிகளிலும் கொடிய நிபா வைரஸ் பரவி வரும் சூழ்நிலையில் பல நாடுகளுக்கு இதுதொடர்பில் எச்சரிக்கைகள் விடுக்கப்பட்டுள்ளன.

நாட்டில் கால்நடை உற்பத்தித் தொழிலைப் பாதுகாப்பதற்கும் பொதுச் சுகாதாரத்துக்கும் மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் தொடர்பில் அமைச்சர் ஆய்வுகளை மேற்கொண்டார்.

நாட்டில் கால்நடை உற்பத்தியை அதிகரிக்க எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் குறித்தும் அமைச்சர் அதிகாரிகளுடன் கலந்துரையாடினார்.

இதன்போது கருத்து தெரிவித்த பணிப்பாளர் நாயகம் ஹேமலி கொத்தலாவ, இந்த நோய் இலங்கைக்குள் நுழைவதற்கான வாய்ப்புகள் மிகக்குறைவாகவே உள்ளது.

குறிப்பாக பன்றிகளால் இந்நோய் பரவக் கூடிய சாத்தியம் காணப்படுவதால், நாட்டில் உள்ள பன்றிகள் வளர்க்கப்படும் இடங்களில் நோய் கட்டுப்பாட்டு நடவடிக்கைகளை நடைமுறைப்படுத்தும் உத்தரவுகளை சுகாதார திணைக்களம் மேற்கொண்டுள்ளதாகவும் கூறியுள்ளார்.

இதேவேளை, பறவைக் காய்ச்சல் நாட்டிற்குள் நுழைவதைத் தடுப்பது போல், நிபா வைரஸ் நாட்டிற்குள் நுழைவதைத் தடுப்பதற்கான அனைத்து நடவடிக்கைகளையும் எடுக்குமாறும் அமைச்சர் அதிகாரிகளுக்கு அறிவுறுத்தினார். (அ)

# கண் வில்லைகளை அவசரமாக கொள்வனவு செய்வதற்கு முயற்சி!

கொழும்பு, செப். 24

சுகாதார அமைச்சு கண் வில்லைகளை அவசரமாக கொள்வனவு செய்வதற்கு முயற்சிப்பதாக சுகாதார மற்றும் சிவில் உரிமைகளுக்கான வைத்தியர்களின் தொழிற்சங்க கூட்டமைப்பு குற்றஞ் சாட்டியுள்ளது.

கொழும்பில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடக வியலாளர் சந்திப்பில் அதன் செயலாளர் வைத்திய நிபுணர் சமல் சஞ்சீவ இந்த குற்றச்சாட்டை முன்வைத்தார்.

இந்த விடயம் தொடர்பில் சுகாதார அமைச்சு உடனடியாக கவனம் செலுத்த வேண்டும் எனவும் அவர் வலியுறுத்தினார்.

சுகாதார அமைச்சு மீண்டும் அவசரமாக கண் வில்லைகளை கொள்வனவு செய்வதற்கு முயற்சிப்பதாக தகவல் வெளியாகியுள்ளது. விலை மனுத் தாக்கல் செய்துள்ள நிறுவனங்களுக்கு குறித்த பணிகளை பகிர்ந்தளிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதாக தெரிய வந்துள்ளது.

எனினும் சத்திர சிகிச்சைகளுக்கான உபகரணங்கள், மயக்க மருந்து மற்றும் இரசாயன ஆய்வு கூடத்துக்கான உபகரணங்களை கொள்வனவு செய்வதற்கு இவ்வாறான முறைமை ஒன்று இல்லை.

அரசியல் தரப்பினர் மாத்திரமின்றி சிறந்த கல்வி தகைமைகளை நிறைவு செய்து சுகாதார அமைச்சில் பணியில் ஈடுபடுகின்ற அதிகாரிகளாலும் மக்கள் பாதிப்படைந்துள்ளதாக சுகாதார மற்றும் சிவில் உரிமைகளுக்கான வைத்தியர்களின் தொழிற்சங்க கூட்டமைப்பின் செயலாளர் வைத்திய நிபுணர் சமல் சஞ்சீவ தெரிவித்தார். (அ)

# அமெ. துணை இராஜாங்க செயலரை சந்தித்து பேசிய அமைச்சர் அலி சப்ரி

கொழும்பு, செப். 24

அமெரிக்காவும் இலங்கையும் பொருளாதார உதவிகள் மற்றும் மனித உரிமைகள் குறித்து கவனம்செலுத்தியுள்ளன.

அமெரிக்காவின் துணை இராஜாங்க செயலாளர் விக்டோரியா நூலண்டுக்கும், வெளிவிகார அமைச்சர் அலி சப்ரிக்கும் இடையில் இது தொடர்பான சந்திப்பொன்று நியூயோர்க்கில் இடம்பெற்றுள்ளது.

அமெரிக்க இராஜாங்க செயலாளர் விக்டோரியா நூலண்ட் அவரது 'எக்ஸ்' செயலி பக்கத்தில் இந்த விடயத்தை குறிப்பிட்டுள்ளார். தற்போது ஐக்கிய நாடுகள் சபையின் பொது சபைக் கூட்டம் இடம்பெற்று கொண்டிருக்கிறது.

அமெரிக்க பொருளாதார உதவி, மனித உரிமைகள் மற்றும் திறந்த இந்தோ - பசிபிக் தொடர்பான அமெரிக்காவின் நிலைமை தொடர்பில், விவாதிக்கப்பட்டதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, இருதரப்பு உறவுகளை மேலும் வலுப்படுத்த இலங்கையும் அமெரிக்காவும் இணைந்து பணியாற்றக்கூடிய பல்வேறு வழிமுறைகள் தொடர்பில், கவனம் செலுத்தியுள்ளதாக வெளிவிவகார

அமைச்சர் அலி சப்ரி தெரிவித்துள்ளார். (அ)

# சீன அரசாங்கத்தினால் இலங்கைக்கு 10,000 ரயில் தண்டவாளம் அன்பளிப்பு

கொழும்பு, செப். 24

சீன அரசாங்கத்தினால் இலங்கைக்கு 10,000 ரயில் தண்டவாளங்கள் வழங்கப்பட்டுள்ளன.

இதனை மஹவ முதல் கொழும்பு வரையிலான ரயில் மார்க்க வளைவுகளுடன் கூடிய இடங்களில் பொருத்த திட்டமிட்டுள்ளதாக ரயில்வே பொது முகாமையாளர் டபிள்யூ. ஏ.டி.எஸ்.குணசிங்க தெரிவித்தார்.

குறித்த பகுதிகளில் திருத்தப்பணிகள் முன்னெடுக்கப் படாவிட்டால், ரயில்கள் தடம் புரளும் சம்பவங்கள் பதிவாகுமெனவும் அவர் கூறினார்.

பிரதான மார்க்கத்தில் திருத்தப் பணிகள் முன்னெடுக்கப்பட்ட பின்னர் கம்பஹாவிலிருந்து யாழ்ப்பாணத்திற்கு மணித்தியாலத்திற்கு 100 கிலோமீட்டர் வேகத்தில் ரயில் போக்குவரத்தை முன்னெடுக்க முடியுமெனவும் ரயில்வே பொது முகாமையாளர் குணசிங்க குறிப்பிட்டார். (அ)

# மானியம் தேவையில்லை என்றால் நெற்கொள்வனவை மேற்கொள்ளலாம்

கொழும்பு, செப். 24

பயிர்ச்செய்கைக்கு தேவையான உரத்தைக் கொள்வனவு செய்வதற்காக அரசாங்கம் வழங்கும் மானியம் தேவையற்றது என விவசாய அமைப்புகள் அறிவிக்குமாயின், அந்த பணத்தின் மூலம் நெற் கொள்வனவை மேற்கொள்ள முடியும் என விவசாய அமைச்சு தெரிவித்துள்ளது.

இலங்கை தேசிய கூட்டு விவசாயிகள் சங்கத்தினருக்கும் விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீரவுக்கும் இடையில் இடம்பெற்ற கலந்துரையாடலின் போது அரசாங்கம் வழங்குகின்ற உர மானியம் தேவையற்றது என அந்த அமைப்பு தெரிவித்துள்ளது.

விவசாயிகள் தமது உற்பத்தி பொருட்களை அதிக விலைக்கு விற்பனை செய்வதற்கு விரும்புவதாக குறித்த சங்கம் வலியுறுத்தியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

எதிர்வரும் பெரும்போகத்திற்கான உரங்களை கொள்வனவு செய்வதற்காக அரசாங்கம் ஏற்கனவே 12 ஆயிரம் மில்லியன் ரூபாவை ஒதுக்கியுள்ளதாக விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.

இதேவேளை, வறட்சி, மழை மற்றும் படைப்புழு தாக்கத்தினால் இதுவரையில் சுமார் 70 ஆயிரம் ஏக்கர் நிலப்பரப்பில் மேற்கொள்ளப்பட்ட விவசாய நடவடிக்கைகள் பாதிப்படைந்துள்ளதுடன், பெரும்போகமும் தோல்வியடைந்தால், உணவுப் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் ஏற்படும் என தெரிவிக்கப்படுகிறது.

இந்தநிலையில், நாட்டில் உள்ள அரிசி கையிருப்பு அடுத்த வருடம் ஜனவரி மாதம் வரை போதுமானது என விவசாய அமைச்சு குறிப்பிட்டிருந்தது. எனவே எதிர்வரும் பெரும்போக அறுவடை மிக முக்கியமானது என விவசாய அமைச்சின் செயலாளர் குணதாச சமரசிங்க குறிப்பிட்டார். (அ)

# நாணய நிதியத்தின் பிரதிநிதிகள் காஞ்சன விஜேசேகரவுடன் சந்திப்பு

கொழும்பு, செப். 24

சர்வதேச நாணய நிதியத்தின் பிரதிநிதிகளுக்கும் மின்சாரம் மற்றும் வலுசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகரவுக்கும் இடையில் சந்திப்பொன்று இடம்பெற்றுள்ளது.

இதன்போது, மின்சாரத் துறையின் மறுசீரமைப்புகள் குறித்த தகவல் தொடர்பு தளத்தை செயல்படுத்தும் திறன், புதுப்பிக்கத்தக்க வலுசக்திக்கான போட்டி ஏல கட்டமைப்புகள் மற்றும் வலுசக்தி திறனுக்கான தொழில்நுட்ப மற்றும் நிதி உதவி குறித்தும் கலந்துரையாடப்பட்டது.

இந்த சந்திப்பில் உலக வங்கியின் வலுசக்தி நிபுணர்கள் மற்றும் மின்சார சபையின் மறுசீரமைப்பு விடயங்களுடன் தொடர்புடைய அதிகாரிகளும் கலந்துகொண்டதாக தெரிவிக்கப்படுகின்றது. (அ)

# சுகாதார அமைச்சு சார் விடயங்களை ஆராய இரண்டு கோபா உப குழுக்கள்!

கொழும்பு, செப். 24

**சுகாதார அமைச்சின் மருந்து கொள்வனவு மற்றும் சேவையாளர்களின் எண்ணிக்கை உள்ளிட்ட முக்கிய விடயங்கள் தொடர்பில் ஆராய்வதற்காக கோபா என்ற அரசாங்க கணக்குகள் பற்றிய குழுவினால் இரண்டு உப குழுக்கள் நியமிக்கப்பட்டுள்ளன.**

அதன் தலைவர் இராஜாங்க அமைச்சர் லசந்த அழகிய வண்ண தலைமையில் பாராளுமன்றில் கோபா குழு கூடிய போது குறித்த உப குழுக்கள் நியமிக்கப்பட்டுள்ளன.

நாட்டில் ஏற்பட்டுள்ள மருந்து தட்டுப்பாடு மற்றும் மருந்துகளை கொள்வனவு செய்வது தொடர்பில் ஆராய்ந்து பரிந்துரைகளை வழங்குவதற்காக நியமிக்கப்பட்டுள்ள முதலாவது உப குழுவின் தலைவராக பாராளுமன்ற உறுப்பினர் திஸ்ஸ அத்தநாயக்க நியமிக்கப்பட்டுள்ளார்.

அத்துடன் இந்த உப குழுவின் ஏனைய உறுப்பினர்களாக பாராளுமன்ற உறுப்பினர்களான, டயானா கமகே, அசோக் அபேசிங்க, ஜயந்த கெட்டகொட மற்றும் ஹரினி அமரசூரிய ஆகியோர் பெயரிடப்பட்டுள்ளனர்.

இதேவேளை, பாராளுமன்ற உறுப்பினர் பிரதீப் உதுகொட தலைமையில் இரண்டாவது உபகுழு நியமிக்கப்பட்டுள்ளது.

இதன் ஏனைய உறுப்பினர்களாக பாராளுமன்ற உறுப்பினர்களான இசுரு தொடங்கொட, விமலவீர திஸாநாயக்க, மஞ்சுள திஸாநாயக்க, வீரசுமன வீரசிங்க மற்றும் முதிதா பிரஷாந்தி ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளனர்.

சுகாதார அமைச்சின் மனித வள முகாமைத்துவம், சுகாதார அமைச்சின் கீழ் உள்ள வைத்தியசாலைகள், நிறுவனங்களின் முகாமைத்துவம் மற்றும் தகவல் தொழில்நுட்பம் தொடர்பான அமைப்புகளில் ஏற்பட்டுள்ள பிரச்சினைகள் உள்ளிட்ட விடயங்களை இந்த உப குழு ஆராயவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இந்த இரண்டு உபகுழுக்களும் எதிர்வரும் நவம்பர் மாதம் 7ஆம் திகதி கோபா குழுவிற்கு அழைக்கப்பட்டு அந்த குழுக்களின் விசாரணைகள் மற்றும் பரிந்துரைகளை ஆராய்ந்து எதிர்காலத்தில் பாராளுமன்றத்தில் அறிக்கை சமர்ப்பிக்கப்படும் என கோபா குழுவின் தலைவர் இராஜாங்க அமைச்சர் லசந்த அழகியவண்ண தெரிவித்துள்ளார்.

# அரச அனுமதியற்ற தராசுகள் கிளிநொச்சி சந்தையில் மீட்பு

கிளிநொச்சி, செப். 24

கிளிநொச்சி மாவட்ட அளவீட்டு அலகுகள், நியமங்கள் மற்றும் சேவைகள் திணைக்களத்தினால் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை கிளிநொச்சி சந்தைப்பகுதியில் திடீர் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது.

இதன் போது சந்தைப்பகுதியிலுள்ள பலசரக்குக் கடைகள், மரக்கறி சந்தைகள், பழக்கடைகள், தேங்காய் விற்பனை இடங்கள், நகைக் கடை போன்ற இடங்களில் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டன.

இப் பரிசோதனையில் அரச அனுமதியற்ற தராசுகள் அளவீட்டு அலகுகள், நியமங்கள் மற்றும் சேவைகள் திணைக்களத்தினரால், கரைச்சி பிரதேச சபையினரின் ஒத்துழைப்போடு கைப்பற்றப்பட்டதோடு, உரிய காலத்தில் அளவீட்டு நியமங்கள் செய்யாத 03 வர்த்தக நிலையங்களுக்கு எதிராக வழக்குகளும் பதிவு செய்யப்பட்டன.

(அ)

# இணையம் ஊடான மோசடி அதிகரிப்பு

கொழும்பு செப். 24

இணையம் ஊடாக இடம்பெறும் மோசடிகள் அதிகரித்து வருவதாக இலங்கை தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப நிறுவனம் தெரிவித்துள்ளது.

கடந்த மாதத்தில் மாத்திரம் இவ்வாறான 150 முறைப்பாடுகள் கிடைத்துள்ளதாக நிறுவனத்தின் சிரேஷ்ட தகவல் பாதுகாப்பு பொறியியலாளர் ஷருக்க தமுனுபொல குறிப்பிட்டார்.

தொழில் பெற்றுத்தருவதாக குறிப்பிட்டு சட்டவிரோதமான முறையில் அடையாள அட்டை, பிறப்புச்சான்றிதழ், கடவுச்சீட்டுகளின் பிரதிகள் மோசடிக்காரர்களினால் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளமையும் கண்டறியப்பட்டுள்ளதாக அவர் கூறினார்.

பொதிகள், பரிசில்கள் தங்களிடம் உள்ளதாகவும், அதனை பெற்றுக்கொள்ளுமாறு குறுஞ்செய்திகளை அனுப்பி நிதி மோசடி செய்யப்பட்டுள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

இவ்வாறான விடயங்கள் தொடர்பில் மிகவும் பாதுகாப்பாக செயற்படுமாறும், தனிப்பட்ட தரவுகளை வெளியிட வேண்டாமெனவும் பொதுமக்களை கேட்டுக்கொள்வதாக சிரேஷ்ட தகவல் பாதுகாப்பு பொறியியலாளர் ஷருக்க தமுனுபொல அறிவுறுத்தினார். (அ)

# தேசிய கடன் உத்தரவாத முகவர் நிலையத்தை நிறுவ நடவடிக்கை

கொழும்பு, செப். 24

தேசிய கடன் உத்தரவாத முகவர் நிலையமொன்றை நிறுவுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக நிதி இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்க தெரிவித்தார்.

ஆசிய அபிவிருத்தி வங்கியுடன் இணைந்து இத்திட்டம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

கடன் மறுசீரமைப்பின் பின்னர் டிசம்பர் மாதமளவில் வர்த்தகர்களுக்கு தேவையான நிதி வசதிகள் வழங்கப்படுமெனவும் அவர் கூறினார்.

இதற்கமைய, தேசிய கடன் உத்தரவாத முகவர் நிலையத்தின் ஊடாக சிறிய மற்றும் நடுத்தர வர்த்தகர்களுக்கு தேவையான நிதி வசதிகள் ஏற்படுத்திக் கொடுக்கப்படுமென நிதி இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்க மேலும் தெரிவித்தார்.

# 70,000 ஏக்கரில் மேற்கொள்ளப்பட்ட விவசாய நடவடிக்கைகள் பாதிப்பு!

கொழும்பு, செப். 24

வறட்சி, மழை மற்றும் படைப்புழு தாக்கத்தினால் இதுவரையில் சுமார் 70 ஆயிரம் ஏக்கர் நிலப்பரப்பில் மேற்கொள்ளப்பட்ட விவசாய நடவடிக்கைகள் பாதிக்கப்பட்டுள்ளதாக விவசாய அமைச்சு தெரிவித்துள்ளது.

நேற்றைய தினம் வரையில் 68 ஆயிரத்து 802 ஏக்கர் நிலப்பரப்பில் மேற்கொள்ளப்பட்ட சிறுபோக நெற் செய்கை பாதிப்படைந்துள்ளதாக தரவுகள் தெரிவிக்கின்றன.

அத்துடன், இதுவரையில் 70 ஆயிரத்து 597 விவசாயிகள் பாதிப்படைந்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

(அ)

# சமுர்த்தி உள்ளிட்ட வங்கிச் சங்கங்களில் நடந்த மோசடிகளில் ரூ. 23 கோடி நட்டம்

கொழும்பு, செப். 24

சமுர்த்தி வங்கி மற்றும் வங்கிச் சங்கங்களில் இடம்பெற்றதாகக் கூறப்படும் 107 மோசடிகள் காரணமாக இருபத்து மூன்று கோடி ரூபாவுக்கும் அதிகமான நட்டம் ஏற்பட்டுள்ளதாக தேசிய கணக்காய்வு அலுவலகம் வெளியிட்டுள்ள சமீபத்திய அறிக்கை தெரிவிக்கிறது.

இந்த ஆண்டு ஏப்ரல் 21 ஆம் திகதி தணிக்கைக்கு சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கைகளின்படி, 2014-2018 காலகட்டத்தில் 15 முறைகேடுகள் மூலம் ஆறு கோடி ரூபாய்க்கும் அதிகமாகவும், 2019 முதல் பெப்ரவரி 2023 வரை 92 முறைகேடுகள் மூலம் 17 கோடி ரூபாய்க்கும் அதிகமாகவும் இழப்பு ஏற்பட்டுள்ளது.

வாடிக்கையாளர் விவகாரங்களைக் கையாள்வதில் வேண்டுமென்றே தவறுகள் மற்றும் நிதி மோசடிகளைக் குறைக்கும் என்று எதிர்பார்க்கப்பட்டாலும், அந்த மோசடிகளில் எந்தக் குறைவும் இல்லை என்று அறிக்கை காட்டுகிறது.

(அ)

# நீரில் மூழ்கி மாணவன் பலி!

கொழும்பு, செப். 24

கம்புறுப்பிட்டிய, சபுகொட பிரதேசத்தில் நீரில் மூழ்கி 13 வயதுச் சிறுவன் உயிரிழந்துள்ளார் என தெரிவிக்கப்படுகின்றது.

மாத்தறை புனித தோமஸ் கல்லூரியில் எட்டாம் தரத்தில் கல்வி கற்கும் தருஷ தினுவர என்பரே இவ்வாறு நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளார்.

இவர் கம்புறுப்பிட்டிய உல்லல்ல பிரதேசத்தில் வசித்து வந்தவர் என்பதுடன், பாடசாலையில் ஹொக்கி பயிற்சியில் ஈடுபட்டதன் பின்னர் நண்பர்களுடன் நீராடச் சென்றபோது நீரில் மூழ்கியுள்ளார்.

நீரில் மூழ்கிய நிலையில், பிரதேசவாசிகளின் தேடுதலில் மூன்று மணித்தியாலங்களின் பின்னரே சடலமாக மீட்கப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

மாணவர் உடனடியாக கம்புறுப்பிட்டிய வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்ட நிலையில், உயிரிழந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டது.(அ)

# ரஷ்யாவிற்கு எதிரான தடைகளை இலங்கை ஒருபோதும் ஆதரிக்காது

கொழும்பு, செப். 24

ரஷ்யாவுக்கு இலங்கை நட்பு நாடாகவே உள்ளதாக ரஷ்யாவுக்கான இலங்கை தூதுவர் ஜனித்த லியனகே தெரிவித்துள்ளார்.

மொஸ்கோவில் இடம்பெற்ற ரஷ்ய - இலங்கை வர்த்தக தரப்பினர்களுக்கு இடையிலான சந்திப்பில் வைத்து இலங்கைத் தூதுவர் இதனை கூறினார்.

இக்கட்டான காலங்களில் ரஷ்யா இலங்கைக்கு வழங்கிய உதவிகள் குறித்தும் இதன் போது அவர் குறிப்பிட்டார்.

உக்ரைன் மீதான ஆக்கிரமிப்பை அடுத்து ரஷ்யா மீதான பொருளாதாரத் தடைகளை மேற்கத்திய நாடுகள் அதிகரித்துள்ள நிலையில் ரஷ்யாவிற்கு எதிரான பேச்சுக்களையும் பொருளாதார தடைகளையும் இலங்கை ஆதரிக்காது என்றும் அவர் வலியுறுத்தினார். (அ)

# துப்பாக்கிச் சூட்டு சம்பவங்களில் இந்த வருடம் 44 பேர் உயிரிழப்பு!

கொழும்பு, செப். 24

இந்த ஆண்டின் இதுவரையான காலப்பகுதியில் இடம்பெற்ற துப்பாக்கி சூட்டு சம்பவங்களில் மொத்தமாக 44 பேர் பலியாகியுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் நிஹால் தல்துவ தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப் பொன்றில் கலந்து கொண்ட போதே அவர் இதனை கூறினார்.

இது தொடர்பில் தொடர்ந்தும் கருத்துவெளியிட்ட அவர், இந்த சம்பவங்களில் பெரும்பாலானவை திட்டமிட்ட குற்றங்களை முன்னெடுக்கும் கும்பல்களின் உறுப்பினர்களால் மேற்கொள்ளப்பட்ட பழிவாங்கும் தாக்குதல்கள் என கண்டறியப்பட்டுள்ளதாக குறிப்பிட்டார்.

(அ)

# வேட்புமனுக்களை இரத்து செய்ததால் அரசுக்கு ஒரு பில்லியன் ரூபா நட்டம்

கொழும்பு, செப். 24

உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கான வேட்புமனுக்களை இரத்து செய்வதற்கு அண்மையில் எடுக்கப்பட்ட தீர்மானத்தினால், 1 பில்லியன் ரூபாவிற்கும் அதிகமான நஷ்டம் ஏற்பட்டுள்ளதாக, பவ்ரல் அமைப்பு தெரிவித்துள்ளது.

இந்த விடயம் தொடர்பில் பவ்ரல் அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் ரோஹன ஹெட்டியாராச்சி கருத்து தெரிவிக்கையில்,

நாடு பொருளாதார நெருக்கடியில் சிக்கியுள்ள வேளையில் இது தொடர்பான தீர்மானம் அரசாங்கத்தினால் எடுக்கப்பட்டிருக்க வேண்டிய ஒன்றல்ல. இதுபோன்ற முடிவுகளை எடுப்பதால் அரசுக்கு ஏற்படும் இழப்புக்கு யார் பொறுப்பேற்கப் போகிறார்கள்?

தற்போது தேர்தல் நடைபெறவில்லை என்றாலும், உள்ளூராட்சித் தேர்தலை ஒரு கட்டத்தில் நடத்தியே ஆகவேண்டும்.

2023 ஆம் ஆண்டு நடைபெறவுள்ள உள்ளூராட்சி சபைத் தேர்தலுக்காக, வாக்குச் சீட்டு அச்சிடுதல் உட்பட, இலங்கைத் தேர்தல்கள் ஆணைக்குழு ஏற்கனவே பெரும் தொகையை செலவிட்டுள்ளது - என்றார்.

(அ)

ஈழநாடு
Eelanadu
24.09.2023 ஞாயிற்றுக்கிழமை
பிலவ வருடம், புரட்டாதி 07

**“ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்”**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

# தீர்வுக் கதைகளுக்கு என்ன நடந்தது?

சில மாதங்களாக அரசியல் தீர்வு தொடர்பில் கடும் வாதப்பிரதிவாதங்கள் இடம்பெற்றன. இந்தியப் பிரதமருக்கு கடிதம் அனுப்புவதிலிருந்து - பின்னர், 13 தீண்டத்தக்கதென்று ஒரு சாராரும் மறுபுறம் - இன்னொரு மிகச் சிறியதரப்போ - இல்லை, அதனை தீண்டவே கூடாதென்றும், பலவாறான விவாதங்களில் ஈடுபட்டிருந்தனர். ஊடகங்களிலும் 13 ஆதரவு, 13 எதிர்ப்பு என்னுமடிப்படையிலேயே ஆய்வுகள் இடம்பெற்றன. ஆனால் இப்போது அரசியல் தீர்வுக் கதைகள் அனைத்தும், பழங்கதையாகிவிட்டது. அது பற்றி எவரும் பேசுவதில்லை.

இந்தப் பின்புலத்தில் சி.வி.விக்னேஸ்வரன் ஒருவர்தான் இப்போது அது பற்றி பேசிக்கொண்டிருக்கின்றார். அவர் ஒருவராவது பேசுகின்றாரே என்று நாம் மகிழ்ச்சியடையலாம். இலங்கை அரசியலானது, எப்போதும் விசித்திரங்கள் நிறைந்த ஒன்றாகவே காட்சியளிக்கின்றது. அலாவுதீனும் அற்புத விளக்கும் கதையில் வருகின்ற ‘திறந்திடு சீசே’ என்பது போல், இங்கும் புதிது புதிதான சீசேக்கள் காலத்திற்கு காலம், திறக்கின்றன.

பின்னர் அந்தக் காட்சிகளோடு, நமது அரசியல்வாதிகள் மல்லுக்கட்டிக் கொள்கின்றனர். மோசமானதொரு பொருளாதார நெருக்கடிக்குள் சிக்கிக்கிடந்த இலங்கைத் தீவு மெதுவாக நிமிர முயற்சிக்கின்றது. கோட்டாபய ராஜபக்ஷவிற்கு எதிரான சிங்கள மக்களின் கிளர்ச்சியை தொடர்ந்து, ஆட்டம் கண்டுபோன அரசாங்கம் இன்னும் ஓர் ஒழுங்கிற்கு வரவில்லை. இவ்வாறானதொரு சூழலில் அடுத்த ஆண்டு ஜனாதிபதி தேர்தல் ஒன்றுக்கு முகம் கொடுக்க வேண்டியிருக்கின்றது. இப்போது, புதிய கதையொன்றுக்குள் அனைவரும் மூழ்கிக்கிடக்கின்றனர். அந்தக் கதையின் உண்மைத் தன்மையை கண்டறிய சர்வதேச விசாரணையொன்று தேவையென்னும் வாதங்கள் தென்பகுதியிலிருந்து முன்வைக்கப்படுகின்றன.

ஒரு மேற்குலக ஊடகம் நினைத்தால், ஒரு சிறிய மூன்றாம் உலக நாட்டை நிலைகுலையச் செய்ய முடியுமென்பதற்கு மிகவும் சமீபத்தைய உதாரணம்தான் சனல் - 4 காணொலி. ஆனால் ஓர் இந்திய ஊடகமோ அல்லது தென்கிழக்காசிய ஊடகத்திலோ மேற்குலக நாடொன்றைப் பற்றி இவ்வாறானதொரு காணொலி வெளியாகியிருந்தால் அதனை வெறும் திரைப்படமாகவே மேற்குலக மக்கள் பார்த்திருப்பார்கள். ஆனால் இலங்கையை ஒரு காலத்தில் காலனிய மேலாதிக்கத்திற்குள் வைத்திருந்த பிரித்தானியாவின், ஊடகமொன்று வெளியிட்ட காணொலியுடன் இலங்கை மல்லுக்கட்டிக் கொண்டிருக்கின்றது.

இந்த மல்லுக்கட்டலை கொடுப்புக்குள் சிரித்தவாறு ரணில் ரசித்துக் கொண்டிருக்கின்றார். ஏனெனில் ரணிலுக்கு தெரியும் இங்கு எதுவும் நடக்கப் போவதில்லை. அனைத்தையும் அனைவருமே ஒரு கட்டத்துடன் கைவிட்டு, இன்னொரு புதிய பிரச்னைக்குள் வேகமாக மூழ்கிவிடுவார்கள். தென்னிலங்கை அரசியல்வாதிகள்தான் வாக்குகளை இலக்கு வைத்து சனல் - 4 காணொலியுடன் மல்லுக்கட்டிக் கொண்டிருக்கின்றனர் என்றால், தமிழ் அரசியல்வாதிகளும் அரசியல் தீர்வுக்கான முயற்சிகளை விடுத்து, சனல் - 4 காணொலியை முன்வைத்து விவாதித்துக் கொண்டிருக்கின்றனர். இந்த இடத்தில்தான் விக்னேஸ்வரன் அரசியல் தீர்வு விடயத்தை தனித்து வலியுறுத்தி வருகின்றார். அதேவேளை, அண்மையில் விக்னேஸ்வரன் இந்திய பிரதமர் மோடியை சந்திப்பதற்கான முயற்சி தொடர்பிலும் பேசியிருந்தார். இந்த முயற்சியும் வரவேற்கக் கூடியதொன்று ஆனால் தமிழ் அரசியல்வாதிகளோ சனல் - 4 போதை தலைக்கேறியவர்களாக, எது குறித்தும் சிந்திக்க முடியாதவர்களாக இருக்கின்றனர்.

# ஈஸ்டர் தாக்குதலுக்கு மைத்திரியும் ரணிலுமே பொறுப்பு கூறவேண்டும்

## வலியுறுத்துகிறார் அநுரகுமார



கொழும்பு, செப். 24

ஈஸ்டர் தாக்குதலுக்கான பொறுப்பை முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவும், முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவும் ஏற்கவேண்டும் என பாராளுமன்ற உறுப்பினரும் ஜே.வி.பியின் தலைவருமான அனுர குமார திசநாயக்க குற்றம் சுமத்தியுள்ளார்.

பாராளுமன்றத்தில் நேற்று கருத்துரைக்கும் போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

அதிகாரிகள் யாரேனும் கடமைகளை செய்யாவிட்டால் நாடாளுமன்றுக்கு அவர்கள் அறிவித்திருக்க வேண்டும்.

இதன் பின்னணியில் அரசியல் காரணம் தான் உள்ளது.

2015 இல் இல்லாது போன அதிகாரத்தை மீண்டும் கைப்பற்ற ராஜபக்ஷக்கள் முயற்சித்தார்கள்.

மீண்டும் புலிகள் வரப் போவதாகக் கூறினார்கள். ஆனால், 2017 இற்கு பின்னர் அந்தக் கதை அப்படியே மறைந்து விட்டது.

இதன் பின்னர், முஸ்லிம் சமூகத்தை இலக்கு வைத்தார்கள். சிங்கள மக்களுக்காக கருகலைப்பு கொத்து வழங்கப்பட்டதாகக் கூறினார்கள்.

கருக்கலைப்புச் செய்யும் ஆடை உள்ளதாகக் கூறினார்கள். எங்கே இப்போது இவைகள் எல்லாம்?

முஸ்லிம்கள் பெரும்பான்மையாக மாறிவிடுவார்கள் என்றும்கூட பிரசாரம் செய்தார்கள்.

சனல் 4 ஆவணப்படம் தொடர்பாக அரசாங்கத்தின் நிலைப்பாடு என்ன?

இதுதொடர்பாக கேட்டால் ராஜபக்ஷக்களுடன் சனல் 4 இற்கு கோபம் உள்ளதாகக் கூறுகிறார்கள்.

நியூயோர்க் ரைம்ஸ் பத்திரிகையும் தானே செய்தி வெளியிட்டது. அப்படியென்றால் இந்தப் பத்திரிகையும் இவர்களுடன் பகையில் தானா உள்ளது?

நிரூபமா ராஜபக்ஷ தொடர்பாக பண்டோரா ஆவணங்கள் வெளியிடப்பட்டன. இந்த ஆவணத்தை வெளியிட்ட சர்வதேச நிபுணர்களும் ராஜபக்ஷவினருடன் கோபத்திலா உள்ளார்கள்?

எனவே சனல் 4, ராஜபக்ஷக்களுடன் பகை எனக் கூறுவது, உண்மையை மறைக்க எடுக்கப்படும் நட வடிக்கையாகவே கருதப்படுகிறது - என்றார். (அ)

# ஈஸ்டர் தாக்குதலினால்தான் கோட்டாபய ஆட்சிக்கு வந்தார் என்பதை ஏற்கமுடியாது

## கூறுகிறார் டிலான் பெரேரா

கொழும்பு, செப். 24

ஈஸ்டர் தாக்குதலினால் தான் கோட்டாபய ராஜபக்ஷ ஆட்சிக்கு வந்தார் என்பதை என்னால் ஏற்றுக் கொள்ள முடியாது என பாராளுமன்ற உறுப்பினர் டிலான் பெரேரா தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக் கையில்-

இன்று எமது நாட்டில் மீண்டும் இனங்களுக்கிடையில் விரிசலை ஏற்படுத்தும் செயற்பாடுகள் நடக்க ஆரம்பித்துள்ளன.

225 பாராளுமன்ற உறுப்பினர்களும் இதற்கு பதில் கூறவேண்டும். இன்று பௌத்தத்தை வைத்து அரசியல் செய்வது அதிகரித்துள்ளது.

எவ்வளவு தூரத்திற்கு என்றால், புத்தப் பெருமான் பிறந்ததே இலங்கையில் தானாம். புத்தப்பெருமான் இங்கா பிறந்தார்?

ஈஸ்டர் தாக்குதல் தொடர்பாக மட்டும் பேசிக் கொண்டிருக்காமல், இனிமேல் இவ்வாறான தாக்குதல் ஒன்று இடம்பெறாமல் இருக்க அனைவரும் செயற்பட வேண்டும்-என்றார். (அ)

# பாடசாலை சிற்றுண்டிச்சாலைகள் குறித்து விசேட வேலைத்திட்டம்

கொழும்பு, செப். 24

பாடசாலை சிற்றுண்டிச்சாலைகளின் விதிமுறைகளை கடுமையாக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக இலங்கை பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

இலங்கை பொது சுகாதார பரிசோதகர்கள் சங்கம் விடுத்துள்ள அறிக்கையில் குறித்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன்படி, பாடசாலை சிற்றுண்டிச் சாலைகளில் பயன்படுத்தக்கூடிய உணவு வகைகளின் தரங்கள் குறித்து கடுமையான ஆய்வு நடத்தப்படும் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது. (அ)

# ரயில் கட்டணங்களில் மாற்றம்!


கொழும்பு, செப். 24

ரயில் கட்டணங்கள் அதிகரிக்கப்பட உள்ளதாக ரயில் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதேவேளை ரயில்வே திணைக்களத்தை அதிகாரசபையாக மாற்றியதன் பின்னர் அனைத்து ரயில் கட்டணங்களை அதிகரிப்பது மற்றும் பயண பற்றுச்சீட்டு வழங்குவது குறித் தும் போக்குவரத்து அமைச்சு கவனம் செலுத்தி யுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் தற்போதுள்ள குறைந்தபட்ச கட்டணமான 20 ரூபாவில் இருந்து பஸ் கட்டணத்திற்கு இணையாக அதிகரிக்க அமைச்சு அதிகாரிகள் முன்மொழிந்துள்ளதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது. (அ)

# அப்புக்குட்டி அண்ணையின் ‘டவுட்’



பகிர்வு -96

# எம்.எஸ். என்னும் உயர்ந்த கோபுரம்

**கணபதி சர்வானந்தா**

எம்.எஸ்.சுப்புலட்சுமி பாடிய மீரா பஜன்கள் பிரபலமானவை. கண்மூடிக் கேட்டுக் கொண்டே இருக்கலாம். மனதை ஒரு வழிப்படுத்த உதவும் அவ் பஜன்களைப் பல முறை கேட்டு மன மனமகிழ்ந்திருக்கிறேன். அது ஒரு ஆனந்த அனுபவம். பக்தி மார்க்கத்துக்கூடாக நான் பெற்ற சுப அனுபவமும் அதுவே.

இந்தியில் வெளியான மீரா பஜன்கள் இந்தி ரசிகர்களிடையே சுப்புலட்சுமிக்கு அங்கீகாரத்தை ஏற்படுத்தித் தந்தது. அதே போல கேதாரி நாத்திலிருந்து கன்னியாகுமரி வரையான பக்தர்களையும் இவரது ஆன்மீகக் குரல் பரவசப்படுத்தியது.

“இந்தியா இந்த தலைமுறையில் ஓர் மாபெரும் கலைஞரை உருவாக்கியுள்ளது என்பதில் நீங்கள் பெருமிதம் கொள்ளலாம்” என எம். எஸ். சுப்புலட்சுமியைப் பற்றி சரோஜினி நாயுடு ஒருமுறை கூறியிருப்பதாகத் தகவல் உண்டு.

சுப்ரபாதக் குரல்... சுகந்தக் குரல்... தெய்வீகக் குரல் ‘காற்றினிலே வரும் கீதம்’ என்று தென்றலாக வந்த காந்தர்வக் குரல்! - இசையரசி எம்.எஸ்.சுப்புலட்சுமியின் பிறந்தநாள் ஸ்பெஷலாக இந்து தமிழ் திசை பத்திரிகை ஒரு கட்டுரையை வெளியிட்டு அவரைப் பாராட்டியிருந்தது.

குரலுக்கும் பாடலுக்கும் தொடர்பு உண்டு. ஒரு பாடலை, குரல் வழியே பாவங்களுடன் பாடுகிற போது, கேட்பவர்கள் கிறங்கித்தான் போகிறோம். அதேபோல், பாடலானது குரல் வழியே வெளியே வரும் போது முகத்தில் ஏற்படுகிற பாவங்களிலும் இன்னும் கரைந்துபோகிறோம். நாம் மட்டுமா என்ன...? இறைவனே பாடலைக் கேட்டு மெய்ம்மறந்த கதையெல்லாம் புராணங்களில் உண்டு. புராணத்தில் மட்டுமா? கலியுகத்திலும் நடந்திருக்கிறது. அவரின் இசைக்கு, அந்த காந்தர்வக்குரலுக்கு இறைவனே மெய்சிலிர்த்துத்தான் போவான். அந்த மதுரக்குரலின் நாயகி... எம்.எஸ்.சுப்புலட்சுமி.

இசைக்கு வசமாகாதவர்கள் எவருமே இல்லை. தலைமுறைகள் கடந்தும் ரசிகர்களின் மனங்களையும் செவிகளையும் தன் குரலால், எண்ணற்ற பாடல்களால் ஆற்றுப்படுத்தியவர் எம்.எஸ். சுப்புலட்சுமி. நூற்றுக்கு தொண்நூறு பேரின் செல்போன்களில், அவரின் ஒரு பாடலாவது நிச்சயம் பதிவிறக்கம் செய்யப்பட்டிருக்கும். இன்னும் பெரும்பாலோர், தமது தொலைபேசி “றிங் ரோனாக, டயலர் ரியூனாக” இவருடைய பாடல்களைத்தான் வைத்திருக்கிறார்கள். நம் துன்பத்தையெல்லாம் கரைந்து போகச் செய்கிற யாழிசைக் குரல் அவருக்கு!

1944-ம் ஆண்டு நான்கு நிகழ்ச்சிகள் மூலம் இரண்டு கோடி ரூபாய் நிதியைத் திரட்டி பொதுப்பணிகளுக்கு வழங்கினார். இந்நிதி மருத்துவம், அறிவியல், ஆராய்ச்சி, கல்வி மற்றும் சமயத்தொண்டு ஆகியவற்றுக்காக செலவிடப்பட்டது. அவ்வாறான பொது நலம் மிக்க இசைத்துறை ஆளுமையான எம்.எஸ். அவர்கள் இசைத்துறையின் மாமேதை என்று இன்றும் போற்றப்படுகிறார்.

சுப்புலட்சுமிக்கு அவரது தாயாரே முதலில் குருவானார். இன்னிசை வீணையுடன் சேர்ந்து பாடி வந்த அவர் இசையில் வெகுவிரைவில் புகழ் பெற்றார். சுப்புலட்சுமிக்கு எட்டு வயது இருக்கும்போது சென்னை ஆளுநர், சண்முகவடிவின் வீணை இசையை ஒளிப்பதிவு செய்யச் சென்றார். அப்போது சிறுமியாக இருந்த மகளையும் பாடச் சொன்னார். சிறுமி சிறிதும் தயங்காமல் “மரகத வடிவம்” என்ற செஞ்சுருட்டி இராகப் பாடலை உச்சஸ்தாயியில் பாடினார். இதைக் கேட்ட ஆளுநர் ஆச்சரியமடைந்து அப்பாடலையும் ஒளிப்பதிவு செய்து கொண்டார்.

அவளுக்கு அப்போ வயது எட்டு.தாயார் மேடையில் வீணை இசைக்கச்சேரி செய்து கொண்டிருந்த போது வெளியில் சிறுமிகளுடன் அவள் விளையாடிக் கொண்டிருந்தாள். திடீரென மகளின் ஞாபகம் வரவே அவளைத் தேடி அழைத்து வருமாறு தாய் சண்முகவடிவு கேட்டுக்கொண்டதற்கிணங்க அச்சிறுமி மேடைக்கு அழைத்துவரப்பட்டாள். அவள் முகத்தில் முத்துமுத்தாக வியர்வை அரும்பிக் கிடந்தது. தாயார் அவள் மீதிருந்த வியர்வையைத் துடைத்து விட்டு “பாடு” என கண்டிப்பான குரலில் கூறினார். சிறுமி அற்புதமாகப் பாடினாள். மக்கள் கரகோஷம் செய்து “இவள் தாயை மிஞ்சி விடுவாள்” என்றார்கள். அப்போது அச் சிறுமிக்கு கரகோஷத்தைப் புரிந்து கொள்ளும் வயதல்ல ஆகையால் திரும்பவும் சென்று விளையாட வேண்டும் என்ற எண்ணம் தான் அவளிடம் இருந்தது. அச் சிறுமியே பின்னாளில் எம். எஸ். சுப்புலட்சுமி என எழைக்கப்பட்டாள்.இசையின் உயரத்தைத் தொட்டார் - என இணையப் பதிவுகள் உண்டு.

அந்தச் சிறு வயதில் சென்னை ஆளுநர் முன்பு பாடியவர் என்ற பாராட்டைப் பெற்றார். ஐந்தாம் வகுப்பு வரையே படித்திருந்தாலும் பிற்காலத்தில் எட்டு மொழிகளில் பாடி பல்லாயிரக் கணக்கான மனங்களை உருக வைத்திருக்கிறார். இசைக்கு மொழி ஒரு தடை அல்ல என்பதை நிரூபித்தவர்.

எம்.எஸ் இன் திரைப் பிரவேசம் அவரை இன்னொரு தளத்துக்கு உயர்த்தியது. காளிதாசனாரின் சகுந்தலை’ திரைப்படத்தில் கதாநாயகியாக அறிமுகமானார். தொடர்ந்து ’சாவித்ரி’ திரைப்படத்தில் நாரதர் வேடமிட்டு நடித்துக் கொடுத்த பணத்தில்தான் சதாசிவமும் அமரர் கல்கியும் கல்கி பத்திரிகையை ஆரம்பித்தனர். ’பக்த மீரா’ திரைப்படம் தமிழிலும் இந்தியிலும் வெளிவந்து புகழ்பெற்றது. இந்தி மீராவைப் பார்த்த பிரதமர் நேரு, ‘இசையின் ராணிக்கு முன்பு நான் சாதாரண பிரதமர்தானே’ என்று பாராட்டினாராம்.

1938இல் சேவாசதனம், 1940 இல் சகுந்தலை, 1941 இல் சாவித்திரி, 1945 இல் மீரா, 1947 இல் மீராபாய் ஆகிய திரைப்படங்கள் அவர் புகம் பேசுபவையாகக் காணப்பட்டன.

அது மட்டுமல்லாது உலகின் பல நாடுகளுக்கும் பண்பாட்டுத் தூதுவராகச் சென்று நிகழ்ச்சிகளை நடத்தியிருக்கிறார். ஐக்கிய நாடுகள் சபையிலும் பாடியிருக்கிறார். ஐக்கிய நாடுகள் அவையில் அரங்கேற்றத்தை நிகழ்த்திய முதல் இந்தியர் என்ற பெருமைக்குரியவர்.

எம்.எஸ் அவர்கள், பத்ம பூசண், 1954 சங்கீத நாடக அகாதமி விருது, 1956 சங்கீத கலாநிதி, 1968, இசைப்பேரறிஞர் விருது, 1970. மக்சேசே பரிசு, 1974 பத்ம விபூசண், 1975 சங்கீத கலாசிகாமணி விருது, 1975, காளிதாஸ் சம்மன் விருது, (1988 -1989) நாட்டு ஒருமைப்பாட்டிற்கான இந்திரா காந்தி விருது, 1990 பாரத ரத்னா - 1998 ’பாரத ரத்னா’ உட்படப் பல்வேறு விருதுகளைப் பெற்றிருக்கிறார். ●

# இந்தவார ராசிபலன் 24.09.2023 -30.09.2023

ஞாயிற்றுக்கிழமை
சோபகிருது வருடம் - புரட்டாதி 07
நல்ல நேரம்: 7.30 - 9.00
ராகு காலம் : 4.30 - 06.00
திதி : நவமி

## மேஷம்
[ அசுவினி, பரணி, கார்த்திகை 1 பாதம் ]

சிறு சிறு தடங்கல்கள் உண்டாகும். அவைகளை உடைத்து முன்னேறுவீர்கள். உத்தியோகஸ்தர்கள் மேலதிகாரிகளின் ஆதரவுடன் சில சலுகைகளை அனுபவிப்பீர்கள். சகப் பணியாளரிடம் சுமுகமாக நடந்து கொள்வது நல்லது. சொந்தத் தொழில் நன்றாக நடைபெறும். வாடிக்கையாளர்களின் எதிர்பார்ப்புகளை செய்து கொடுத்து நற்பெயர் பெறுவீர்கள். வருமானம் எதிர்பார்த்தவாறு இருக்கும். கூட்டுத்தொழிலில் பணியாட்கள் ஒத்துழைப்பு அளிப்பார்கள்.

## ரிஷபம்
[ கார்த்திகை 2,3,4, ரோகிணி, மிருகசீரிஷம் 1,2 ]

செயல்கள் சிலவற்றில் வெற்றி பெற்றாலும், மற்றவைகளில் ஏற்படும் பின்னடைவுகளைத் தீவிர முயற்சியுடன் சரி செய்து முன்னேற பாடுபடுவீர்கள். உத்தியோகஸ்தர்களில் சிலருக்குத் தொழில் ரீதியான வெளியூர் பயணம் ஏற்படக்கூடும். சகப் பணியாளர்கள் ஒத்துழைப்பு தருவர். சொந்தத் தொழிலில் புதிய வாடிக்கையாளர்களால் வருமானம் அதிகரிக்கும். பணியில் ஏற்பட்ட குறைகளை நிவர்த்தி செய்து கொடுப்பீர்கள். உதவியாளர்களின் பணி திருப்தியாக இருக்காது. குடும்பத்தில் திட்டமிட்டபடி சுபநிகழ்ச்சிகள் நடைபெறும்.

## மிதுனம்
[ மிருகசீரிடம் 3,4, திருவாதிரை, புனர்பூசம் 1,2,3 ]

புத்திசாலித்தனமான செயல்களில் தீவிர முயற்சியுடன் ஈடுபடுவீர்கள். வரவேண்டிய பணம் சிறிது தாமதித்து கைக்குக் கிடைத்தாலும், நீங்கள் கொடுக்க வேண்டிய பாக்கிகள் அவசரப்படுத்தலாம். சொந்தத் தொழில் செய்பவர்கள் வாடிக்கையாளர்களுக்கு குறிப்பிட்ட நேரத்தில் பணிகளைச் செய்து கொடுத்து மகிழச் செய்வார்கள். கூட்டுத்தொழிலில் லாபம் அதிகரிக்கும். வியாபார ஸ்தலத்தை விரிவாக்கவும், புதிய கிளைகள் தொடங்கவும் கூட்டாளிகளுடன் சேர்ந்து ஆலோசிப்பீர்கள். குடும்பத்தில் தம்பதிகளின் ஒற்றுமை அதிகரிக்கும்.

## கடகம்
[ புனர்பூசம் 4, பூசம், ஆயில்யம் ]

பல செயல்களில் முயற்சியோடு ஈடுபட்டாலும், சிலவற்றில் முன்னேற்றமும், மற்றவைகளில் தொய்வும் காணப்படும். உத்தியோகஸ்தர்கள் தங்கள் பொறுப்பில் உள்ள பதிவேடு களில் கவனமாக இருங்கள். சிறிய தவறும் உயர் அதிகாரிகளுக்கு பெரிதாகத் தோன்றும். சொந்தத் தொழில் நன்றாக நடைபெற்றாலும், சிறு சிறு தவறுகள் ஏற்படத்தான் செய்யும். புதிய வாடிக்கையாளரால் தொழில் முன்னேற்றமும், பொருள் வரவும் உண்டு.

## சிம்மம்
[ மகம், பூரம், உத்திரம் 1 ]

உங்கள் செயல்களில் முன்னேற்றமான பலன்களைப் பெறுவீர்கள். முக்கிய நண்பர் ஒருவர், உங்கள் முயற்சிகளுக்கு உறுதுணையாக இருப்பார். உத்தியோகஸ்தர்களில் சிலருக்கு விரும்பிய இடமாற்றமும், சம்பள உயர்வும் கிடைக்கலாம். சிலர் அலுவலகத்தில் எதிர்பார்த்த கடன் தொகை கிடைத்து மகிழ்வார்கள். சொந்தத் தொழில் செய்பவர்கள், வாடிக்கையாளர்களின் ரசனைக்கேற்ப பணிகளை செய்து கொடுத்து பாராட்டு பெறுவர்.

## கன்னி
[ உத்திரம் 2,3,4, அஸ்தம், சித்திரை 1,2 ]

திறமையோடும், தீவிர முயற்சியோடும் காரியங்களில் ஈடுபட்டு நல்ல பலன்களை அடைவீர்கள். தளர்ச்சி அடைந்த செயல்களில் தக்க நபர்களின் துணைகொண்டு முன்னேறுவீர்கள். உத்தியோகத்தில் உயர் அதிகாரிகளின் ஆதரவோடு சில சலுகைகளைப் பெறுவீர்கள். சொந்தத் தொழில் சிறப்பாக நடைபெறும். புதிய வாடிக்கையாளர் பணியில் அதிக கவனம் செலுத்த நேரலாம். பணியில் சிறுமாற்றம் செய்ய வேண்டிய அவசியம் ஏற்படும். கூட்டுத் தொழில் வியாபாரம், எதிர்பார்க்கும் லாபத்தோடு நடைபெறும்.

## துலாம்
[ சித்திரை 3,4, சுவாதி, விசாகம் 1,2,3 ]

அவசியமான செயல்களில் தீவிர முயற்சியோடு ஈடுபடுவீர்கள். சிலவற்றில் தளர்வு ஏற்பட்டாலும், அவைகளிலும் வெற்றிபெற தக்கவர்களோடு முயற்சி செய்வீர்கள். உத்தியோகஸ்தர்கள், உயர் அதிகாரிகளை அனுசரித்து செயல்படுவது நல்லது. தள்ளிவைத்த வேலை ஒன்றை உடனே செய்ய வேண்டிய நிர்பந்தம் ஏற்படலாம். சொந்தத் தொழிலில் வாடிக்கையாளரின் அவசர வேலையை செய்ய ஓய்வின்றி பணியாற்றுவீர்கள். புதிய நபர்களின் அறிமுகம் தொழில் ரீதியான முன்னேற்றத்திற்கு உதவியாக இருக்கும்.

## விருச்சிகம்
[ விசாகம் 4, அனுஷம், கேட்டை ]

உங்கள் முயற்சிகள் சிலவற்றில் முன்னேற்றமான போக்கு காணப்படும். நண்பர்கள் உதவியுடன் வெற்றிக்காக தீவிரமாக பாடுபடுவீர்கள். உத்தியோகஸ்தர்கள் தங்கள் பொறுப்புகளில் மிகவும் கவனமுடன் செயல்படுவது அவசியம். புதியவர்களிடம் அலுவலக விஷயங்களை வெளிப்படையாகப் பேசுவது பிரச்சினையை ஏற்படுத்தும். சொந்தத் தொழிலில் வேலைப்பளு அதிகரிக்கும். அவசர வேலைகளால் ஓய்வு நேரத்தை இழப்பீர்கள்.

## தனுசு
[ மூலம், பூராடம், உத்திராடம் 1 ]

செய்யும் செயல்களில் சிறு சிறு தடைகள் ஏற்பட்டாலும், அவைகளை தீவிர முயற்சியோடு தகர்த்து எறிவீர்கள். இருப்பினும் சில காரியங்களை கொஞ்சம் தள்ளிப்போடுவது நல்லது. உத்தியோகஸ்தர்கள், சகப் பணி யாளர்களிடம் அனுசரணையாக நடந்துகொள்ளுங்கள். கவனமாக இருப்பது அவசியம். சொந்தத் தொழில் செய்பவர்கள் தங்கள் பணிகளில் நிதானத்தோடு செயல்படாவிட்டால் வாடிக்கையாளர்களிடம் நல்ல பெயர் வாங்க இயலாது.

## மகரம்
[ உத்திராடம் 2,3,4, திருவோணம், அவிட்டம் 1,2 ]

சிறு சிறு தடைகளை சமாளிக்க நேரிடும். மனதில் இனம் புரியாத குழப்பமும், செயல்களில் தடுமாற்றமும் காணப்படும். உத்தியோகஸ்தர்கள், பணிகளில் கவனமாகவும், நிதானமாகவும் செயலாற்றுவது நல்லது. சகப் பணியாளர்களின் சொந்த விஷயங்களில் தலையிடுவதை தவிர்த்திடுங்கள். சொந்தத் தொழிலில் வேலைப்பளு அதிகரிக்கும். கூட்டுத்தொழில் செய்பவர்கள் பணியாளர்களிடம் கனிவு காட்டாவிட்டால், வியாபாரம் தடைப்படும்.


## கும்பம்
[ அவிட்டம் 3,4, சதயம், பூரட்டாதி 1,2,3 ]

சில காரியங்களில் தொல்லை ஏற்படும். உத்தி யோகஸ்தர்கள் தங்களது வேலைகளில் மிகுந்த கவனமாக இருப்பது அவசியம். பதிவேடுகளை சரியான முறையில் பராமரிக்காமல், உயர் அதிகாரிகளின் கோபத்திற்கு இலக்காவீர்கள். சொந்தத் தொழிலில் எதிர்பார்க்கும் அபிவிருத்தி தடைப்படும். மூலப்பொருட்களின் தட்டுப்பாடு காரணமாக வாடிக்கையாளர்களுக்கு சரியான நேரத்தில் அவர்கள் தேவையை பூர்த்தி செய்ய இயலாது. கூட்டுத்தொழில் சுமாராக நடைபெறும். எதிர்பார்க்கும் லாபம் தாமதமாகும்.

## மீனம்
[ பூரட்டாதி 4, உத்திரட்டாதி, ரேவதி ]

மனதில் சோர்வும், தளர்ச்சியும் உண்டாகும். உத்தியோகத்தில் சிலருக்கு அலுவலகத்திலேயே பதவி உயர்வும், சம்பள உயர்வும் கிடைக்கலாம். சகப் பணியாளர்கள், உங்கள் முன்னேற்றத்தில் அனுசரணையாக இருப்பர். சொந்தத் தொழில் பரபரப்பாக நடைபெறும். வாடிக்கையாளர்களின் திருப்தியால் மனம் மகிழ்வீர்கள். பொருளாதார வளர்ச்சியும் ஏற்படும். கூட்டுத்தொழில் முயற்சியில் கூட்டாளிகளுடன் கலந்து பேசி முடிவெடுப்பது நல்லது. குடும்பத்தில் சுமுகமான சூழ்நிலை இருந்தாலும், சிறு சிறு பிரச்சினைகளும் ஏற்படத்தான் செய்யும். குலதெய்வ வழிபாட்டுக்காக குடும்பத்துடன் வெளியூர் செல்லத் திட்டமிடுவீர்கள்.

# மோசமடையும் இந்திய - கனடா உறவு



சென்னை மடல்
-பகவான் சிங்-

கனடாவில் வசிக்கும் காலிஸ்தான் இயக்கத்தினரின் இந்திய விரோதப் போக்கினால் பல ஆண்டுகளாக இரு நாடுகளுக்கிடையில் நிலவி வரும் இணக்கமற்ற உறவுகளுக்கு இடையில், செப்டம்பர் 18 அன்று கனடா பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ இந்தியாவின்மீது ஒரு வெடிகுண்டை வீசியுள்ளார். சீக்கியப பிரிவினைவாதியும் கனடா நாட்டு குடிமகனுமான ஹர்தீப் சிங் நிஜ்ஜர் கனடாவில் கொல்லப்பட்டதற்குப் பின்னால், இந்திய உளவாளிகளின் கை இருப்பதற்கான நம்பத்தகுந்த காரணங்கள் உள்ளன என அவர் அந்நாட்டு நாடாளுமன்றத்தில் தெரிவித்தார். இந்தக் குற்றச்சாட்டு அபத்தமானது என்றும், கனடாவில் அடைக்கலம் பெற்றிருக்கும் காலிஸ்தான் பயங்கரவாதிகள் மற்றும் தீவிரவாதிகளுக்குத் தன் அரசிடமிருந்து கிடைக்கும் ஆதரவிலிருந்து கவனத்தைத் திசை திருப்புவதும், தொடர்ந்து இந்தியாவின் இறையாண்மைக்கு அச்சுறுத்தல் ஏற்படுத்துவதுமே, இதுபோன்ற அடிப்படை ஆதாரமற்ற குற்றச்சாட்டுகளின் நோக்கம் என்றும் இந்தியா உடனடியாக பதிலளித்துள்ளது. “கொலைகள், ஆட்கடத்தல் மற்றும் திட்டமிடப்பட்ட குற்றச் செயல்கள் உள்ளிட்ட சட்டவிரோத நடவடிக்கைகளுக்குக் கனடா இடமளிப்பது புதிதன்று” என்று இந்திய அயலுறவுத் துறை அமைச்சகம் பதிலடி தந்துள்ளது. இதனையடுத்து இரு நாடுகளும் பரஸ்பரம் ஒரு தூதரக அதிகாரியை வெளியேற்றியுள்ளன. வரும் வாரங்களில் இந்திய - கனடா உறவுகள் மேலும் மோசமடையும் என்ற அச்சமும் நிலவுகிறது.

2022இல் இந்தியாவின் பத்தாவது இருவழி சரக்கு வர்த்தகக் கூட்டாளி நாடாக கனடா இருந்த நிலையில், தற்சமயம், வர்த்தகப் பேச்சுவார்த்தைகள் நிறுத்திவைக்கப்பட்டுள்ளதுடன், இந்தியாவுடனான திட்டமிட்ட ஒரு வர்த்தக பரிவர்த்தனையும் ரத்து செய்யப்பட்டுள்ளது. ஐ நா பொதுச் சபைக் கூட்டத்திற்கு இடையே நடந்த செய்தியாளர் சந்திப்பில் வியாழக்கிழமை செப்டம்பர் 21 அன்று பேசிய ட்ரூடோ, மீண்டும் இதே குற்றச்சாட்டைக் கூறியதைத் தொடர்ந்து நிலைமை மேலும் தீவிரமடைந்தது. “கனடா மண்ணில் ஒரு கனடியக் குடிமகன் கொலை செய்யப்பட்டதில் இந்திய அரசின் உளவாளிகளின் கை இருக்கிறது என்று நம்பத்தகுந்த காரணங்கள் இருப்பதாக நான் ஏற்கெனவே திங்களன்று (செப்டம்பர் 18) குறிப்பிட்டுள்ளேன்.” என்று கூறிய அவர், கனடாவின் ஜனநாயக விழுமியங்களுக்கும் நாம் நம்பும், விதிகளின் அடிப்படையிலான சர்வதேச ஒழுங்குகளுக்கும் உட்பட்டுத் தான் இந்தக் குற்றச்சாட்டைத் தான் மீண்டும் மீண்டும் வைப்பதாகவும் தெரிவித்திருக்கிறார். இதில் குறிப்பிடப்பட்டவொரு விஷயம் என்னவென்றால், நிஜ்ஜர் கொலையில் இந்திய பின்னணி இருப்பதற்கு ‘நம்பத்தகுந்த காரணங்கள்’ இருப்பதாக மட்டும்தான் அவரால் கூற முடிகிறதே தவிர, நம்பத்தகுந்த ஆதாரங்கள் இருப்பதாக அவரால் கூற இயலவில்லை. ஆதாரங்கள், எந்த அளவுக்கு விரிவானவை, உறுதியானவை என்று விளக்குமாறு ஒரு நிருபர் கேட்டபோது, அதற்கு நேரடியான பதிலளிக்காத ட்ரூடோ, கனடாவில் கடுமையான, சுயேச்சையான நீதித்துறை செயல்படுவதாகவும் அது அதிகபட்ச நேர்மையுடன் பணியாற்றுவதாகவும் சொல்லி நழுவினார். இந்தக் குற்றச்சாட்டைப் போகிறபோக்கில் கூறவில்லை என்றும் மிகவும் தீவிரத்துடன் தான் கூறியதாகவும் அவர் தெரிவித்தார். இந்திய பிரதமர் நரேந்திர மோடி

## சீக்கியர்களின் சனத்தொகை விகிதத்தில் இந்தியாவைவிட அதிகமானது கனடா!

இந்தக் குற்றச்சாட்டுக்களை உறுதிசெய்தாரா, மறுத்தாரா என்று கேட்கப்பட்டபோது, ட்ரூடோ, மோடியுடன் தான் நேரடியாக, வெளிப்படையாக உரையாடியதாகவும், தனது கருத்துகளை மிகத் தெளிவாக, நிச்சயமாக முன்வைத்ததாகவும் பதிலளித்தார். மோடியின் பதில் என்னவென்று தெளிவு படுத்தவில்லை.

வியாழனன்று ட்ரூடோ செய்தியாளர்களைச் சந்திப்பதற்குப் பல மணிநேரங்கள் முன்னர், இந்திய வெளியுறவு அமைச்சகத்தின் செய்தித் தொடர்பாளர் அரிந்தம் பாக்சி, “தனக்கு வழங்கப்பட்ட குறிப்பிட்ட தகவல் எதையும் ஆய்வு செய்ய இந்தியா தயாராக இருப்பதாகத் தெளிவாகத் தெரிவிக்கப்பட்டுவிட்டது. ஆனால் இதுவரை அத்தகைய குறிப்பிட்ட தகவல் எதுவும் வரவில்லை” என்று செய்தியாளர்களிடம் தெரிவித்தார். இந்த விவகாரம் எப்படித் தொடங்கியது என்பதைச் சுருக்கமாகப் பார்க்கலாம். கனடாவின் பிரிட்டிஷ் கொலம்பியா பகுதியில் உள்ள சர்ரேவில், குருநானக் சிங் குருத்வாராவின் பார்க்கிங் பகுதியில் “முகமூடியணிந்த வாட்ட சாட்டமான இருவர்“, 45 வயதான தீவிர காலிஸ்தான் பிரிவினைவாதியான ஹர்தீப் சிங் நிஜ்ஜரைத் துப்பாக்கியால் சுட்டுவிட்டு, காரில் தப்பிச் சென்றனர். இதுவரை யாரும் கைது செய்யப்படவில்லை.

இந்தியாவின் பஞ்சாப் மாநிலம் ஜலந்தரின் பார் சிங் புராவைச் சேர்ந்த நிஜ்ஜர், ரவி ஷர்மா என்ற பெயரில் போலி பாஸ்போர்ட் மூலம், 1997இல் கனடாவில் நுழைந்தார். அங்கு ஒரு ப்ளம்பராக தனது பணியைத் தொடங்கினார். அங்கேயே திருமணம் செய்துகொண்ட இவருக்கு இரு மகன்கள் உள்ளனர். இந்திய அரசாலும் அதன் பாதுகாப்பு அமைப்புகளாலும் கொடுமைபடுத்தப்பட்டு பாதிக்கப்பட்டதாகக் கூறிக்கொண்டு, பல ஆண்டுகளுக்கு முன்னர், போலி பாஸ்போர்ட்களுடன் கனடாவில் நுழைந்து, குடியுரிமை பெற்ற இதுபோன்ற ஆயிரக்கணக்கான சீக்கியர்கள் உள்ளனர்.

இந்தியாவிற்கு வெளியில் அதிகமாக சீக்கியர்கள் வாழும் நாடு கனடாதான். 7.71 லட்சம் பேர் தங்களை சீக்கியர்கள் என்று பதிவு செய்துகொண்டுள்ளனர். கனடாவின் மக்கள் தொகையில் (3.82 கோடி) 2.1 சத விகிதம் பேர் சீக்கியர்கள். இந்தியாவில் அவர்களின் சதவிகிதத்தை விட அதிகம். அரசியல் ரீதியாக கனடாவில் இவர்களின் வாக்கு வங்கி பெருமதிப்பைப் பெற்றுள்ளது. இந்தியாவைவிட கனடா நாட்டு அமைச்சரவையில் அதிக சீக்கியர்கள் இடம் பெற்றிருக்கிறார்கள். கனடா வாழ் இந்தியர்களின் மொத்த எண்ணிக்கை 13.75 லட்சம். இவர்களில் இருவரில் ஒருவர் சீக்கியராக இருக்கிறார் என்கிறது இந்தப் புள்ளிவிவரம். இதனால் கனடாவில் சீக்கிய வாக்கு வங்கி மிகவும் பலம் வாய்ந்ததாக உள்ளது. 1961இல் வெள்ளைக்காரர் டாமி டக்ளஸ் என்பவரால் தொடங்கப்பட்ட புதிய ஜனநாயகக் கட்சியின் தலைவராக அமைச்சர் ஜக்மீத் சிங் இருந்து வருகிறார். 338 உறுப்பினர்களைக் கொண்ட கனடா நாடாளுமன்றத்தில் இக்கட்சியின் பலம் 25. ட்ரூடோவின் சிறுபான்மை அரசுக்கு சிங்கின் ஆதரவு இன்றியமையாதது. கனடா வாழ் சீக்கியர்களில் அதிதீவிர காலிஸ்தானிகளின் ஆதரவு, ஜக்மீத் சிங் மீண்டும் வெற்றி பெற மிகவும் முக்கியமானது. நிஜ்ஜர் கொலை குறித்துக் கவலை தெரிவித்த சிங், நீதியைப் பெறும் முயற்சியில், நரேந்திர மோடியைப் பொறுப்பாக்குவது உட்பட, ஆவன அனைத்தும் செய்வதாகவும் உறுதிபூண்டுள்ளார்.

இந்த விவகாரம் இப்போது சூடு பிடித்துள்ளது. தனது நாட்டில் மத ரீதியான கொடுமைகளுக்கு ஆளானதாகக் கூறிக்கொண்டு கனடா நாட்டுக் குடியுரிமை பெற்ற இந்திய சீக்கியர்கள், இதே பொய்யின் அடிப்படையில்தான், பஞ்சாபின் ஒரு பகுதியைக் காலிஸ்தான் என்ற தனி நாடாக அறிவிக்கக் கோரி வருகிறார்கள். இந்தப் பிரிவினைவாத இயக்கம் மிகவும் வலுவாக ஆழமாக வேரூன்றிவிட்டது. கனடா, அவுஸ்திரேலியா, இங்கிலாந்து, அமெரிக்கா மற்றும் சில நாடுகளிலும், காலிஸ்தான் அலுவலகங்களில் இவர்களின் பளீர் மஞ்சள் கொடி பறக்கின்றது. இந்த நாடுகளில் உள்ள சில இந்திய தூதரக அலுவலகங்கள் மற்றும் இந்துக் கோயில்களின்மீது தாக்குதல்களும் நடைபெற்றுள்ளன. இருந்தும் இந்த நாட்டு அரசுகள் தங்கள் ஜனநாயகம், பேச்சு சுதந்திரத்தில் நம்பிக்கை கொண்டுள்ளதாகக் கூறிக்கொண்டு, காலிஸ்தானியர்கள்மீது மென்மையான போக்கையே கடைபிடித்து வருகின்றன. இந்த நாடுகளின் ஆளும் மற்றும் எதிர்க்கட்சிகள் வெளிநாடு வாழ் இந்தியர்களின் வாக்குவங்கிகளை நம்பியே இருப்பது ஒரு மறுக்க முடியாத உண்மை. தவிர, இந்தியா ஒரு வலுவான பொருளாதார நாடாக உருவாகி வளர்வது இவர்களுக்கு ஏற்படுத்தும் உறுத்தலும் வெளிப்படையாகத் தெரிகிறது. நிஜ்ஜர் குறித்த செய்திகள் டிஜிட்டல் ஊடகங்களில் நிறைய வெளியாகிவிட்டன. அதையே மீண்டும் குறிப்பிட்டு உங்கள் பொன்னான நேரத்தை வீணடிக்க நான் விரும்பவில்லை.

இம்மாதத் தொடக்கத்தில், ஜி-20 உச்சி மாநாட்டில் கலந்து கொள்ள, டில்லி வந்திருந்த ட்ரூடோ, பதற்றமான சூழலில் தான் மோடியைச் சந்தித்தார். இந்தியாவின் நிலைப்பாட்டை கனடா பிரதமரிடம், வலுவாக முன்வைத்த மோடி, “கனடாவில் செயல்படும் தீவிரவாத அமைப்புகள் இந்தியாவுக்கு எதிரான நடவடிக்கைகளில் ஈடுபடுவது குறித்தும் பிரிவினைவாதத்தை வளர்த்து, இந்திய தூதரக அதிகாரிகள் மீதான வன்முறையைத் தூண்டுவது“ குறித்தும் இந்தியா மிகவும் கவலை கொண்டுள்ளதாக ஓர் அதிகாரபூர்வ அறிக்கையையும் வெளியிடச் செய்தார். சர்வதேச புகழ்பெற்ற புவிசார் அரசியல் நிபுணர் ப்ரஹ்மா செல்லானே. டில்லியில் வசிக்கும் இவர், கொள்கை ஆய்வு மையத்தில் (Centre for Policy Research) மூலோபாய ஆய்வுகள் பிரிவின் பேராசிரியராகப் பொறுப்பு வகிக்கிறார். அவர்,

“அடிப்படைவாதிகளுடனான தனது அரசியல் உறவுகள் மற்றும் வன்முறையை வளர்க்கும் காலிஸ்தானியர்களுடன் தனது அரசுக்கு இருக்கும் தொடர்புகள் ஆகியவற்றிலிருந்து கவனத்தைத் திருப்பவே இந்தியாவின்மீது இப்படியொரு குற்றச்சாட்டைத் தீவிரமாக எழுப்பியிருக்கிறார் ட்ரூடோ” என்று கூறுகிறார்.

## மேற்குலக ‘பாகிஸ்தானாக’ கனடா மாறும் அபாயம்?



லண்டன் இந்திய தூதரகத்தில் இந்திய கொடியை அகற்றும் காலிஸ்தான் ஆதரவு ஆர்ப்பாட்டகாரர்கள்

அதுமட்டுமன்று. காலிஸ்தான் தீவிரவாதத்தைக் கனடா ஒடுக்கத் தவறினால், அது அந்நாட்டின் உள்நாட்டுப் பாதுகாப்புக்கேகூட ஆபத்தாகி, மேற்குலக பாகிஸ் தானாக மாறக்கூடிய அபாயம் உள்ளது என்றும் செல் லானே எச்சரித்துள்ளார். தனி நாடு கோரிக்கைக்காக வன்முறையை ஒரு சட்டபூர்வமான ஆயுதமாக அங்கீ கரிக்கும் காலிஸ்தானியர்களுக்கு ஆதரவளிக்கும் ஐந்து ஆங்க்லோஸ்பியர் நாடுகளின் போக்கால் இந்தியாவை எதிர்நோக்கியிருக்கும் பெரிய பிரச்னையை இவரது ஆதாரமற்ற குற்றச்சாட்டு மறைக்க அனுமதிக்கக்கூடாது என்றும் செல்லானே கூறியுள்ளார். கனடா, அமெரிக்கா, இங்கிலாந்து, அவுஸ்திரேலியா மற்றும் நியூசிலாந்து ஆகிய ஐந்தும் தான் ஆங்க்லோஸ்பியர் நாடுகள் என்பவை.

இந்தியா மீதான ட்ரூடோவின் குற்றச்சாட்டிலிருந்து ஒதுங்கி நிற்கும் கனடாவின் மற்ற நட்பு நாடுகள் மத்தியில், அமெரிக்கா மட்டும், இந்தியா அவரது குற்றச்சாட்டைத் தீவிரமாக எடுத்துக்கொண்டு, நிஜ்ஜர் கொலை விசாரணையில் கனடாவுடன் ஒத்துழைக்க வேண்டும் என்று கூறியுள்ளது. அமெரிக்காவின் இந்தக் கருத்து குறித்து, ப்ரஹ்மா செல்லானே, “எல்லை தாண்டிய படுகொலைகளின் பெருந் தந்தை (நீண்ட காலமாக உலக சாதனையாளர்) களத்தில் இறங்கி விட்டார். 46 பேர் கொல்லப்பட்ட அல்லது காயமடைந்த ஒரு திரையரங்கு வெடிகுண்டுத் தாக்குதலை நடத்தியது தொடர்பாக இந்தியாவால் தேடப்பட்டு வந்த சர்வதேச தீவிரவாதி ‘சீக்கியத் தலைவர்’ என்று போற்றப்படுகிறார்.” என்று எழுதியுள்ளார். பெருந்தந்தை என்று ப்ரஹ்மா குறிப்பிடுவது, அமெரிக்காவைத்தான்.

இந்த உரையாடலை நிறைவு செய்வதற்கு முன், ஒரு பழைய சம்பவத்தை நினைவு கூர விரும்புகிறேன். லண்டன் வழியாக வான்கூவரிலிருந்து டில்லி/மும்பாய் வந்துகொண்டிருந்த எயர் இந்தியா விமானத்தில் (கனிஷ்கா, 23 ஜூன்,1985) பயணித்த அனைத்து 329 பயணிகளும் உயிரிழக்கக் காரணமாக இருந்த வெடிகுண்டு தாக்குதலுக்கு மூளையாகச் செயல்பட்ட தல்விந்தர் சிங் பர்மருக்குத் தஞ்சமளித்த அன்றைய கனடா அரசின் பிரதமர் பியரி ட்ரூடோ, இன்றைய ஜஸ்டின் ட்ரூடோவின் தந்தை என்பதும் குறிப்பிடத்தக்கது. பர்மரை நாடுகடத்த இந்தியா விடுத்த கோரிக்கையை பியரி அரசு நிராகரித்தது. அதற்குக் கூறப்பட்டது, இந்தியா பிரிட்டிஷ் அரசியின் தலைமையை அங்கீகரிக்காததால் பிரிட்டிஷ் காமன்வெல்த்தின் அங்கமாக இல்லை என்றும், எனவே காமன்வெல்த் நாடுகடத்தும் ஒப்பந்தம் இந்தியாவிற்குப் பொருந்தாது என்ற அற்பமான காரணம். ஆசியர்கள் நாம், நீண்ட காலமாகவே, வெள்ளையின மேற்குலக ஆதிக்கவாதிகளின் இரட்டை நிலைப்பாட்டிற்கு இலக்காகியிருக்கிறோம். நாம் படித்த பள்ளி வரலாற்றுப் பாடப் புத்தகங்களை நினைவு கூர்ந்தால், நமது வளமான கலாசாரம், பாரம்பரியம் மற்றும் நமது செல்வங்களைக் கொள்ளையிட்டு, நம்மையும் அடிமைகளாக நடத்திய அந்த ‘வல்லரசுகளின்’ அராஜகம் புரியும். நம்மிடமிருந்த ஒற்றுமையின்மையைப் பயன்படுத்தி, நம்மை அவர்கள் அடிமைப்படுத்தியிருந்தார்கள். இந்தக் கொடுமை தொடர்கிறது.

மீண்டும் சந்திப்போம். வணக்கம்.

# மீண்டும் ஜனாதிபதி ஆட்சிமுறை ஒழிப்பின் அவசியம் குறித்து ஒரு பார்வை



வீரகத்தி தனபாலசிங்கம்

இலங்கை அரசியலை பல தசாப்தங்களாக ஆக்கிரமித்து வந்திருக்கும் பிரதான கோரிக்கைகளில் ஒன்று நிறைவேற்று அதிகார ஜனாதிபதி ஆட்சிமுறையை ஒழிக்கவேண்டும் என்பதாகும்.

இறுதியாக 2019 நவம்பர் தேர்தலை தவிர, 1994 நவம்பர் தேர்தல் தொடக்கம் 2015 ஜனவரி தேர்தல் வரை சகல ஜனாதிபதித் தேர்தல்களிலும் அந்த ஆட்சிமுறை ஒழிப்பு பிரதான அரசியல் கட்சிகளின் விஞ்ஞாபனத்தில் முக்கிய வாக்குறுதியாக இருந்துவந்தது. ஆனால், அந்த தேர்தல்களில் வெற்றி பெற்று ஆட்சியதிகாரத்துக்கு வந்த எந்தவொரு ஜனாதிபதியும் அந்த வாக்குறுதியைக் காப்பாற்றவில்லை.

கடந்த வருடத்தைய 'அறகலய" மக்கள் கிளர்ச்சியின்போது மீண்டும் அந்த கோரிக்கை முக்கியத்துவம் பெற்றது. சகல எதிரணி கட்சிகளும் அதற்கு ஆதரவு கொடுத்து உரத்துப் பேசின. ஆனால், கிளர்ச்சி அடக்கியொடுக்கப்பட்டதும் மீண்டும் ஜனாதிபதி ஆட்சிமுறை ஒழிப்புக் கோரிக்கை பின்னரங்கத்துக்கு தள்ளப்பட்டுவிட்டது.

எதிரணி கட்சிகள் இப்போது அதைப் பற்றி பேசாமல் அடுத்த ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடுவதற்கு வேட்பாளர்களின் பெயர்களை அறிவித்து தங்களை தயார்செய்யும் செயற்பாடுகளில் இறங்கியிருப்பதை காணக்கூடியதாக இருக்கிறது. அந்த தேர்தலில் ஜனாதிபதி ஆட்சிமுறை ஒழிப்பு முக்கியமான வாக்குறுதியாக மீண்டும் வெளிக்கிளம்பும் என்பது சந்தேகமே.

ஜனாதிபதி ஆட்சிமுறை ஒழிப்பின் அவசியம் குறித்து இந்த பத்தியில் ஏற்கெனவே பல தடவைகள் எழுதப்பட்டிருக்கிறது. மீண்டும் எழுதவேண்டிய தேவை எழுந்ததற்கு காரணம் அந்த ஆட்சிமுறையை அறிமுகப்படுத்திய இலங்கையின் முதல் நிறைவேற்று அதிகார ஜனாதிபதி ஜே.ஆர். ஜெயவர்தனவின் 117 வது பிறந்த தினத்தை முன்னிட்டு கடந்தவாரம் கொழும்பில் ஜெயவர்தன நிலையத்தில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த வைபவத்தில் நிகழ்த்தப்பட்ட உரைகளேயாகும்.

முன்னாள் சபாநாயகர் கரு ஜெயசூரியவும் ஜெயவர்தனவின் பேரன் பிரதீப் ஜெயவர்தனவும் அந்த வைபவத்தில் முக்கிய பேச்சாளர்கள். வெளிநாட்டு விஜயத்தை மேற்கொண்டிருக்கும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அனுப்பிய செய்தியும் அங்கு வாசிக்கப்பட்டது.

பிரதீப் முன்னாள் ஜனாதிபதியின் பேரன் என்பதைத் தவிர, ஒரு முன்னணி அரசியல்வாதி அல்ல என்றபோதிலும், தனதுரையில் அவர் வெளியிட்ட கருத்துக்கள் (ஜனாதிபதி ஆட்சிமுறை ஒழிப்பின் அவசியம் குறித்த விவாதத்தை தணியவிடக்கூடாது என்ற அக்கறையில்) எதிர்வினையை வேண்டிநிற்கின்றன.

சிறிலங்கா சுதந்திர கட்சியின் கொழும்பு மாநகர சபை உறுப்பினராக இருந்த அவர் இப்போது தனது பாட்டனாரின் ஐக்கிய தேசிய கட்சிக்கு மீண்டும் வந்திருக்கிறார்.

இலங்கை அதன் வரலாற்றில் மிகவும் கடுமையான சவால்கள் நிறைந்த காலகட்டத்தில் இருக்கிறது. அந்த சவால்களை எதிர்கொள்வதற்கு பலரும் சாத்தியமான தீர்வுகளைத் தேடிக்கொண்டிருக்கிறார்கள். அவற்றில் ஒன்று ஜே.ஆர். ஜெயவர்தன 1978 ஆண்டில் அறிமுகப்படுத்திய நிறைவேற்று அதிகார ஜனாதிபதி ஆட்சிமுறை ஒழிப்பாகும் என்று கூறிய பிரதீப் அந்த ஆட்சிமுறையை நியாயப்படுத்த 1991ஆம் ஆண்டில் ஜெயவர்தன நிகழ்த்திய உரையொன்றை நினைவுபடுத்தினார்.

சுதந்திரத்துக்கு பிறகு இலங்கை வெஸ்ட்மின்ஸ்டர் பாராளுமன்ற ஆட்சிமுறையின் கீழ் இருந்த 30 வருடங்களிலும் 1965 - 70, 1970 - 77 காலப்பகுதிகளில் பதவியில் இருந்த அரசாங்கங்கள் மாத்திரமே முழுப்பதவிக் காலத்தையும் நிறைவுசெய்தன. ஆனால், ஜனாதிபதி ஆட்சிமுறையின் கீழ் ஒரு அரசாங்கத்தை தவிர ஏனைய அரசாங்கங்கள் சகலதும் முழுப்பதவிக் காலத்தையும் நிறைவுசெய்தன என்று ஜெயவர்தன அந்த உரையில் கூறினார் என்று பிரதீப் குறிப்பிட்டார்.

கடந்த வருடம் ஜனாதிபதி நாட்டைவிட்டு வெளியேறி வெளிநாட்டில் இருந்து தனது பதவியை துறந்தபோது நாடு முற்றிலும் வெஸ்ட்மின்ஸ்டர் பாராளுமன்ற ஆட்சிமுறையின் கீழ் இருந்திருந்தால் நெருக்கடியை கையாளமுடியாமல் நாட்டில் அராஜகநிலை ஏற்பட்டு இறுதியில் இராணுவ சர்வாதிகாரம் தோன்றியிருக்கும் என்று கூறிய பிரதீப் ஜனாதிபதி ஆட்சிமுறை காரணமாகவே அதிகார மாற்றத்தைச் சுமுகமான முறையில் செய்யக்கூடியதாக இருந்ததுடன் புதிய ஜனாதிபதியினால் அரச அதிகாரத்தை மீண்டும் நிலைநிறுத்தக்கூடியதாகவும் இருந்தது. நிலைவரத்தை கட்டுப்பாட்டில் கொண்டு வந்த ஜனாதிபதி விக்கிரமசிங்கவின் துணிச்சலுக்கும் திறமைக்கும் நாம் தலைவணங்குகிறோம். ஜனாதிபதி ஆட்சிமுறை இல்லையென்றால் அவரால் இதைச் செய்திருக்கமுடியுமா? என்று கேள்வியெழுப்பினார்.

அதேவேளை ஜனாதிபதி விக்கிரமசிங்க தனது செய்தியில் 1977 ஆம் ஆண்டில் ஜே.ஆர். ஜெயவர்தன தொடக்கிவைத்த சமூக - பொருளாதார சீர்திருத்தங்கள் தொடர்ந்து முன்னெடுக்கப் பட்டிருந்தால் நாடு இன்று அபிவிருத்தியடைந்த நாடாக மாறியிருக்கும் என்றும் அவரின் அரசியல் - பொருளாதார சீர்திருத்தங்கள் இலங்கையின் சமூக முறைமையை ஒரு நவீன அரசாக மாற்றுவதில் முக்கியமான பங்கை வகித்தன என்று தெரிவித்திருந்தார். ஆனால், அவர் பொதுப்படையாக ஜெயவர்தனவின் சீர்திருத்தங்கள் என்று கூறினாரே தவிர நிறைவேற்று அதிகார ஜனாதிபதி ஆட்சிமுறை பற்றி பிரத்தியேகமாக எதையும் குறிப்பிடவில்லை.

ஜனாதிபதி ஆட்சிமுறையே இன்றைய அரசியல் - பொருளாதார நெருக்கடிகளுக்கு பிரதான காரணமாக இருந்து வந்திருக்கிறது என்பதே பொதுவில் இதுவரையான அனுபவவாயிலான புரிதலாக இருக்கின்ற அதேவேளை ஜெயவர்தனவின் பேரன் அந்த ஆட்சிமுறை இல்லாவிட்டால் நாட்டில் அராஜகம் தலைவிரித்தாடியிருக்கும் என்று கூறுகிறார். ஜெயவர்தனவின் சமூக - பொருளாதாரக் கொள்கைகள் தொடர்ந்து முன்னெ டுக்கப்பட்டிருந்தால் நாடு சுபிட்சமடைந்திருக்கும் என்று ஜனாதிபதி கூறுகிறார்.

முன்னாள் ஜனாதிபதியின் பொருளாதாரக் கொள்கைகள் என்று விக்கிரமசிங்க கூறுவது திறந்த சந்தைப்









> **கடந்த வருடம் மக்கள் கிளர்ச்சியின்போது தவறான ஆட்சிமுறைக்கு எதிராக எழுந்த முழக்கங்கள் அடிப்படையில் ஜனாதிபதி ஆட்சிமுறைக்கு எதிரானவையே. கிளர்ச்சி அடக்கியொடுக்கப்பட்டாலும் அந்த ஆட்சிமுறை ஒழிப்பின் அவசியம் தணிந்துபோய்விட்டதாக கூறமுடியாது.**

பொருளாதாரத்தையேயாகும். அந்த பொருளாதார முறைமை தொடர்ந்து பின்பற்றப்படவில்லை என்பதே அவரின் முறைப்பாடாகும். ஆனால் ஜெயவர்தனவுக்கு பிறகு ஆட்சிக்கு வந்த ஜனாதிபதிகளின் அரசாங்கங்களும் திறந்த பொருளாதாரக் கொள்கையையே, பின்பற்றிவந்தன.பெரிய மாறுதல்கள் இருந்தன என்று சொல்வதற்கில்லை. ஆனால் அந்த கொள்கையின் விளைவாகவே நாடு இன்றைய பொருளாதார அவல நிலையை அடைந்திருக்கிறது என்பதே யதார்த்தமாகும்.

எல்லாவற்றுக்கும் மேலாக கரு ஜெயசூரிய ஜெயவர்தனவை சமகால அரசியல்வாதிகள் பின்பற்றக்கூடிய ஒரு தலைவர் (Role Model) என்று வர்ணித்தார். உண்மையில் இன்றைய அரசியல்வாதிகள் மாத்திரமல்ல எதிர்கால அரசியல்வாதிகளும் பின்பற்றக்கூடாத ஒரு தலைவர் என்றுதான் ஜெயவர்தனவைக் கூறமுடியும்.

பிரதீப் தனது பேரன்புக்குரிய பாட்டனார் அறிமுகப்படுத்தியது என்பதால் ஜனாதிபதி ஆட்சிமுறை மீதான பற்றுதலை வெளிக் காட்டியிருக்கக்கூடும். அந்த ஆட்சிமுறையை ஒழிப்பதற்கான முயற்சிகளுக்கு ஒரு முடிவைக்கட்டவேண்டும் என்று பிரதீப் முன்னர் ஒரு தடவை பேசினார் என்பது குறிப்பிடத்தக்கது.

உண்மையில் நாட்டின் அதிகப்பெரும்பான்மையான மக்கள் ஜனாதிபதி ஆட்சிமுறை ஒழிக்கப்படுவதையே விரும்புகிறார்கள். முன்னைய ஜனாதிபதிகளையும் விட கூடுதலான அதிகாரங்களை தன்வசம் வைத்திருந்த ஒரு ஜனாதிபதியை கடந்த வருடம் நாட்டை விட்டு வெளியேறவைத்த மக்கள் கிளர்ச்சியின்போது தவறான ஆட்சிமுறைக்கு எதிராக எழுந்த முழக்கங்கள் அடிப்படையில் ஜனாதிபதி ஆட்சிமுறைக்கு எதிரானவை என்பதில் சந்தேகமில்லை.

அந்த மக்கள் கிளர்ச்சி படைபலம் கொண்டு அடக்கியொடுக்கப்பட்டுவிட்டது என்பதற்காக ஜனாதிபதி ஆட்சிமுறை ஒழிக்கப்படவேண்டும் என்ற மக்களின் விருப்பம் தணிந்துபோய் விட்டது என்று அர்த்தமாகிவிடாது.

கடந்த வருடத்தைய அரசியல் - பொருளாதார நெருக்கடிகளுக்கு மத்தியில் விக்கிரமசிங்கவை பாராளுமன்றம் ஜனாதிபதியாக தெரிவுசெய்த பிறகு கடந்துவிட்ட ஒரு வருடகாலத்தில் அரசியல் உறுதிப்பாடும் பொருளாதார மீட்சிக்கான பாதையில் தெளிவான முன்னேற்றமும் ஏற்பட்டு விட்டது என்று வாதிடுபவர்களில் பலர் அதற்கு பிரதான காரணம் ஜனாதிபதி ஆட்சிமுறையே என்று நியாயம் கற்பிக்கிறார்கள்.

உண்மையில் பாராளுமன்ற ஜனநாயகம் பலவீனப்படுத்தப்பட்டு மக்களின் கருத்துக்களுக்கு மதிப்பளிக்கப்படாமல் எதேச்சாதிகாரப்போக்கு தீவிரமடைந்து அரசியல் உறுதிப்பாடு சீர்குலைந்ததை அடுத்தே நிறைவேற்று ஜனாதிபதி ஆட்சிமுறை ஒழிக்கப்படவேண்டும் என்ற கோரிக்கை மேலெழுந்தது. அடிப்படையில் அந்த ஆட்சிமுறையில் எந்த ஜனநாயக குணாம்சமும் கிடையாது.

கடந்த 45 ஆண்டுகளாக ஜனாதிபதி ஆட்சிமுறையின் கீழ் நாடு இருந்து வந்திருக்கிறது. சுதந்திரத்துக்கு பின்னரான 75 வருடங்களில் இந்த ஆட்சிமுறையின் கீழ்தான் கூடுதலான காலப்பகுதிக்கு நாம் ஆளப்பட்டிருக்கிறோம்.

ஜனாதிபதி ஆட்சிமுறை எவ்வாறு இயங்கி வந்திருக்கிறது? அது எவ்வாறு துஷ்பிரயோகம் செய்யப்பட்டிருக்கிறது? கெடுதியான ஆட்சிமுறைப் போக்குகளுக்கு அது எவ்வாறு வழிவகுத்தது? என்பதையெல்லாம் நாம் அனுபவ வாயிலாக கண்டிருக்கிறோம். பாராளுமன்றம், நீதித்துறை, அரசாங்க சேவை என்று சகல நிறுவனங்களும் ஜனாதிபதி ஆட்சிமுறையின் கீழ் உருக்குலைக்கப்பட்டதன் விளைவுகளை மக்கள் அனுபவித்துக்கொண்டிருக்கிறார்கள். பொறுப்புக்கூறல், சட்டத்தின் ஆட்சி மற்றும் நல்லாட்சியை வரையறுக்கும் சகல ஜனநாயக அரசியல் விழுமியங்களும் உதாசீனம் செய்யப் பட்டிருக்கின்றன.

லிபரல் ஜனநாயக பண்புகளைக் கொண்ட அரசியல் தலைவராக ஒரு காலத்தில் நோக்கப்பட்ட விக்கிரமசிங்க ஜனாதிபதியாக வந்த பிறகு மக்கள் தங்களின் வாக்குரிமையையும் கூட அனுபவிக்கமுடியாத வகையில் தேர்தல்கள் ஒத்திவைக்கப்படுகின்றன. இன்று தேர்தல்கள் குறித்து தீர்மானம் எடுக்கும் அதிகாரமும் ஜனாதிபதியின் கைகளுக்கு போய்விட்டது.

பொருளாதார நெருக்கடியைக் காரணம் காட்டி அடுத்த வருடம் ஜனாதிபதி தேர்தலைக்கூட உரிய நேரத்தில் அரசாங்கம் நடத்தாமல்விடக்கூடும் என்று எதிரணி கட்சிகள் சந்தேகம் கிளப்புகின்றன.

நிறைவேற்று அதிகார ஜனாதிபதி பதவி என்பது

(14ஆம் பக்கம் பார்க்க)

# ஜனாதிபதித் தேர்தல் பின்போகுமானால் பொதுத்தேர்தலுக்கும் அதே கதிதான்!

## ஜே.ஆர். ஆட்சி மீளவருகிறதா?

**பனங்காட்டான்**

இந்த மாத ஆரம்பத்தில் எழுதிய பத்தியில் ஜே.ஆர்.ஜெயவர்த்தன முதலாவது ஜனாதிபதியாக தேர்தல் மூலம் தெரிவாகவில்லையென்பதையும், அரசியலமைப்பில் திருத்தத்தை மேற்கொண்டு தம்மைத்தாமே ஜனாதிபதியாக்கிக் கொண்டாரென்பதையும் குறிப்பிட்டிருந்தேன்.

1977க்குப் பின்னர் 1983ல் இடம்பெற வேண்டிய பொதுத்தேர்தலை சர்வஜன வாக்கெடுப்பின் வழியாக 1989 வரை பின்தள்ளி, நாடாளுமன்றத்தின் பதவிக் காலத்தை பன்னிரண்டு ஆண்டுகளுக்கு நீட்டினார் என்பதையும் அப்பத்தியில் சுட்டியிருந்தேன்.

ஜே.ஆரின் அரசியல் வாரிசான ரணில் விக்கிரமசிங்க மேற்குறிப்பிட்டவைகளில் எவைகளை கடைப்பிடிக்கும் எண்ண வோட்டத்தில் இருக்கிறாரோ தெரியாது என்றும் அடிக்குறிப்பிட்டிருந்தேன். என்ன காலமோ என்ன நேரமோ ரணில் விக்கிரமசிங்க இதில் ஏதோ ஒன்றை அல்லது இரண்டையும் பின்பற்றப் போகிறாரோ என்ற அச்சம் இன்று தென்னிலங்கையில் தோன்றியுள்ளது.

ரணிலின் தலைமையிலான ஐக்கிய தேசியக் கட்சியின் அக்கிராசனர் வஜிர அபேவர்த்தன இது தொடர்பாக வெளியிட்ட ஒரு கருத்தும், இதற்குப் பதிலடியாக முன்னாள் அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் தெரிவித்த கருத்தும் இப்போது பெருமளவில் விமர்சிக்கப் படுகின்றன.

கடந்த பொதுத் தேர்தலில் முழுமையாகத் தோல்வியடைந்த ஐக்கிய தேசிய கட்சிக்கு தேசியப் பட்டியல் மூலம் கிடைத்த ஆசனத் தால் ரணில் நாடாளு மன்ற உறுப்பினரானார். கடந்த வருட அறகலய போராட்டத்தால் பதவி இழந்த கோத பாயவின் ஜனாதிபதி ஆசனத்துக்கு ரணில் நாடாளுமன்றத்தால் தெரி வான தையடுத்து, அவரது தேசியப்பட்டியல் இடத்துக்கு வஜிர அபேவர்த்தன நியமனமானார். 1982ம் ஆண்டிலிருந்து ஐக்கிய தேசியக் கட்சியின் முக்கியஸ்த ர்களுள் ஒருவராக விளங்கும் இவர் ரணிலின் அதிமிகு நம்பிக்கைக்குரியவர்.

2024ம் ஆண்டுக்கான வரவுசெலவுத் திட்டம் எதிர்வரும் நவம்பர் மாதத்தில் நாடாளுமன்றில் சமர்ப்பிக்கப்பட வேண்டும். அடுத்த ஆண்டில்தான் ஜனாதிபதித் தேர்தலும் நடத்தப்பட வேண்டும். எனவே இதற்கான நிதியை நவம்பர் மாத வரவுசெலவுத் திட்டத்தில் ஒதுக்க வேண்டும்.

"2024ம் ஆண்டு வரவுசெலவுத் திட்டத்தில் ஜனாதிபதி தேர்தலுக்கு நிதி ஒதுக்கப்படுமானால், நாட்டு மக்களின் அடிப்படைத் தேவைகளுக்கு நிதிப்பற்றாக்குறை ஏற்படும்" என்று வஜிர அபேவர்த்தன தெரிவித்த கருத்தே, ஜனாதிபதி தேர்தல் பற்றிய சந்தேகங்களையும் கேள்விகளையும் எழுப்பியுள்ளது. தேர்தல்களைக் கேட்பவர்கள் நாட்டின் பொருளாதாரத்தைச் சீர்குலைத்து அதல பாதாளத்துக்கு தள்ள விரும்புகிறார்கள் என்றும் ஒரு குண்டை இவர் தூக்கி வீசியுள்ளார்.

நாடு முழுவதும் உள்ள 340 உள்ளூராட்சிச் சபைகளுக்கு தேர்தல்களை நடத்துவதற்கு வேட்புமனுக்கள் தாக்கல் செய்யப்பட்டு பிரசாரமும் ஆரம்பிக்கப்பட்ட வேளையில் தேர்தலை ரணில் அரசு பின்போட்டது. 8,325 உறுப்பினர்களைத் தெரிவு செய்வதற்கான போட்டியில் 87,000 பேர் வேட்புமனுக்களைத் தாக்கல் செய்திருந்தனர்.



இந்தத் தேர்தலை நடத்த வேண்டுமென நீதிமன்றம் தீர்ப்பு வழங்கிய போதிலும் நிதியின்மையை காரணம் காட்டி நாடாளுமன்றம் ஒத்தி வைத்தது. கடந்த பெப்ரவரி மாதம் இடம்பெற வேண்டிய தேர்தல் இதுவரை இடம்பெறவில்லை. ஆறு மாதங்கள் முடிவடைந்த நிலையில் இத்தேர்தல்களை ரத்துச் செய்யும் முடிவு சில நாட்களுக்கு முன்னர் எட்டப்பட் டது.



**2024இல் ஜனாதிபதி தேர்தலை நடத்தினால் நாட்டு மக்களின் அடிப்படைத் தேவைகளை நிறைவு செய்ய முடியாது போகுமென்ற ஐக்கிய தேசிய கட்சி அக்கிராசனர் வஜிர அபேவர்த்தனவின் அறிவிப்பை அபாய எச்சரிக்கையாகவே பார்க்க வேண்டியுள்ளது. நாடாளுமன்ற ஆட்சியும் நீட்சி பெறும் சாத்தியமுண்டு. உள்ளூராட்சித் தேர்தலுக்கு என்ன நடந்தது என்பது நல்லதொரு பாடம்.**

தேர்தல் பின்போடப்பட்டதால் வேட்புமனுக்களை தாக்குதல் செய்தவர்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்கினர் என்பதால், தேர்தலை ரத்துச் செய்ய சம்பந்தப்பட்ட அமைச்சின் ஆலோசனைக் குழு ஏகமனதான இணக்கம் தெரிவித்துள்ளதாக பிரதமர் தினேஸ் குணவர்த்தனவின் அலுவலகம் தெரிவித்துள்ளது.

வஜிர குணவர்த்தன தெரிவித்துள்ள ஜனாதிபதி தேர்தலுக்கு நிதியின்மையையும், உள்ளூராட்சித் தேர்தலை நிதியின்மை காரணமாக ரத்துச் செய்ய அரசாங்கம் எடுத்துள்ள முடிவையும் ஒரே மேசையில் வைத்து அணுக வேண்டிய நேரம் வந்துள்ளது.

ஜனாதிபதித் தேர்தலுக்கு நிதி இல்லையென்ற அறிவிப்பு ரணில் வெளிநாட்டில் நிற்கும் வேளையில் வந்துள்ளதாயினும், அவரது அனுமதியின்றி இதனை வஜிர அபேவர்த்தன தெரிவித்திருக்க மாட்டார் என்பது நிச்சயம். அதேசமயம் ஐக்கிய தேசிய கட்சியின் உயர்மட்ட முடிவாகவும் இது இருக்கலாம்.

இந்த அறிவிப்புத் தொடர்பாக ரணிலை தொடர்ந்து ஆதரித்து வரும் ராஜபக்சக்களின் பொதுஜன பெரமுன எந்தக் கருத்தையும் இதுவரை வெளியிடவில்லை. ஆனால், பெரமுனவிலிருந்து பிரிந்து தனிக்குழுவாக இயங்கும் முன்னாள் அமைச்சர் ஜி.எல். பீரிஸ் தமது கருத்தை சுடச்சுட பகிரங்கமாக வெளியிட்டுள்ளார்.



நிதியின்மையை காரணமாக்கி ஜனாதிபதி தேர்தலை பின்போட ரணில் திட்டமிடுகின்றாரா என்ற கேள்வியுடன் தமது அறிவிப்பை வெளியிட்டுள்ள இவர்இ முன்னர் பல அரசாங்கங்களில் பல அமைச்சுப் பதவிகளை வகித்தவர். சுயமான அரசியல் கொள்கைகள் இல்லாதவர். பதவிகளுக்காக கட்சிகள் மாறியவர். தேசியப் பட்டியல் வாயிலாகவே நாடாளுமன்ற உறுப்பினராகி அமைச்சர் பதவிகளைப் பெற்றவர் என்பதை கவனத்தில் கொள்ள வேண்டும்.

2019 நவம்பர் மாதத்தில் இடம்பெற்ற தேர்தலில் ஜனாதிபதியாக தெரிவான கோதபாயவின் எஞ்சிய பதவிக் காலத்துக்கே ஜனாதிபதியாக பதவி வகிக்க நாடாளுமன்றத்தால் தெரிவான ரணில் தமது பதவிக்காலத்தை நீடிக்க அதிகாரமற்றவர் என்பது பீரிஸின் வாதம்.

எந்தக் காரணம் கூறியும் கோதபாயவுக்கு மக்கள் வழங்கிய ஐந்து ஆண்டுகள் ஆணையை ரணில் நீடிக்க முடியாது, தேர்தலை பின்போடவும் முடியாதென அடித்துக் கூறியுள்ளார் ஜி.எல்.பீரிஸ். சர்வதேச நாணய நிதியத்திடமிருந்து இரண்டாம் கட்டக் கடனாக 2.9 பில்லியன் அமெரிக்க டாலர்களை பெறுவதை எதிர்வரும் மார்ச் மாதத்தில் நிறைவேற்ற வேண்டிய வேளையில், ஜனாதிபதி தேர்தலை பின்போட எடுக்கப்படும் முயற்சிக்கு சர்வதேச நிதி நிறுவனங்கள் ஆதரவளிக்க மாட்டா எனவும் ஜி.எல்.பீரிஸ் தெரிவித்துள்ளார்.

ஐக்கிய தேசிய கட்சியின் முடிவையே அதன் அக்கிராசனர் வஜிர அபேவர்த்தன வெளிப்படுத்தியுள்ளாரென தாம் கருதுவதாக தெரிவித்துள்ள பீரிஸ், ஜனாதிபதி தேர்தலை பின்தள்ளுவதற்கு எடுக்கப்படும் நடவடிக்கை தொடர்பான தங்கள் நிலைப்பாட்டை பொதுஜன பெரமுன தாமதமின்றி வெளிப்படுத்த வேண்டுமெனவும் கேட்டுள்ளார்.

"நீ காற்று, நான் மரம் - என்ன சொன்னாலும் தலையாட்டுவேன்" என்ற நிலைமையில் ரணிலுடன் இறங்கிச் செல்லும் பெரமுன இதுபற்றிச் சொல்ல என்ன இருக்கிறது. இப்போதுள்ள அவர்களின் அரசியல் நிலைமை அவ்வாறுள்ளது.

பெரமுனவுக்குள் ஜனாதிபதி வேட்பாளர் யார் என்பதை தீர்மானிக்க முடியாதுள்ளது. பசிலா நாமலா என்ற போட்டி ஒருபுறம். இருவரையும் கோதபாய விரும்பவில்லை என்பது இன்னொருபுறம். பெரமுனவிலிருந்து பிரிந்து தனித்தனிக் கூட்டாக இயங்கும் விமல் வீரவன்ச, உதய கம்பன்பில மற்றும் ஜி.எல்.பீரிஸ், டலஸ் அழகப்பெரும ஆகியோர் நிலைப்பாடு மறுபுறம்.

பெரமுனவிலிருந்து ஒரு தொகையினரை தனித்துப் பிரித்தெடுக்க ரணில் விரித்திருக்கும் வலை, சஜித் பிரேமதாச அணியிலிருந்த பலரை இழுத்துவரும் முயற்சிக்கான இன்னொரு வலையென தெற்கின் தலைமைக் கட்சிகள் இழுபாட்டில் நிற்கின்றன.

அமைச்சர் பதவி கேட்டு போராடி வரும் பெரமுனவைச் சேர்ந்த ஊழல் வாதிகளான மஹிந்தானந்த அளுத்கம, றோகித அபேகுணவர்த்தன ஆகியோரை தமது வெளிநாட்டுப் பயணத்தில் கூட்டிச் சென்றிருக்கும் ரணிலின் யுக்தி தனிரகம்.

எல்லாவற்றையும் எண்கணிதத்தில் போட்டுப் பார்த்தால் ஜனாதிபதி தேர்தலை பின்போடக்கூடிய சாத்தியமே அதிகமாகக் காணப்படுகிறது. அப்படியென்றால் பொதுத்தேர்தலும் அதே வழிதான். ஜே.ஆரின் ஆட்சி மீள வருகிறதா?

# நீதித்துறையில் ஆட்சியாளர்களின் தலையீடுகள்! இலங்கையின் சாபக்கேடு!

கந்தையா அருந்தவபாலன்





ஜனநாயக நாடொன்றில் இறைமை அந்நாட்டு மக்களுக்குரித்தானது. மக்களின் சார்பில் அவ்விறைமையைப் பிரயோகிப்பதற்காக அந்நாட்டில் அரசியலமைப்பு ரீதியாக ஆட்சித்துறைக் கட்டமைப்பு மூன்று பிரிவாக உருவாக்கப்பட்டுள்ளன. சட்டவாக்கத்துறை, நிறைவேற்றுத்துறை, நீதித்துறை என்பனவே அவையாகும். இலங்கையில் தேவையான சட்டங்களை ஆக்குகின்ற பாராளுமன்றம் சட்டவாக்கத்துறையாகவும், அச்சட்டங்களின் வழி நின்று நிர்வாகக் கடமைகளை மேற்கொள்ளும் ஜனாதிபதி, அமைச்சர்கள், அவர்களோடிணைந்த பணியாளர்கள் நிறைவேற்றுத்துறையாகவும், இவையுட்பட நாட்டின் சகல பிரிவுகளும் சட்டத்தின் வழியில் செயற்படுவதற்கான கண்காணிப்பையும் நெறிப்படுத்தல்களையும் மேற்கொள்ளும் நீதிமன்றங்களும் நியாய சபைகளும் நீதித்துறையாகவும் வகைப்படுத்தப்படுகின்றன. இத்துறைகள் ஒவ்வொன்றும் சுதந்திரமாகவும் தனித்துவமாகவும் இயங்குவதற்கும் ஒன்றையொன்று மேவாமலும் அதேவேளை ஒன்றுடன் ஒன்று இணைந்து செல்வதற்கும் தேவையான சட்ட ஏற்பாடுகள் அவ்வரசியலமைப்பில் ஏற்படுத்தப்பட்டுள்ளன. நல்லாட்சிப் பண்புகளான ஜனநாயகம், சட்ட ஆட்சி என்பவற்றுக்கு இச்சட்ட ஏற்பாடுகள் மிக அவசியமானவையாகும். தேவையான சட்ட ஏற்பாடுகள் இலங்கை அரசியலமைப்பில் காணப்பட்ட போதும் நிறைவேற்றுத்துறையானது அச்சட்டங்களில் காணப்படும் ஓட்டைகளைப் பயன்படுத்தியும், அது சரிவராத போது தமக்கேற்ற வகையில் சட்டங்களை மாற்றியும், நீதிபதிகளின் பலவீனங்களைத் தமக்குச் சாதகமாக்கியும், சிலவேளைகளில் அவர்களை அச்சுறுத்தியும் இலங்கையின் நீதித்துறைமீது வெளிப்படையாகவும் மறைமுகமாகவும் பல்வேறு வகையில் தலையிடுவதன் மூலம் சட்டவாட்சி, ஜனநாயகம் என்பவற்றை கேள்விக்குறியாக்குவதுடன் நீதித்துறை மீதான மக்களின் நம்பிக்கையையும் சீரழித்து வருவதை நாம் காணக்கூடியதாகவுள்ளது.

நிறைவேற்றுத்துறையின் தலைவர் என்ற வகையில் ஜனாதிபதிக்கு நீதித்துறையில் தலையிடுவதற்கான வாய்ப்புகளை எவ்வாறு அரசியல் அமைப்பு வழங்குகிறது? நீதித்துறையின் முக்கியதூண்களாக இருப்பவர்கள் நீதிபதிகள், சட்டமா அதிபர் மற்றும் இவர்களுக்கு துணையாக இருக்கும் காவல்துறையினர். இலங்கையில் முக்கிய நீதிபதிகளை நியமிக்கும் அதிகாரம் ஜனாதிபதியிடமே உள்ளது. குறிப்பாக பிரதம நீதியரசர் உட்பட உச்ச நீதிமன்ற நீதிபதிகளையும் மேல் முறையீட்டு நீதிமன்ற நிதிபதிகளையும் ஜனாதிபதியே நேரடியாகத் தீர்மானிக்கிறார் என்பதுடன் கீழ்நிலை நீதிமன்றங்களுக்கான நீதிபதிகளை அவரின் செல்வாக்குக்கு உட்படக்கூடிய நீதிச்சேவை ஆணைக்குழு நியமிக்கிறது. உச்ச நீதிமன்ற நீதிபதிகளை அரசியலமைப்புப் பேரவையின் அங்கீகாரத்துடனும், மேன்முறையீட்டு நீதிபதிகளை நீதிச்சேவை ஆணைக்குழுவின் அங்கீகாரத்துடனும் நியமிக்கவேண்டுமென்ற உறுப்புரைகள் அரசியலமைப்பில் இருந்தாலும் அது பெயரளவிலானதொன்றாகவே







நடைமுறையில் காணப்படுகிறது. ஏனெனில் இக்குழுக்களில் இருக்கும் உறுப்பினர்களில் பெரும்பான்மையினர் ஆட்சியாளர்க்கு சார்பானவர்களே. அரசியலமைப்புப் பேரவையில் சபாநாயகர், பிரதமர் ஆகியோருடன் ஜனாதிபதியால் நியமிக்கப்படும் உறுப்பினர்களே கூடுதலாக உள்ளனர். அதேபோல நீதிச்சேவை ஆணைக்குழுவில் பிரதமநீதியரசருடன் ஜனாதிபதியால் நிமிக்கப்படும் மேலும் இரு நீதிபதிகள் உள்ளனர். எனவே தான் விரும்புகின்ற நீதிபதிகளை நியமிப்பதற்கும் தேவையேற்படுமிடத்து இடமாற்றத்தை செய்வதற்கும் இக்குழுக்களின் ஒப்புதலைப் பெறுவது ஜனாதிபதிக்குக் கடினமான விடயமன்று. மறுபுறத்தில் அக்குழுக்களின் உறுப்பினர்களும் ஜனாதிபதியின் விதந்துரைப்புகளை புறமொதுக்கும் நிலையிலிருப்பதில்லை. இதற்குச் சிறந்த மற்றும் அண்மிய எடுத்துக்காட்டாக பிள்ளையான் எனப்படும் சந்திரகாந்தனை பிணையில் விடுவதற்காக ஏலவே ஊழல்குற்றஞ்சாட்டப்பட்ட மாவட்ட நீதிபதி ஒருவரை இடமாற்றம் செய்ததையும், பின்னர் அந்த நன்றிக்கடனுக்காக அந்நீதிபதிக்கு பதவியுயர்வு வழங்கியதையும் குறிப்பிடலாம். ஜனாதிபதியின் விருப்பத்துக்கு மாறாக அரசியலமைப்புப் பேரவையோ அன்றி பிரதம நீதியரசரோ முரண்டு பிடிக்கும்அரிதான சந்தர்ப்பம் ஒன்று ஏற்படுமானால் தமது பாராளுமன்றப் பெரும்பான் மையைப் பயன்படுத்தி அப்பேரவையை அகற்றுவதற் கும் பிரதம நீதியரசரை வீட்டுக்கு அனுப்புவதற்கும் கூட ஆட்சியாளர் தயங்கியதில்லை. இதற்குச் சிறந்த எடுத்துக் காட்டாக 2016 இல் மஹிந்த ராஜபக்ஷ அரசியல மைப்புப் பேரவைக்குப் பதிலாக பாராளுமன்றத் தெரிவுக்குழுவை உருவாக்குவதற்கான அரசியலமைப்புத் திருத்தத்தைக் கொண்டு வந்ததையும் பிரதம நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்கவுக்கு எதிராக முறையற்ற வகையில் குற்றப் பிரேரணையொன்றை நிறைவேற்றி பதவியிலிருந்து அவரைஅகற்றியதையும் குறிப்பிடலாம். அதுமட்டுமன்றி அப்பிரதம நீதியரசர் பதவிக்கு ஒரு போதுமே நீதிபதியாக பதவி வகிக்காத மொஹான் மைத்திரி பீரிஸ் என்பவரை மஹிந்த நியமித்தமை இன்னொருமோசமான தலையீடு.

நீதித்துறையில் நிறைவேற்றுத்துறை செல்வாக்குச் செலுத்துவதற்கு அரசியலமைப்பு ரீதியாக வழங்கப்பட்டுள்ள இன்னொரு வாய்ப்பு சட்டமா அதிபர் பதவி. இலங்கை அரசாங்கத்தின் முதன்மை வழக்குத் தொடுநர் சட்டமா அதிபராவர். அரசாங்கத்தின் சார்பில் வழக்குத் தொடுப்பது, நீதிமன்றில் தோன்றுவது மட்டுமல்ல வழக்குகளை விலக்கிக் கொள்வது யாவும் இவரின் அதிகாரத்துக்குட்பட்டது. யாரைச் சட்டமா அதிபராக நியமனம் செய்வது என்பதும் ஜனாதிபதியின் விருப்பத்துக்கு உட்பட்டதே. ஏலவே சுட்டிக்காட்டியது போலவே இந்நியமனத்திலும் அரசியலமைப்புப் பேரவை வெறும் இறப்பர் முத்திரையே என்பதை கடந்த கால சட்டமா அதிபர் நியமனங்களிலிருந்து அறிந்து கொள்ளலாம். இந்தவகையில் ஆட்சியாளர்கள் தமக்கு

> **ஒரு நாட்டில் சட்ட ஆட்சியும் மக்களின் ஜனநாயக உரிமைகளும் பாதுகாக்கப்பட வேண்டுமெனில் அந்நாட்டின் நீதித்துறை சுதந்திரமாக இயங்க அனுமதித்தல் அவசியமாகும்.**

இசைவானவர்களை இப்பதவிக்கு நியமிப்பதன் மூலம் யார்மீது வழக்குத் தொடுப்பது, யார்மீது வழக்குத் தொடுக்காதிருப்பது, யார்மீதான வழக்கை விலக்கிக் கொள்வது என்பவற்றை நிறைவேற்றிக் கொள்கிறார்கள். பிள்ளையான் மீதான வழக்கை விலக்கிக் கொண்டது உட்பட முன்னாள் பிரதி அமைச்சர் சந்தன கத்ரியாராச்சி மீதான கொலை வழக்கு, துமிந்த சில்வா மீதான பாலியல் வன்புணர்வு வழக்கு மற்றும் கொலை வழக்கு போன்ற பலவழக்குகள் விலக்கப்பட்டதன் காரணமாக குற்றவாளிகள் காப்பாற்றப்பட்டுள்ளார்கள். இது போலவே பஸில், கோத்தாபய உட்பட முன்னாள் இந் நாள் அமைச்சர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள் போன்றோர் மீதான ஊழல் வழக்குகள் தகுந்த சான்றுகள் இல்லை என்ற காரணத்தை முன்வைத்து விலக்கிக் கொள்ளப்பட்டன. ஜோசப் பரராஜசிங்கம், இரவிராஜ் போன்ற பல தலைவர்கள், திருகோணமலை மாணவர்கள் போன்றுபல தமிழர்களை கொன்றவர்கள் போதிய சாட்சிகள் மற்றும் சான்றுகளுடன் நிரூபிக்கப்பட்டிருந்தும் அவர்கள் அனைவரும் விடுவிக்கப்பட்டனர்.

அரசியலமைப்பு ரீதியாக ஜனாதிபதிக்கு வழங்கப்பட்டுள்ள பொது மன்னிப்புக்கான அதிகாரமும் நீதித்துறைமீதான அப்பட்டமான தலையீடாகும். இதற்கான அண்மைய எடுத்துக்காட்டாக "றோயல்பார்க்' கொலை வழக்கில் மரண தண்டனை விதிக்கப்பட்ட ஜூட் ஜெயமஹா என்பவருக்கு முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவினால் வழங்கப்பட்ட மன்னிப்பைக் குறிப்பிட முடியும். நல்ல நோக்கில் பயன்படுத்துவதற்காக அரசியலமைப்பினால் நிறைவேற்றுத்துறைக்கு வழங்கப்பட்டுள்ள இவை போன்ற வாய்ப்புகள் பெரும்பாலும் தவறான முறைகளிலேயே பயன்படுத்தப்பட்டுள்ளன.

அரசியலமைப்புக்கு அப்பால் சட்டங்களை ஆக்குவதன் மூலமும் நீதித்துறையின் கடமைகளை ஆட்சியாளர்கள் கையகப்படுத்திக் கொள்கிறார்கள். பயங்கரவாதத் தடைச்சட்டம் அவ்வாறான ஒன்று. இதன்கீழ் நீதிமன்றம் செய்ய வேண்டிய கடமை பாதுகாப்பு அமைச்சர், செயலாளர் போன்ற ஒரு சிலரின் கைகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. இச்சட்டத்தின் கீழ் எவ்வித விசாரணைகளுமின்றி பல வருடங்களாகநூற்றுக் கணக்கான தமிழர்கள் அடைத்து வைக்கப்பட்டமை நீதித்துறை மீதான மிக மோசமானதலையீடாகும். அதே போல பொது மக்கள் பாதுகாப்புச் சட்டம் , அவசரகாலச் சட்டம் என்பனவும் நீதித்துறை மீதான மறைமுகத் தலையீடு தான்.

சட்டரீதியான வாய்ப்புகளுக்கு மேலாக நீதிபதிகளின் பலவீனங்களையும் ஆட்சியாளர்கள் தமக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொள்கின்றனர். பணம், பொருள், பதவியுயர்வு, ஓய்வின் பின்னரான உள்நாட்டு, வெளிநாட்டு கௌரவப் பதவிகள் போன்றவற்றுக்காக ஏங்கக்கூடிய நீதிபதிகளைஆட்சியாளர் விலைக்கு வாங்கி தமது நோக்கங்களை அடைந்து கொள்கின்றனர். "பல வருடங்களாக குற்றவாளிகளைக் காப்பாற்றும் தொழிலைச் செய்த ஒருவர் நீதிபதியாக வந்தபின் நேர்மையாக இருப்பாரா?" என்ற கேள்வி எல்லோருக்கும் பொருந்தாவிட்டாலும் பலருக்குப் பொருந்துவதை நடைமுறையில் காணமுடிகிறது. நீதிபதிகள் எவ்வாறு தவறிழைக்கிறார்கள் என்பதற்கு முன்னாள் பிரதம நீதியரசர் சரத். என். சில்வா 'ஹெல்பிங் ஹம்பாந்தோட்ட' வழக்கில் மஹிந்த ராஜபக்ஷவை விடுவித்து தான் வழங்கிய தீர்ப்பை பின்னர் தவறென்று அவரே விமர்சித்திருந்தமை நல்லதொரு எடுத்துக்காட்டு. நீதிமன்றப் படிமுறைகளுக்கேற்ப நீதிபதிகள் ஓய்வு பெறுவதற்கான வயது வேறுபாடு கூட சிலநீதிபதிகள் தவறாக நடப்பதற்குத் தூண்டுவதாகச் சுட்டிக்காட்டப்படுகிறது.

அடுத்தது காவல்துறை. நீதிமன்றங்கள் சரியான தீர்ப்புகளை வழங்குவேண்டுமெனில் சட்டத்தரணிகள் மட்டுமல்ல காவல்துறையினரும் கண்ணியமானவர்களாக இருக்கவேண்டும். ஏனெனில் புரியப்பட்ட குற்றங்கள் தொடர்பாக காவல்துறை பக்கச்சார்பற்றும் துல்லியமாகவும் அணுகி சான்றுகளை நீதிமன்றத்துக்கு சமர்பித்தால் தீர்ப்புகளும் நீதியானவையாக இருக்கும். காவல்துறை கண்ணியமாக இருக்க வேண்டுமெனில் அரசியல் மற்றும் அதிகார அழுத்தங்கள் இல்லாது சுதந்திரமாக இயங்க அத்துறை அனுமதிக்கப்பட வேண்டும். ஆனால் இலங்கையின் காவல்துறை முற்று முழுதாக அரசியல் மயப்படுத்தப்பட்ட ஒன்றாக உள்ளது. நியமனங்கள், பதவியுயர்வுகள், இடமாற்றம் போற்றவற்றில் அரசியல் தலையீடுகள், இலஞ்சம், ஊழல், அதிகார முறைகேடுகள் என்பற்றில் உழலும் ஒருதுறையாகவே இலங்கையின் காவல் துறை நோக்கப்படுகிறது. காவல்துறை மாஅதிபரை நியமனஞ் செய்யும் அதிகாரம் ஜனாதிபதியின் கையில் இருப்பது போல மாவட்டத்துக்கு, பிரதேசத்துக்கு, குறிப்பிட்ட பணிகளுக்குப் பொறுப்பான காவல்துறை அதிகாரிகளை நியமிப்பதில் அரசியல் வாதிகளின் செல்வாக்கே பெரிதும் காணப்படுகிறது. இதனால் ஆட்சியாளரின் விருப்பத்துக்கேற்ப உண்மைச்சான்றுகளை அழித்தல், போலிச்சான்றுகளை உருவாக்கல், சான்றுகள் எவையும் இல்லையெனக் கைவிரித்தல், உண்மையான குற்றங்களைக் கண்டும் காணதிருத்தல், இல்லாத குற்றங்களைப் புனைதல் போன்றனவெல்லாம் இயல்பானவையாக மாறிவிட்டன. இவ்வகையில் காவல்துறை மக்களுக்கு விசுவாசமாக இருப்பதற்குப் பதிலாக ஆட்சியாளர்க்கும் குற்றவாளிகளுக்கும் விசுவாசமாக இருந்தால்நீதிமன்றங்களால் எவ்வாறு சரியான தீர்ப்புகளை வழங்க முடியும்?

ஒரு நாட்டில் சட்ட ஆட்சியும் மக்களின் ஜனநாயக உரிமைகளும் பாதுகாக்கப்பட வேண்டுமெனில் அந்நாட்டின் நீதித்துறை சுதந்திரமாக இயங்க அனுமதித்தல் அவசியமாகும். இதைவிடுத்து இலங்கையில் இன்று இருப்பது போல நிறைவேற்றுத்துறை குறிப்பாக ஜனாதிபதி சட்டரீதியானமுறையிலும் சட்டரீதியற்ற முறையிலும் சுதந்திரமாக இயங்க வேண்டிய ஏனைய இரு துறைகளானசட்டவாக்கத்துறையையும் நீதித்துறையையும் தன்வசப்படுத்தினால் அது அந்நாட்டுக் குச்சாபக்கேடாகவே அமையும் என்பது நிதர்சனம்.

# இந்தியாவின் ‘அரிசி அரசியல்’!



## இந்திய ஏற்றுமதித் தடையால் உலகில் எகிறும் அரிசி விலை!

மேற்கு வல்லரசுகள் மீது அதிருப்தி அடைந்த வளர்ச்சி அடையும் நாடுகளை கடனுதவியாலும், பல்வேறு கட்டமைப்புத் திட்டங்களில் பங்கெடுக்க வைத்தும் தன் பக்கம் ஈர்த்திருக்கிறது சீனா. சீனாவிலிருந்து தனது அணுகுமுறையில் வித்தியாசப்படும் இந்தியாவை அந்த நாடுகள் இப்போது நம்பிக்கையுடன் பார்க்கத் தொடங்கியிருக்கின்றன.

தெற்குலக நாடுகளுக்குத் தலைமை தாங்குவது என்பது எளிதொன்றுமல்ல. அந்த நாடுகளின் எதிர்பார்ப்புகளை நிறைவேற்றும் பொருளாதார வலிமையும், உற்பத்தித் திறனும் இல்லாதவரை அது வெறும் பகல் கனவாகத்தான் இருக்கும். உலகமயச் சூழலில் சர்வதேச அரசியல் நகர்வுகளை மேற்கொள்ள விழையும் இந்தியா, பல தர்மசங்கடங்களை எதிர்கொள்கிறது. அவற்றில் மிக முக்கியமான ஒன்று, தற்போதைய அரிசி ஏற்றுமதி குறித்த இந்திய அரசின் முடிவு.

இந்திய உள்நாட்டு சந்தையில் அரிசி விலை அதிகரித்ததால், ஜூலை மாதமே பாசுமதி அல்லாத வெள்ளை அரிசியின் ஏற்றுமதிக்குத் தடைவிதிக்கப்பட்டது. ஏற்கெனவே ஓராண்டுக்கு முன்பு, அனுமதியில்லாமல் குருணை அரிசி ஏற்றுமதி செய்யப்படுவது தடை செய்யப்பட்டிருக்கிறது. கடந்த மாதம் மெட்ரிக் டன்னுக்கு 1,200 டாலருக்கும் குறைவான விலையில் ஏற்றுமதி செய்யப்படும் பாசுமதி அரிசிக்கு மத்திய அரசு தடை விதித்தது. சாதாரண அரிசியை பாசுமதி அரிசி என்கிற பெயரில் சட்டவிரோதமாக ஏற்றுமதி செய்யப்படுவதைத் தடுப்பதுதான் அந்த முடிவுக்குக் காரணம்.

இந்தப் பின்னணியில் இப்போது அக்டோபர் 15ஆம் தேதி வரை புழுங்கல் அரிசிக்கு 20 வீத ஏற்றுமதி வரி விதிக்கப்பட்டிருக்கிறது. அரிசி ஏற்றுமதியின் மீது இந்தியா ஒன்றன்பின் ஒன்றாக விதிக்கும் கட்டுப்பாடுகள் சர்வதேச அரங்கில் கடுமையான அதிருப்தியை ஏற்படுத்தி இருக்கின்றன.

உலக அரிசி சந்தையில் மிக அதிகமாக ஏற்றுமதி செய்யும் (45 வீதம்) நாடாக இந்தியா இருந்து வருகிறது. முந்தைய நிதியாண்டுடன் ஒப்பிடும்போது, ஏப்ரல் - மே 2023-இல் இந்தியாவின் அரிசி ஏற்றுமதி 21.1 வீதம் அதிகம். மே மாதம் பாசுமதி அரிசியின் ஏற்றுமதி கடந்த ஆண்டைவிட 10.86 வீதம் அதிகம். வெள்ளை அரிசியின் மீது ஏற்றுமதி வரியும், குருணை ஏற்றுமதிக்குத் தடை இருக்கும் நிலையிலும்கூட பாசுமதி அல்லாத அரிசி ரகங்களின் ஏற்றுமதி 7.5 வீதம் அதிகரித்திருக்கிறது.

கடந்த 10 ஆண்டுகளாக உலகின் மிக அதிக அரிசி ஏற்றுமதி செய்யும் நாடாக இருக்கும் இந்தியா, தனது வேளாண் உற்பத்தியில் 19 வீத அளவை ஏற்றுமதி செய்கிறது. உலகிலுள்ள வளர்ந்து வரும் நாடுகள் பலவும் தங்களது அரிசி தானியத் தேவைக்கு இந்தியாவைத்தான் நம்பியிருக்கின்றன. சர்வதேச விலையைவிட இந்திய அரிசியின் விலை குறைவு என்பது அதற்குக் காரணமாக இருக்கக் கூடும்.

இந்தியாவின் அரிசி ஏற்றுமதியில், ரூ. 51,089 கோடி மதிப்புள்ள 1.77 கோடி டன் பாசுமதி அல்லாத அரிசி ரகங்கள் பெரும் பங்கு வகிக்கின்றன. 2022 - 23 -இல் ரூ.38,542 கோடி மதிப்புள்ள 45 லட்சம் டன் பாசுமதி அரிசி ஏற்றுமதி செய்யப்பட்டிருக்கிறது.

இந்தியாவின் அரிசி உற்பத்தியில், குறிப்பாக பாசுமதி ரக அரிசி உற்பத்தியில் பஞ்சாபும், ஹரியாணாவும் பெரும் பங்கு வகிக்கின்றன. நடப்பு ஆண்டில் ஜூலை - ஆகஸ்ட் மாதம், பஞ்சாப் மாநிலத்தில் வெள்ளப் பெருக்கு ஏற்பட்டது. சுமார் 23 மாவட்டங்களில் நெல் சாகுபடிப் பரப்பு சற்று குறைவாகவும் இருந்தது. அப்படியிருந்தும் முந்தைய சாதனைகளையெல்லாம் முறியடித்து இதுவரை இல்லாத அளவிலான அரிசி உற்பத்தியை பஞ்சாப் மாநிலம் சாதித்திருக்கிறது.

நடப்பு காரீஃப் பருவத்தில் 5.87 லட்சம் ஹெக்டேர் பாசுமதி ரகம் உள்பட 31.93 லட்சம் ஹெக்டேர் நெல் பயிரிடப்பட்டிருக்கிறது. சர்வதேச அரிசி விலை உச்சத்தில் இருக்கும் நிலையில், பஞ்சாப் விவசாயிகள் பெரும் லாபம் ஈட்டக் காத்திருக்கிறார்கள்.

சர்வதேச சந்தையில் இந்த ஆண்டு பாசுமதி அரிசியின் விலை உச்சத்தைத் தொடும் நிலையில், உள்நாட்டு விலை குவிண்டாலுக்கு ரூ.4,500 அளவுக்கு உயரக்கூடும் என்பது எதிர்பார்ப்பு. அதனால்தான் பஞ்சாப் விவசாயிகள் வழக்கமான பயிர்களை நடாமல், ஏற்றுமதிக்கு உகந்த பாசுமதியைப் பயிரிட முனைந்திருக்கிறார்கள். இப்படிப்பட்ட சூழலில்தான் மத்திய அரசு உள்நாட்டு விலையைக் கட்டுக்குள் வைப்பதற்காக சில நடவடிக்கைகளை மேற்கொள்ள முற்பட்டிருக்கிறது.

பஞ்சாப் விவசாயிகள் மட்டுமல்ல, தங்களது உணவுத் தேவைக்கு இந்தியாவை நம்பியிருக்கும் பல நாடுகளும் அரசின் முடிவால் ஏமாற்றத்தை எதிர்கொள்ளக் கூடும். இந்தியாவுடன் நல்லுறவைப் பேணும் கினி, சிங்கப்பூர், மொரீஷியஸ், பூடான் உள்ளிட்ட நாடுகள், அவற்றுக்கான ஏற்றுமதிக்கு தளர்வுகளை வழங்கக் கோரி இருக்கின்றன.

இந்தியாவுக்கு அடுத்தபடியாக அரிசி ஏற்றுமதி செய்யும் தாய்லாந்தும், வியட்நாமும் தங்களுக்கு சாதகமாக இந்த நிலைமையைப் பயன்படுத்த முற்பட்டாலும், எல்-நினோ காரணமாக அவர்களது உற்பத்தியும் பாதிக்கப்பட்டிருப்பதால் விரைவிலேயே இந்தியாவின் முடிவை அவர்களும் மேற்கொள்ளக் கூடும்.

இந்தியாவின் முடிவால் சர்வதேச அரிசி விலை அதிகரித்து, பல நாடுகள் உணவுப் பாதுகாப்பு அச்சுறுத்தலை எதிர்கொள்ள நேரிடும். அதனால் இந்தியாவுக்கு சர்வதேச அரங்கில் அவப்பெயர் ஏற்படக் கூடும்.

கட்டுப்பாடு விதிப்பது, தடை விதிப்பது ஆகியவற்றால் விவசாயிகள் பாதிக்கப்படாமல் இருக்க சர்வதேச விலையில் அரசே உற்பத்தியை வாங்கிக்கொண்டு, அதைக் குறைந்த விலைக்கு சந்தையில் விற்பதன் மூலம் உள்நாட்டு விலையை கட்டுக்குள் வைத்திருப்பது என்பதுதான், தேர்தலை எதிர்கொள்ளும் அரசு எடுக்க வேண்டிய சாதுரியமான முடிவு. அதனால் அரசுக்கு இழப்பு நேரிடலாம் ஆனால், எதிர்ப்பு வலுக்காது!

(தினமணி)

# மனிதன் பயன்படுத்திய ஐந்து இலட்சம் ஆண்டுகள் பழைமையான மரக்கட்டைகள்!





## வரலாற்றை புரட்டிப்போடும் கண்டுபிடிப்பு

ஷாம்பியாவில் உள்ள ஓர் ஆற்றங்கரையில் பண்டைய கால மரக்கட்டைகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இவை பழங்கால மனித வாழ்க்கை பற்றிய தொல்லியல் ஆய்வாளர்களின் புரிதலையே புரட்டிப்போடும் விதத்தில் உள்ளன.

சுமார் ஐந்து லட்சம் ஆண்டுகளுக்கு முன்பே மனிதன் தமக்கான கட்டமைப்பை உருவாக்க மரத்தைப் பயன்படுத்தி இருப்பதற்கான சான்றுகளையும் ஆராய்ச்சியாளர்கள் கண்டறிந்துள்ளனர்.

ஆய்வாளர்கள் கண்டறிந்துள்ள இந்தச் சான்றுகள், கற்கால மனிதனின் தங்குமிடங்களாக இருந்ததைக் காட்டுவதாக, ‘நேச்சர்’ ஆய்விதழில் வெளியிடப்பட்டுள்ள கட்டுரையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

“இந்தக் கண்டுபிடிப்பு நமது ஆரம்பக்கால மூதாதையர்களைப் பற்றி இதுநாள் வரையில் எனக்கு இருந்த புரிதலை மாற்றியுள்ளது,” என்கிறார் தொல்பொருள் ஆய்வாளர் லாரி பர்ஹாம்.

லிவர்பூல் பல்கலைக்கழகத்தின் விஞ்ஞானி தலைமையிலான குழு, மனித இனத்தின் ஆழமான வேர்களைத் தேடி ஆய்வு மேற்கொண்டது. குறிப்பாக, பழங்காலத்தில் மரங்கள் பயன்பாட்டில் இருந்தனவா என்பது குறித்து இந்தக் குழு ஆய்வு செய்தது.

இந்தக் கண்டுபிடிப்பு பழங்கால மனிதர்கள் எளிமையான, நாடோடி வாழ்க்கை நடத்தியதாகக் கருதும் தற்போதைய நமது எண்ணத்தை மாற்றியமைக்கக் கூடும்.

“பண்டைய கால மனிதர்கள் மரத்திலிருந்து புதிய மற்றும் பெரிய ஒரு பொருளை உருவாக்கியதாக,” கூறுகிறார் பேராசிரியர் பர்ஹாம்.

“அவர்கள் தங்களின் புத்திசாலித்தனம், கற்பனை மற்றும் திறன்களைப் பயன்படுத்தி, தங்களது காலத்துக்கு முன்பும், பின்பும் பார்த்திராத ஒன்றை உருவாக்கினர்,” என்கிறார் பர்ஹாம்.

மரக்குச்சிகள் உள்ளிட்ட பழங்கால மரப் பொருட்களை ஆராய்ச்சியாளர்கள் தங்களது ஆய்வில் கண்டுபிடித்தனர். ஆனாலும் அவற்றில், ஒன்றுக்கொன்று செங்குத்தான நிலையில் கண்டெடுக்கப்பட்ட இரண்டு மரக்கட்டைகள் தான் அவர்களை வியப்பில் ஆழ்த்தியுள்ளன.

“ஒன்றன் மீது ஒன்று சாய்த்து வைக்கப்பட்டது போன்ற நிலையில் காணப்பட்ட அவற்றில் வெட்டுகளும் இருந்தன என்கிறார் ஆய்வுக் குழுவின் உறுப்பினரும், அபெரிஸ்ட்வித் பல்கலைக்கழகத்தின் புவியியல் பேராசிரியருமான ஜெஃப் டல்லர்.

“இந்த மரக்கட்டைகளில் உள்ள வெட்டுகள், கல்லால் ஆன கருவியால் ஏற்பட்டவை என்பதை நாம் தெளிவாகக் காணலாம்”

“இது இரண்டு மரக்கட்டைகளையும் ஒன்றாகப் பொருத்தி ஒரு கட்டமைப்பாக ஆக்குகிறது” என்கிறார் டல்லர்.

இந்த மரக்கட்டைகள் சுமார் 4.76 லட்சம் ஆண்டுகள் பழமையானவை என்பது மேற்கொண்டு செய்யப்பட்ட பகுப்பாய்வு மூலம் உறுதி செய்யப்பட்டுள்ளது.

நெருப்பை உருவாக்குவதற்கும் குச்சிகள், ஈட்டிகள் போன்ற தற்காப்புக் கருவிகளை உருவாக்குவதற்கும் தான் மனிதன் மரத்தைப் பயன்படுத்தி வந்தான் என்பதே இதுவரை நமது புரிதலாக உள்ளது.

ஆனால், “மனிதனுக்கும், மரத்துக்குமான தொடர்பு பழங்கால பாரம்பரியம் வரை ஆழமாக வேரூன்றி இருப்பத்தை அறிந்து நான் ஆச்சரியப்பட்டேன். நாங்கள் அசாதாரணமான ஒன்றைக் கண்டுபிடித்துள் ளோம்,” என்று எனக்குப் புரிந்தது என்கிறார் ஷாம்பியாவில் உள்ள லிவிங்ஸ்டோன் அருங்காட்சியகத்தைச் சேர்ந்த குழு உறுப்பினரான பெரிஸ் நகோம்ப்வே.

பிரிட்டனின் எசெக்ஸுக்கு உட்பட்ட கிளாக்டன் பகுதி யில் மணலில் புதைந்திருந்த மர ஈட்டி , கடந்த 1911இல் கண்டெடுக்கப்பட்டது. உலகின் பழமையான மரக் கண்டுபிடிப்புகளில் ஒன்றாகக் கருதப்பட்ட அது, 4,00,000 ஆண்டுகள் பழமையானதாக மதிப்பிடப்பட்டிருந்தது.

ஆனால், ஷாம்பியா - தான்சானியா எல்லைக்கு அருகில் உள்ள கலம்போ நீர்வீழ்ச்சிக்கு மேலே வளைந்து செல்லும் ஆற்றங்கரையில் தற்போது இரு மரக்கட்டைகள் கண்டெடுக்கப்பட்டுள்ளன.

ஆயிரக்கணக்கான ஆண்டுகளாக இவை தண்ணீரில் மூழ்கியிருப்பதாக கருதிய ஆராய்ச்சியாளர்கள், அவற்றின் காலத்தை லுமினென்சென்ஸ் டேட்டிங் தொழில்நுட்பம் மூலம் கணக்கிட்டனர்.

அதில், எந்த வகையான பண்டைய மனிதர்கள் அல்லது மனித இனங்கள் இவற்றை உருவாக்கியது என்பதைத் தெளிவாகக் கணிக்க இயலவில்லை. மேலும், இந்த மரக்கட்டைகள் கண்டெடுக்கப்பட்ட இடத்தில் இதுவரை எலும்புகள் எதுவும் கிடைக்கவில்லை.

ஆனால், 3,15,000 ஆண்டுகள் பழமையான நாகரிக மனிதன் அல்லது ஹோமோசேபியன் புதைபடிவங்களைவிட இந்த மரக்கட்டைகள் மிகவும் பழமையானவை என்பது மட்டும் டேட்டிங் தொழில்நுட்ப ஆய்வில் தெரிய வந்தது.

இரண்டு மரக்கட்டைகளில், சிறியதான ஒன்றின் நீளம் சுமார் 1.5 மீ ( 5 அடி). அதை மற்றொன்றுடன் பொருத்தி ஏதோவொரு கட்டமைப்பு உருவாக்கப்பட்டிருக்கும்.

ஆனால் அது ஒரு குடிசை அல்லது நிரந்தர வசிப்பிடமாக இருந்திருக்க வாய்ப்பில்லை என்று கூறும் ஆய்வுக் குழுவினர், அது ஒரு தங்குமிடத்திற்கான தளத்தின் ஒரு பகுதியாக இருந்திருக்கலாம் என்று கூறுகின்றனர்.

ஆற்றங்கரையில் அமர்ந்து மீன் பிடிப்பதற்கு வசதியான ஒரு கட்டமைப்பாக இருந்திருக்கலாம் என்றும் பேராசிரியர் டல்லர் கூறினார்.

ஆனால் அவை எந்த வகையான கட்டமைப்பாக இருந்திருக்கும் என்பதைத் திட்டவட்டமாக சொல்வது கடினம் எனவும் அவர் தெரிவித்தார்.

# இயற்கை வளம் காப்போம்

இராதாகிருஷ்ணன்



வடக்கு ஆப்பிரிக்காவில் உள்ள மொராக்கோவில் சமீபத்தில் ஏற்பட்ட சக்தி வாய்ந்த நில நடுக்கத்தால் மூவாயிரத்திற்கும் அதிகமானோர் உயிரிழந்து விட்டதாகவும், ஆறாயிரத்திற்கும் அதிகமானோர் காயமடைந்துள்ளதாகவும், ஆயிரக்கணக்கான மக்கள் வீடுகளை இழந்துவிட்டதாகவும் கூறப்படுகிறது. இந்த நிலநடுக்கம் ரிக்டர் அளவுகோலில் 6.8 ஆகப் பதிவாகியுள்ளது.

மொராக்கோவின் நான்காவது பெரிய நகரான மரகேஷிலும், தெற்கில் பல பகுதிகளிலும் ஏராளமான மக்கள் உயிரிழந்துள்ளனர். நாட்டின் மூன்றில் ஒரு பகுதி நிலநடுக்கத்தால் பாதிக்கப்பட்டிருப்பதால் பலி எண்ணிக்கை இன்னும் அதிகரிக்கக் கூடும் என்று தெரிகிறது.

ஆப்பிரிக்க புவித் தகடும், யூரோ ஆசிய புவித் தகடும் ஒன்றையொன்று சந்திக்கும் அட்லஸ் மலைத்தொடர் பகுதியில் அவ்வப்போது நிலநடுக்கம் ஏற்பட்டு வருகிறது. இதுஅட்லஸ் மலைத்தொடரைத் தொடர்ந்து மேல்நோக்கித் தள்ளும் உந்துதலுடன் தொடர்புடையதாக இருக்கும்.

அடிப்படையில், மொராக்கோ நில நடுக்கம் நிகழும் இடம் இல்லை என்றும், கண்டங்களைச் சுமந்து நகரும் கண்டத் தட்டுகள் இடையே மோதல் ஏற்படும் போது நிலநடுக்கம் ஏற்படுகிறது என்றும், மரகேஷுக்கு தென்மேற்கே 71 கி.மீ. தொலைவில் உள்ள ஹை அட்லஸ் மலைகளில் 18.5 கி.மீ. ஆழத்தில் நில நடுக்க மையம் கொண்டிருந்தாகவும் அமெரிக்க புவியியல் ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

இந்த நிலநடுக்கத்தின் அதிர்வுகள் ஸ்பெயின், போர்த்துக்கல், அல்ஜீரியா உள்ளிட்ட நாடுகளிலும் உணரப்பட்டன. நிலநடுக்கத்தால் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ள அட்லஸ் மலைத் தொடரில் உள்ள தொலைதூர கிராமங்களுக்குச் செல்வதில் பெரும் சிரமம் இருப்பதாகவும், மலையிலுள்ள கிராமங்கள் நாட்டின் மற்ற பகுதிகளிலிருந்து துண்டிக்கப்பட்டுள்ளதாலும், அங்குள்ள மக்கள் பசி, பட்டினியால் வாடுவதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இயற்கையின் சீற்றம் மொராக்கோவைத் தாண்டி வட ஆப்பிரிக்காவில் உள்ள லிபியாவையும் சீண்டியுள்ளது. இந்நாட்டின் வடக்கே மத்திய தரைக் கடலும், கிழக்கில் எகிப்து, தென்கிழக்கில் சூடான், தெற்கில் சாட் நைஜர் ஆகியனவும், மேற்கில் அல்ஜீரியா, துனீசியா ஆகியனவும் எல்லைகளாக அமைந்துள்ளன. இதன் தலைநகர் திரிபாலி ஆகும்.

லிபியாவில் சர்வாதிகார ஆட்சி செலுத்தி வந்த கடாஃபியின் ஆட்சியை நேட்டோவின் ஆதரவுடன் கிளர்ச்சியாளர்கள் கடந்த 2011-ஆம் ஆண்டு கவிழ்த்தனர். அதன் பிறகு பல்வேறு ஆயுதக் குழுக்கள் மோதிக் கொண்ட, அமைதியற்ற சூழலில், அந்த நாட்டின் மேற்குப் பகுதியில் திரிபாலியைக் தலைநகராகக் கொண்ட ஓர் அரசும், அதற்குப் போட்டியாக கிழக்கே மற்றோர் அரசும் இயங்கி வருகின்றன.

மத்தியதரைக் கடலின் ஒரு பகுதியான அயோனியன் கடல் பகுதியில் உருவாகிய சக்தி வாய்ந்த 'டேனியல்' புயல், பங்காசி பகுதியில் கரையைக் கடந்தது. அப்போது மணிக்கு 165 கிலோ மீட்டர் வேகத்தில் காற்று வீசியது. அப்போது பெய்த கனமழையில், அந்தப் பகுதியில் மலையிலிருந்து பாயும் வாடி டெர்ணா நதியின் குறுக்கே கட்டப்பட்டிருந்த அணை மிகப் பெரிய சத்தத்துடன் வெடித்து உடைந்து சிதறியது.

மலையின் அடிவாரத்தில் அமைந்திருந்த, டெர்ணா நகருக்குள் வெள்ளம் வெகு சீற்றத்துடன் சுனாமி போல் பாய்ந்து, அங்கிருந்த இரண்டு அணைகளையும், நான்கு பாலங்களையும் வீடுகளை உடைத்து அவற்றின் இடிபாடுகளையும், அங்கிருந்த வாகனங்கள் உள்ளிட்ட பிற பொருள்களையும் அருகிலுள்ள கடலுக்குள் அடித்துச் சென்றுள்ளது. நாட்டின் பெரும் பகுதி நீரில் மூழ்கி விட்டது.

'நான் இதைக் கண்டு அதிர்ச்சியடைந்து உறைந்து போனேன். இது ஒரு சுனாமி போன்றது. டெர்ணாவின் தெற்கே உள்ள அணைகளில் ஒன்று உடைந்து விழுந்ததால் நகரின் பெரும் பகுதி கடலுக்குள் இழுத்துச் செல்லப்பட்டது. ஒரு பெரிய ஊர் அழிந்து விட்டது. பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை ஒவ்வொரு மணி நேரமும் அதிகரித்து வருகிறது' என லிபியாவின் கிழக்குப் பகுதி அரசைச் சேர்ந்த ஹிஷாம் சிகியோவாட் கூறினார்.

லிபியாவில் பத்து ஆண்டுகளுக்கும் மேலாக நடைபெற்று வரும் மோதல்கள் மற்றும் குழப்பம் காரணமாக நாட்டின் உள்கட்டமைப்பைப் பராமரிக்க முடியாமல் போனதால்தான் டெர்ணா ஆற்றின் குறுக்கே கட்டப்பட்டிருந்த அணை உடைந்து ஆயிரக்கணக்கான உயிரிழப்புகள் ஏற்பட்டுள்ளதாக வரலாற்று ஆய்வாளர்கள் கருத்துத் தெரிவிக்கின்றனர்.

சமீபத்தில் இந்தியாவின் ஹிமாசல பிரதேசம், தில்லி, உத்தரகண்ட், நொய்டாவில் பெய்த கடும் மழை, இயற்கைக்கு எதிராக மனிதர்கள் செய்து வரும் சீர்கேடுகளின் வெளிப்பாடுதான் எனவும் சுயநல மனிதர் செய்யும் தவறுகளால் சுற்றுச்சூழல் பெரும் பாதிப்புக்கு உள்ளாகிறது எனவும் மனிதத் தவறுகள் தொடர்ந்தால் இயற்கையின் பழி வாங்கும் நடவடிக்கைகளும் தொடரும் எனவும் நிபுணர்கள் தெரிவித்திருந்தனர்.

இயற்கையின் கொடைகளாகவும், நாட்டின் அரண்களாகவும் விளங்கும் இயற்கை வளங்களை மனிதர்கள் சீரழிப்பதால் சுற்றுச்சூழல் பெரும்மளவில் பாதிப்புக்குள்ளாகிறது. அதனால்தான், நில நடுக்கம், சுனாமி, பெருமழை, புயல் ஆகியவற்றை நாம் அவ்வப்போது எதிர்கொள்ள நேரிடுகிறது. இனியேனும் சுற்றுச் சூழலைப் பாதுகாத்து அதன் மூலம் மனிதகுலத்தையும் பாதுகாப்போம். •

---

# வியுக்தியார் பதில்கள்



**உங்கள் கேள்விகளை அனுப்பவேண்டிய முகவரி**

**வியுக்தியார் பதில்கள்**
**ஈழநாடு, 707 ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.**
viyukthiyar@gmail.com

**சபா. கதிர், குருமண்காடு, வவுனியா.**

**கேள்வி:** ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிற்கும் அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடனுக்கும் இடையிலான சந்திப்பு நியூயோர்க்கில் இடம்பெற்றதே. இந்தச் சந்திப்பு இலங்கைக்கு பயனைத்தரும் என்று நம்புகின்றீர்களா?

**வியுக்தியார்:** ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் சபைக்கூட்டத்தில் கலந்துகொள்வதற்காக நமது ஜனாதிபதி அங்கு சென்றிருக்கிறார். அந்த மாநாட்டில் கலந்து கொள்வதற்காக சென்றுள்ள நூற்றுக்கும் மேற்பட்ட தலைவர்களுக்கு அமெரிக்க ஜனாதிபதி இரவு விருந்து வழங்கினார். அந்த விருந்தில் கலந்துகொண்ட தலைவர்கள் ஒவ்வொருவருடனும் சில வினாடிகளை அமெரிக்க ஜனாதிபதி செலவிட்டிருப்பார். இந்த வினாடிகள் சந்திப்பில் என்ன முக்கியத்துவம் இருக்கப்போகின்றது. அமெரிக்க ஜனாதிபதி இலங்கையை ஒரு நாடு என்று நினைத்துக்கொண்டிருக்கிறார் என்று நிம்மதிப்பட மட்டுமே உதவும்.

**எஸ் பீற்றர்போல், இரண்டாம் குறுக்கு வீதி, யாழ்ப்பாணம்.**

**கேள்வி:** மைத்திரிபால சிறிசேன, கோட்டாபய ராஜபக்ஷ ஆகியோரே உயிர்த்த ஞாயிறு தாக்குதலின் இரண்டு பிரதான சூத்திரதாரிகள் என முன்னாள் இராணுவத் தளபதியும் பாராளுமன்ற உறுப்பினருமான சரத் பொன்சேகா தெரிவித்துள்ளாரே. சனல் 4 தொலைக்காட்சி கோட்டாபயவை தேர்தலில் வெல்ல வைப்பதற்காகவே இந்தத் தாக்குதல் நடைபெற்றது என்று கூறியது. ஆனால் இவரோ கோட்டாவுடன் மைத்திரியையும் தொடர்புபடுத்துகின்றாரே.

**வியுக்தியார்:** அவர் ஏன் இருவரையும் தொடர்புபடுத்துகின்றார் என்பது தெரியவில்லை. ஆனால் சனல் 4 சொல்வதுபோல கோட்டாபயவை வெல்ல வைப்ப தற்காகத்தான் ஆறு முஸ்லிம்கள் தங்களைத் தற்கொடை செய்தார்கள் என்பது உண்மையானால், அந்த தக்குதல் பற்றிய உளவுத்தகவலை இந்தியா மிகத் தெளிவாக வழங்கியபோதிலும் அதனை தடுக்க நடவடிக்கை எடுக்காததும் கோட்டாவை வெல்ல வைப்பதற்கான முயற்சிதான் என்று சொல்ல வருகிறார் என்று நினைக் கின்றேன். அதனால்தான் மைத்திரியையும் பிரதான சூத்திரதாரி என்கிறாரோ தெரியவில்லையே.

**சி. ராஜேஸ்வரன், கோயில் வீதி, நல்லூர்.**

**கேள்வி:** பாராளுமன்றத்தில் உள்ளவர்கள் அனைவரும் திருடர்கள், மோசடிக்காரர்கள், ஊழல்வாதிகள் என இலங்கையிலுள்ள ஊடகங்கள் எவ்வித பொறுப்பும் இன்றியும் சாட்சியங்களும் இன்றி அறிக்கை விடுகின்றன என வெகுஜன ஊடக, போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சர் கலாநிதி பந்துல குணவர்தன தெரிவித்திருக்கிறார். தான் ஒரு நூலைக் கூட திருடவில்லை என்றும் கூறியிருக்கிறாரே.

**வியுக்தியார்:** அவர் நூலைக்கூட திருடவில்லை என்பது நிச்சயம் சரியாகத்தான் இருக்கும். அவர் திருடியதாக யாரும் இதுவரை குற்றம் சுமத்தியதாகவும் இந்த வியுக்தியார் அறியவில்லையே. அவர் யாரிடமும் நூலைக் கூட அன்பளிப்பாக பெற்றதில்லை என்றும் சொல்லவில்லை என்பதையும் கவனிக்கவேண்டும்.

**கே. கணேஷ், பிரதான வீதி, ஹட்டன்.**

**கேள்வி:** பொதுஜன பெரமுன கட்சியின் சார்பில் அடுத்த ஜனாதிபதி தேர்தலில் களமிறங்குவதற்கு பஸில் ராஜபக்ச தகுதியானவர் என்று பாராளுமன்ற உறுப்பினர் விமலவீர திஸாநாயக்க தெரிவித்துள்ளாரே?

**வியுக்தியார்:** அவர் சொல்வதில் என்ன தவறு இருக்கின்றது என்று அதனைக் கேள்வியாகக் கேட்டிருக்கிறீர்கள். ஒருவர் ஜனாதிபதியாக போட்டியிடுவதற்கு பசில் தனது அமெரிக்க பிரஜாவுரிமையை ரத்துசெய்துவிட்டால் போதுமானதே. மற்றும்படி அவருக்கு அதற்கான தகுதி இருக்கிறது. ஆனால் தமது கட்சியில் யாரை வேட்பாளராக போட்டியிடவைத்தாலும் அவருக்கு மக்கள் வாக்களிக்கப்போவதில்லை என்பது அவர்களுக்கு தெரியாதது இல்லையே. வெல்லப்போவதில்லை என்று தெரிந்துகொண்டே போட்டியிடுவதற்கெல்லாம் தகுதி ஒரு பொருட்டா என்ன?

**போல் சத்திதாசன், அச்சுவேலி, யாழ்ப்பாணம்.**

**கேள்வி:** அறகலய போராட்டத்தின் போது சேதப்படுத்தப்பட்ட பாராளுமன்ற உறுப்பினர்களின் உடைமைகளுக்காக அரசாங்கத்தால் 141 கோடியே 40 இலட்சம் ரூபா இழப்பீடு வழங்கப்பட்டுள்ளதாக ஒரு செய்தி பார்த்தேன். இது குறித்து உங்களுக்கு விளக்கமாக தெரிந்திருக்குமே.

**வியுக்தியார்:** அந்த போராட்டத்தின்போது 44 எம்.பி.க்களின் உடமைகளுக்கு சேதம் விளைவிக்கப்பட்டது. ஏற்கனவே 31 எம்.பி.க்களுக்கு 71 கோடி ரூபா இழப்பீடாக வழங்கப்பட்டு விட்டது. வீடுகள் முழுமையாக பாதிக்கப்பட்ட மேலும் 13 பேருக்கு 70 கோடி ரூபா வழங்கப்படவிருக்கின்றதாம். அதாவது சுமார் 5 கோடி ரூபா வீதம் இந்த 13 பேருக்கும் இழப்பீடு வழங்கப்படவிருகின்றது. இப்போது பல எம்.பி.க்கள் தங்கள் வீடுகள் தாக்கப்படாதது குறித்து கவலைப்படுவதாக ஒரு செய்தி பார்த்தேன். இருந்த பழைய வீட்டை உடைத்துவிட்டு புதிதாக கட்டியிருக்கலாமே என்ற கவலையுடன் இருக்கிறார்களாம்.

# கனடா - இந்தியா உறவில் உச்சக்கட்ட முறுகல்:

# ஹர்தீப் சிங் நிஜ்ஜார்:

## கனடாவின் குடிமகன்!
## சீக்கியர்களின் போராளி!
## இந்தியாவின் பயங்கரவாதி!



**ஹர்தீப் சிங் நிஜ்ஜார் படுகொலையே கனடா–இந்தியா உறவில் உச்சக்கட்ட முறுகலை தோற்றுவித்துள்ளது. இவரை கனடாவின் குடிமகனாக,சீக்கியர்களின் போராளியாக, இந்தியாவின் பயங்கரவாதியாக அவரவர் பார்வைக்கு புலப்படுகிறார்**

**ஐங்கரன் விக்கினேஸ்வரா**

கனடா பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ இந்திய அரசின் முகவர்களுக்கும், கனடா குடிமகனின் படுகொலைக்கும் இடையே உள்ள தொடர்பு பற்றி கனடா புலனாய்வு துறைகள் தொடர்ந்து விசாரித்து வருகின்றன என கூறியுள்ளார். கனடாவில் குடிமகன் ஒருவர் படுகொலையில் அந்நிய வெளிநாட்டு அரசின் தொடர்பு இருப்பது என்பது ஏற்றுகொள்ள முடியாதது என்று அவர் அழுத்திக் கூறியுள்ளார்.

இதனைத் தொடர்ந்து இந்தியாவுக்கான கனடா தூதர் கேமரூன் மெக்கேவை 19.09.2023 அன்று இந்திய வெளியுறவு அமைச்சுக்கு அழைக்கப்பட்டு, சம்பந்தப்பட்ட இராஜதந்திரி அடுத்த



ஐந்து நாட்களுக்குள் இந்தியாவை விட்டு வெளியேறுமாறு கேட்டுக் கொள்ளப் பட்டுள்ளார்.

**இந்தியாவுக்கு எதிரான நடவடிக்கை:**

இந்தியாவின் உள் விவகாரங்களில் கனேடிய ராஜதந்திரியின் தலையீடு மற்றும் இந்தியாவுக்கு எதிரான நடவடிக்கைகளில் அவர் ஈடுபட்டதை அடுத்தே இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

முன்னதாக கனடாவில் சீக்கிய காலிஸ்தானிய தலைவர் ஹர்தீப் சிங் நிஜ்ஜார் கொல்லப்பட்டமை தொடர்பில், இந்திய ராஜதந்திரி ஒருவரை கனேடிய அரசாங்கம் நாட்டில் இருந்து வெளியேறுமாறு அறிவித்துள்ளது.

மேலும், ஹர்தீப் சிங் நிஜ்ஜார் சுட்டுக் கொல்லப்பட்ட சம்பவத்தின் பின்னணியில் இந்திய அரசாங்கம் இருக்கலாம் என பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ தெரிவித்திருந்தார்.

மேலும் தெரிவிக்கையில்,

ஹர்தீப் சிங்கின் மரணத்திற்கும் இந்திய அரசுக்கும் இடையே ”நம்பகமான” தொடர்பை கனடா உளவுத்துறை கண்டறிந்துள்ளதாக தெரிவிக் கப்பட்டுள்ளது.

**யார் இந்த ஹர்தீப் சிங் நிஜ்ஜார்?**

கனடாவின் சுர்ரே நகரில் வசித்து வந்தவர் ஹர்தீப் சிங் நிஜ்ஜார். அங்கு குரு நானக் சீக்கிய குருத்வாராவின் தலைவராக செயல்பட்டு வந்த அவர், கனடாவின் குடிமகனாகவும் இருந்துள்ளார். கடந்த ஜூன் மாதத்தில் அவர் படுகொலை செய்யப்பட்டார்.

அவர், காலிஸ்தான் புலி படையின் (கே.டி.எப்.) தலைவராக செயல்பட்டவர். 1997-ம் ஆண்டு போலி பாஸ்போர்ட்டில் கனடாவுக்கு நிஜ்ஜார் சென்றார். அவருடைய அகதி கோரிக்கை நிராகரிக்கப்பட்டது. இதனை தொடர்ந்து பெண் ஒருவரை திருமணம் செய்ததும், நிஜ்ஜாருக்கான குடியுரிமையை அந்த பெண் அவருக்காக முன்மொழிந்துள்ளார்.

இந்தியாவில் தடை செய்யப்பட்ட கே.டி.எப். அமைப்புக்கு ஆள் சேர்ப்பது, பயிற்சி வழங்குவது போன்றவற்றில் அவர் ஈடுபட்டுள்ளார்.

2018-ம் ஆண்டில் ட்ரூடோவுக்கு, அப்போது பஞ்சாப் முதல்-மந்திரியாக இருந்த அமரீந்தர் சிங் அனுப்பிய தேடப்படும் நபர்களின் பட்டியலில் நிஜ்ஜார் பெயர் இடம் பெற்றது.

இதன்பின் 2022-ம் ஆண்டு, பஞ்சாபில் பயங்கரவாத பரவலுடன் தொடர்புடைய வழக்குகளில் அவரை நாடு கடத்தி ஒப்படைக்கும்படி பஞ்சாப் போலீசார் கேட்டு கொண்டனர். 2007இல் பஞ்சாபில் நடந்த வெடிகுண்டு தாக்குதலில் 6 பேர் உயிரிழந்த சம்பவம் உள்பட பல்வேறு வழக்குகளில் அவர் தேடப்பட்டு வந்துள்ளார். 2010-ம் ஆண்டு பாட்டியாலாவில் கோவில் அருகே நடந்த வெடிகுண்டு தாக்குதல் வழக்கிலும் அவர் மீது வழக்கு பதிவானது.

2015-ம் ஆண்டு இந்து தலைவர்களை இலக்காக கொண்டு செயல்பட்டதில் அவருக்கும் பங்கு உள்ளது என்ற அடிப்படையில் அவருக்கு எதிராக மற்றொரு வழக்கு பதிவானது. இந்து மத தலைவர்களை கொல்ல சதி திட்டம் தீட்டிய விவகாரத்தில், 2016-ல் மற்றொரு வழக்கு பதிவானது. 2015 மற்றும் 2016 ஆகிய ஆண்டுகளில் அவருக்கு எதிராக, தேடுதல் சுற்றறிக்கை மற்றும் ரெட் கார்னர் நோட்டீஸ் ஆகியவை பிறப்பிக்கப்பட்டன.

2018இல் பஞ்சாப்பில் நடந்த ஆர்.எஸ்.எஸ். தலைவர்களின் படுகொலையில் உள்ள தொடர்பு பற்றி என்.ஐ.ஏ. விசாரணை நடத்தியது. 2020ஆம் ஆண்டு அவரை பயங்கரவாதியாக இந்தியா அறிவித்தது. பஞ்சாப்பின் ஜலந்தரில், இந்து சாமியார் ஒருவரை கொல்ல சதி திட்டம் தீட்டினார் என்ற குற்றச்சாட்டின் பேரில், 2022-ம் ஆண்டில் அவருக்கு எதிராக ரூ.10 லட்சம் பரிசு அறிவிக்கப்பட்டது.

**ஜி20 மாநாட்டில்**

அண்மையில் நடைபெற்ற ஜி20 மாநாட்டில் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியிடம் கனடா பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ இந்த விவகாரத்தை எழுப்பினார். இந்த கொலையை இந்தியர்கள் நடத்தி இருக்கலாம். கொலைக்கு பின் அவர்களே முக்கிய காரணமாக இருக்கலாம். இந்தியாவின் முகவர்கள் மூலம் கொலை நடந்து இருக்கலாம் என்று தனது நாட்டு பாதுகாப்பு ஆலோசகர்கள் தன்னிடம் கூறியுள்ளனர் என பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ தெரிவித்திருந்தார்.

வெளிநாட்டு அரசின் தலையீடு:

கனடா மண்ணில் ஒரு கனடா குடிமகனைக் கொல்வதில் வெளிநாட்டு அரசாங்கத்தின் எந்தவொரு தலையீடும் இருப்பதாக உறுதியானால் அது கடுமையான பாதிப்புகளை ஏற்படுத்தும். இது தமது இறையாண்மையில் மேற்கொள்ளப்படும் ஏற்றுக்கொள்ள முடியாத மீறலாகும். இது சுதந்திரமான, திறந்த மற்றும் ஜனநாயக சமூகங்களின் அடிப்படை விதிகளுக்கு முரணானது என கனடா பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ தெரிவித்திருந்தார்.




**கொலையின் பின்புலம்**

இந்த நடவடிக்கையை தாங்கள் கண்டிக்கிறோம் என்றும், இதை பற்றி இந்தியாவின் தேசிய பாதுகாப்பு ஆலோசகரிடம் பேசி இருக்கிறோம்.

அத்துடன் இந்திய பிரதமரிடம் பேசி இருக்கிறோம். விரைவில் இந்த கொலையின் பின்புலத்தை வெளியே கொண்டு வருவோம்.

இந்தியா இது தொடர்பான விசாரணையில் ஒத்துழைக்க வேண்டும். இதில் உண்மையை கொண்டு வர வேண்டும். நாங்கள் இது பற்றி தீவிரமாக விசாரித்து வருகிறோம். இதனால் இந்தியா கனடா இடையிலான உறவு முறியும் ஆபத்து ஏற்பட்டு உள்ளது என தெரிவித் துள்ளார்.

**இந்திய உதவியை நிராகரித்த கனடா:**

இந்தியாவில் கடந்தவாரம் நடைபெற்ற G-20 உச்சி மாநாடு கனடா விடயத்தில் எதிர்பாராத விதமாக, இன்னோர் நிகழ்வும் எதிர் விளைவுகளே உருவாகியுள்ளது. இந்தியா வந்த கனடா பிரதமரான ஜஸ்டின் ட்ரூடோ, உச்சி மாநாட்டுக்குப் பின் மீண்டும் கனடா புறப்பட இருந்த நிலையில், அவர் நாடு திரும்ப இருந்த விமானத்தில், எதிர்பாராத விதமாக தொழில்நுட்பக் கோளாறு ஏற்பட்டுள்ளது.

அதனால் 36 மணி நேரமாக அவர் டில்லியிலேயே தங்கியிருக்கும் நிலை உருவாகியுள்ளது. ஆனால், இந்திய அரசு அவருக்கு உதவ முன்வந்துள்ளது. இந்திய ஜனாதிபதி, பிரதமர் முதலானோர் பயணிக்கும் எயர் இந்தியா வன் விமானத்தில் அவர் உடனடியாக கனடா புறப்படலாம் என அவருக்கு இந்திய தரப்பில் ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது.

**பாதுகாப்பு தொடர்பில் கேள்வி**

இதனையடுத்து ஆறு மணி நேரம் கழித்து இந்திய அதிகாரிகளுக்கு பதிலளித்த கனேடிய அதிகாரிகள், இந்தியாவின் உதவியை நிராகரித்துள்ளதுடன், தங்கள் விமானம் வந்தபிறகே, ட்ரூடோ கனடா புறப்பட இருப்பதாக தெரிவித் துள்ளார்கள்.

ஏற்கனவே, இந்தியப் பிரதமர் மோடி, ட்ரூடோவிடம் இந்திய தூதரக அதிகாரிகள் பாதுகாப்பு தொடர்பில் கேள்வி எழுப்பியது, மற்றும் ட்ரூடோ இந்தியாவில் புறக்கணிக்கப்பட்டதாக ஊடகங்களில் வெளியாகியுள்ள செய்திகள் ஆகியவற்றால் இரண்டு நாடுகளுக்கும் இடையிலான உறவில் விரிசல் ஏற்பட்டிருந்தது.

இந்நிலையில் இந்தியாவின் உதவியை கனடா ஏற்க மறுத்ததுடன், பதிலளிக்கவும் தாமதம் செய்த விடயம், இரு நாட்டு உறவுகளின் விரிசலை மேலும் அதிகரிக்கச் செய்வதுபோல் அமைந் துள்ளது.

# யாழ். இந்து பழைய மாணவர்களின் இரத்ததானம்





யாழ்ப்பாணம், செப். 24

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி பழைய மாணவர் சங்கத்தின் ஏற்பாட்டில் இரத்த தான நிகழ்வு நேற்று சனிக் கிழமை கல்லூரி முன்றிலில் நடைபெற்றது.

இந்த இரத்ததான நிகழ்வில் கல்லூரியின் பழைய மாணவர்கள், நலன் விரும்பிகள் பலர் பங்கேற்று இரத்த தானம் வழங்கினர்.

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி பழைய மாணவர் சங்கத்தின் ஏற்பாட்டில் வருடம் தோறும் செப்ரெம்பர் மாதத்தின் இறுதி வாரத்தில் இரத்த தான நிகழ்வு நடத்தப்பட்டுவருகிறது.

அந்த வகையில் இரத்ததான நிகழ்வுக்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்த நிலையில் நேற்று முன்தினம் கல்வி அமைச்சினால் கல்லூரி வளாகத்துக்குள் இரத்ததான நிகழ்வு உள்ளிட்ட நிகழ்வுகள் நடத்துவதற்கு திடீர் தடை விதிக்கப்பட்டிருந்தது.

இந்நிலையிலேயே கல்லூரி முன்றிலில் அமைக்கப்பட்ட விசேட பந்தலில் இரத்த தான நிகழ்வு நடைபெற்றது. (அ)

# டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரிப்பு

கொழும்பு, செப். 24

நாட்டில் இம்மாதத்தில் பதிவாகியுள்ள டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை 2 ஆயிரத்தை தாண்டியுள்ளது.

அண்மைக்காலமாக பெய்து வரும் மழையினால் டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதாக சுகாதார திணைக்களம் தெரிவித்துள்ளது.

தேசிய டெங்கு கட்டுப்பாட்டுப் பிரிவின் தகவல்களின் படி, இந்த மாதத்தில் இதுவரையான காலப்பகுதியில் 2,003 டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளனர்.

கடந்த மாதங்களை விட இந்த மாதத்தில் டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை குறையும் என சுகாதார திணைக்களம் முன்னரே கணித்திருந்த நிலையில், இந்த மாதத்தின் மூன்றாவது வாரத்தில் டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதாக தெரிவித்துள்ளது.

இதன்படி, இலங்கையில் பதிவாகியுள்ள மொத்த டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை 63 ஆயிரத்து 881 ஆக அதிகரித்துள்ளது.

இதேவேளை, டெங்கு அபாய வலயங்கள் 07 ஆக குறைந்துள்ள போதிலும், தற்போதைய மழையினால் அது மேலும் அதிகரிக்கலாம் என சுகாதார திணைக்களம் தெரிவித்துள்ளது. (அ)

# சுங்கத்தால் பறிமுதல் செய்யப்பட்ட பொருட்கள் இணையத்தில் ஏலம்!

கொழும்பு, செப். 24

எதிர்வரும் டிசெம்பர் மாதம் முதல் இலங்கை சுங்கத் திணைக்களத்தினரால் பறிமுதல் செய்யப்பட்ட பொருட்களை இணையத்தில் ஏலம் விடுவதற்கு விசேட ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக பதில் நிதியமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய தெரிவித்துள்ளார்.

ஒருகொடவத்த பகுதியில் உள்ள சுங்க முனையத்திற்கு நேற்றைய தினம் கண்காணிப்பு விஜயம் மேற்கொண்டு கருத்துரைத்த போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

இதுவரையில் 18 ஆயிரத்து 765 வெளிநாட்டு மதுபானப் போத்தல்கள் சட்டவிரோதமான முறையில் இலங்கைக்கு கொண்டுவரப்பட்டு சுங்க அதிகாரிகளால் கைப்பற்றப்பட்டுள்ளன.

இதனூடாக அரசுக்கு 14 கோடி ரூபா வரி இழப்பு ஏற்பட்டுள்ளதாகவும் பதில் நிதியமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய கூறினார். (அ)

# மீண்டும் ஜனாதிபதி ஆட்சிமுறை....

(08ஆம் பக்கத் தொடர்ச்சி)

அடிப்படையில் அதன் வரைவிலக்கணத்தின் பிரகாரம் ஜனநாயக விரோதமானது. அந்த பதவியை வகிப்பவரிடம் குவிந்திருக்கும் மட்டுமீறிய அதிகாரங்களை அவருக்கு இருக்கும் சட்ட விடுபாட்டு உரிமையுடன் சேர்த்துப் பார்க்கும்போது அது ஜனநாயகத்துக்கு முற்றிலும் நேர்மாறானது என்பதை எளிதாக விளங்கிக் கொள்ளமுடியும்.

குற்றச் செயல்களுக்காக நீதிமன்றங்களில் வழக்குகளை எதிர்நோக்கும் அரசியல்வாதிகள் ஜனாதிபதியாக தெரிவானதும் அவற்றில் இருந்து விடுபடும் உரிமையை அனுபவிக்கக் கூடியதாக இருப்பதில் இருந்து அதன் ஜனநாயக விரோதம் பிரகாசமாக தெரிகிறது.

ஜனாதிபதி ஆட்சிமுறையுடனான இலங்கையின் வாழ்வு தணிக்கமுடியாத அவல அனுபவமாக இருப்பதுடன் சுதந்திரத்தின் பின்னரான மிகவும் மோசமான காலப்பகுதியாகவும் விளங்குகிறது. மட்டுமீறிய அதிகாரங்களைக் கொண்ட ஜனாதிபதிப் பதவி அடிமைத்தனமான, அண்டிப்பிழைக்கின்ற, ஊழல்தனமான சந்தர்ப்பவாத அரசியல் வர்க்கம் ஒன்று வளருவதற்கு பிரதான காரணமாக இருந்திருக்கிறது.

ஆட்சிமுறையில் முன்னரும் ஊழலும் அதிகார துஷ்பிரயோகமும் நிலவிவந்த போதிலும், பல தசாப்த கால ஜனாதிபதி ஆட்சிமுறைக்கு பிறகுதான் அவை படுமோசமாக தலைவிரித்தாடி இறுதியில் நாட்டை வங்குரோத்து நிலைக்கு கொண்டுவந்தன.

ஜனாதிபதி ஆட்சிமுறை சிறுபான்மைச் சமூகங்களுக்கு அனுகூலமானது. ஜனாதிபதியை தெரிவுசெய்வதில் சிறுபான்மைச் சமூகங்கள் செல்வாக்கை செலுத்தக்கூடிய நிலை இருப்பதால் ஜனாதிபதி அந்த சமூகங்களை அனுசரித்துச் செல்லவேண்டிய தேவை இருக்கும் என்ற ஒரு மாயையும் முன்னர் கட்டமைக்கப்பட்டது. ஆனால் அதை ராஜபக்சாக்கள் தங்களது மோசமான இனவாத அரசியலினால் கச்சிதமாக நிர்மூலம் செய்தார்கள். ஜனாதிபதி ஆட்சிகளில்தான் சிறுபான்மைச் சமூகங்கள் மோசமான அடக்குமுறைகளையும் உரிமை மீறல்களையும் அனுபவிக்கவேண்டியிருந்தது. ராஜபக்சாக்கள் அதை ஒரு உச்சநிலைக்கு கொண்டு சென்றார்கள்.

ஜனாதிபதி தேர்தலில் வெற்றி பெறுவதற்கு சகல சமூகங்கள் மத்தியிலும் கணிசமான ஆதரவைக் கொண்டிருக்க வேண்டும் என்ற ஒரு ஒப்பீட்டளவிலான ஜனநாயகச் சூழலை மாற்றி பெரும்பான்மைச் சமூகத்தின் தனியான ஆதரவுடன் ஜனாதிபதியாக தெரிவாக முடியும் என்பதை ராஜபக்சாக்கள் நிரூபித்தார்கள். ஆனால் அதற்காக அவர்கள் முன்னெடுத்த அரசியல் இலங்கை மக்களை முன்னென்றும் இல்லாத வகையில் இன, மத அடிப்படையில் பிளவுபடுத்தி மோசமான அரசியல் கலாசாரத்தை தோற்றுவித்தது. இன்னமும் கூட அவர்கள் அத்தகைய அரசியல் முன்னெடுப்புக்கள் மூலமாக மீட்சிபெற முடியும் என்ற நம்பிக்கையுடன் காத்திருக்கிறார்கள். குடும்ப ஆதிக்க அரசியலை வலுப்படுத்தவும் ஜனாதிபதி ஆட்சிமுறை தாராளமாக உதவியிருக்கிறது.

அந்த ஆட்சிமுறையை முன்னைய மூன்று ஜனாதிபதிபதிகள் மக்களுக்கு வாக்குறுதி அளித்ததன் பிரகாரம் ஒழிக்கவில்லை என்பதோ அல்லது ஒழிக்க முடியவில்லை என்பதோ அதை தொடர வேண்டும் என்ற கருத்தை நியாயப்படுத்திவிடாது.

ஜனாதிபதியின் அதிகாரங்களைக் குறைப்பதற்கு மேற்கொள்ளப்பட்ட ஓரளவுக்கேனும் பயனுறுதியுடைய நடவடிக்கை என்று ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் ஆட்சிக்காலத்தில் கொண்டுவரப்பட்ட 19 வது அரசியலமைப்புக்கான திருத்தத்தை கூறமுடியும். ஆனால் 2019 ஜனாதிபதி தேர்தலில் வெற்றிபெற்ற கோட்டாபய ராஜபக்ச 2020 ஆம் ஆண்டில் 20 வது திருத்தத்தைக் கொண்டுவந்து முன்னர் குறைக்கப்பட்ட அதிகாரங்களை மீட்டெடுத்தது மாத்திரமல்ல மேலும் பல அதிகாரங்களை தனதாக்கிக்கொண்டார்.

பிறகு விக்கிரமசிங்க நிருவாகத்தில் கடந்த வருடம் செப்டெம்பரில் கொண்டுவரப்பட்ட 21 வது அரசியலமைப்பு திருத்தம் 19 வது திருத்தத்தின் ஏற்பாடுகளை மீண்டும் நடைமுறைக்கு கொண்டுவரும் என்று எதிர்பார்க்கப்பட்ட போதிலும், அதனால் எந்த பயனும் கிட்டவில்லை. அது வெறும் கண்து டைப்பு நடவடிக்கையாகவே அமைந்தது.

அந்த திருத்தத்துக்கு பின்னரும் கூட ஜனாதிபதி தன்வசம் எத்தனை அமைச்சுப்பொறுப்புக்களையும் வைத்திருக்க முடியும். அமைச்சர்களினதும் அமைச்சுக்களினதும் எண்ணிக்கையை அவரால் தீர்மானிக்கமுடியும். அமைச்சுக்களுக்கு ஒதுக்கப்படவேண்டிய பொறுப்புக்களை அவரால் தீர்மானிக்கமுடியும் என்பதுடன் அமைச்சுக்களின் செயலாளர்களை நியமிப்பதில் தற்துணிபு அதிகாரத்தைப் பயன்படுத்தமுடியும். சுயாதீன ஆணைக்குழுக்களை கண்காணிக்கும் அரசியலமைப்பு பேரவையின் சுயாதீனமும் கேள்விக்குள்ளாகியிருக்கிறது.

மத்தியில் அதுவும் ஒரு பதவியில் சகல அதிகாரங்களையும் குவிப்பதன் மூலம் ஜனாதிபதி ஆட்சிமுறை மாகாண மட்ட ஆட்சிமுறையின் வீச்செல்லையை மிகவும் கடுமையாக மட்டுப்படுத்துகிறது. மிகவும் மட்டுப்படுத்தப்பட்ட அதிகாரங்களையே மாகாண நிருவாகங்கள் கொண்டிருக்கின்ற போதிலும் கூட அங்கும் ஜனாதிபதியின் பிரதிநிதியான ஆளுநர் கணிசமான அதிகாரங்களைக் கொண்டவராக விளங்குகிறார்.

ஜனாதிபதியின் அதிகாரங்களை குறைப்பதற்கு என்று கூறிக்கொண்டு முன்னெடுக்கப்பட்ட எந்தவொரு சட்டவாக்க செயன்முறையும் பயனளிக்கவில்லை என்பதை அனுபவ வாயிலாக நாம் கண்டிருக்கிறோம். ஜனாதிபதி ஆட்சிமுறை சீர்திருத்தங்களுக்கு இடமளிக்கக்கூடிய ஒன்று அல்ல. அதீதமான அதிகாரங்களை ஒரு பதவியில் குவிக்க வகைசெய்யும் அந்த முறையை முற்று முழுதாக பதிலீடு செய்தால் தவிர மற்றும்படி சீர்திருத்தங்களின் மூலம் எதையும் சாதிக்கமுடியாது என்று பல அரசியலமைப்பு நிபுணர்கள் ஏற்கெனவே கூறியிருக்கிறார்கள்.

ஜனாதிபதி ஆட்சிமுறையின் பாதகங்களையும் ஜனநாயக விழுமியங்களுக்கு அதனால் விளைந்த ஆபத்துக்களையும் நான்கு தசாப்தங்களுக்கும் அதிகமான காலமாக அனுபவரீதியாக கண்ட பின்னரும் கூட அதை ஒழிப்பதற்கான முயற்சிகள் பயனளிக்கமுடியாத அரசியல் சூழ்நிலை தொடருவது பெரும் துரதிர்ஷ்டமாகும்.

கடந்த வருடம் ஜனாதிபதியாக தெரிவானதன் பின்னர் பாராளுமன்றத்தின் புதிய கூட்டத்தொடரை சம்பிரதாயபூர்வமாக தொடக்கிவைத்து தனது முதலாவது கொள்கை விளக்கவுரையை (ஆகஸ்ட் 3) நிகழ்த்திய விக்கிரமசிங்க நிறைவேற்று அதிகார ஜனாதிபதி ஆட்சிமுறை தொடரவேண்டுமா? எமது நாட்டுக்கு எத்தகைய ஆட்சிமுறை பொருத்தமானது? ஆட்சிமுறை எவ்வாறு மறுசீரமைக்கப்படவேண்டும்? என்ற விவகாரங்களை ஆராயும் பொறுப்பை தான் நியமிக்க உத்தேசித்திருக்கும் மக்கள் சபையிடம் ஒப்படைக்கப்போவதாகக் கூறினார்.

கடந்த காலத்தில் பல ஜனாதிபதி தேர்தல்களில் ஜனாதிபதி ஆட்சிமுறை ஒழிப்பு பற்றி மக்களுக்கு வாக்குறுதிகள் வழங்கப்பட்டன. ஆனால் அவ்வாறு வாக்குறுதியளித்து பதவிக்கு வந்த எந்த ஜனாதிபதியும் அந்த ஆட்சிமுறையை ஒழிக்கவில்லை. எவராவது அதை ஒழித்தாலும் கூட பின்னர் அதிகாரத்துக்கு வரக்கூடியவர்கள் மீண்டும் கொண்டு வரமாட்டார்கள் என்பதற்கு உத்தரவாதமில்லை என்றும் அதனால் தேசிய கருத்தொருமிப்பின் அடிப்படையில் ஜனாதிபதி ஆட்சிமுறையை ஒழிப்பதே பொருத்தமானது. அந்த கருத்தொருமிப்பைக் காணும் பொறுப்பு உத்தேச மக்கள் சபையிடம் ஒப்படைக்கப்படும் என்றும் ஜனாதிபதி தனது அந்த உரையில் கூறினார்.

ஆனால், அவர் அவ்வாறு கூறி ஒரு வருடம் கடந்துவிட்ட போதிலும் மக்கள் சபை நியமிக்கப்படவேயில்லை. ஜனாதிபதி ஆட்சிமுறை ஒழிப்பு விடயத்தில் இருந்து தனது நிருவாகத்தை விலக்கிவைக்கும் ஒரு தந்திரோபாயமாகவே அதைக் கூறினார் என்பதே உண்மையாகும்.

சென்னை இந்து ஆங்கிலப் பத்திரிகையின் கொழும்பு செய்தியாளர் மீரா சிறிநிவாசன் சில மாதங்களுக்கு முன்னர் எமது ஜனாதிபதி ஆட்சிமுறை குறித்து ஒரு ஆய்வுக்கட்டுரையை எழுதியிருந்தார். அதில் அவர் இறுதியாகக் கூறிய கருத்தை இச்சந்தர்ப்பத்தில் நினைவுபடுத்துவது பொருத்தமாக இருக்கும்.

'இலங்கை நிறைவேற்று அதிகார ஜனாதிபதி ஆட்சிமுறையை ஒழிக்க வேண்டிய தேவை குறித்து பல தசாப்தங்களாக விவாதம் செய்து வந்திருக்கிறது. ஆனால், அந்த பதவிக்குரிய அதிகாரங்களைத் துறப்பதற்கு முன்வரக்கூடிய ஒரு தலைவரை நாடு இன்னமும் கண்டுபிடிக்கவில்லை."

## இலங்கை...

கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.இந்த நிகழ்வு நீதி அமைச்சினால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

இலங்கையில் பொருளாதார மற்றும் அரசியல் ஸ்திரத்தன்மையை ஏற்படுத்துவதுடன், புத்தாக்கத்தின் ஊடாக நாட்டைக் கட்டியெழுப்புவதற்கும் அனைவருக்கும் வலுவான நம்பிக்கை இருப்பதாக திருமதி ஜூலி சாங் சுட்டிக் காட்டினார். (அ)

## பங்களாதேஷிடம்...

இலங்கை கடந்த செப்ரெம்பர் 02ஆம் திகதி 100 மில்லியன் அமெரிக்க டொலர்களையும், ஒகஸ்ட் 17ஆம் திகதி 50 மில்லியன் அமெரிக்க டொலர்களையும் திருப்பிச் செலுத்தியிந்த நிலையிலேயே எஞ்சியிருந்த 50 மில்லியன் அமெரிக்க டொலர்களையும் செலுத்தியுள்ளது.

மோசமான பொருளாதார நெருக்கடியில் இருந்து மீண்டெழ, இலங்கை அதன் வெளிநாட்டு கடன்களை திருப்பி செலுத்துவதை தற்காலிகமாக நிறுத்தியது.

கடந்த ஆண்டு செப்டம்பரில் பணவீக்கம் 69.8 சதவீதமாக உயர்ந்தது. ஆனால், இவ்வாண்டு ஜூலை மாதத்தில் பணவீக்கம் 6.3 சதவீதமாக குறைந்துள்ளமையும் சுட்டிக்காட்டத்தது. (அ)

## ஐ.நா...

அவரது மகனும் கலந்து கொண்டிருந்ததும் சர்ச்சையாகியிருந்தது.

இது தொடர்பில் நிலைமையை தெளிவுபடுத்தும் வகையில் வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளார்.

ஐக்கிய நாடுகள் சபையின் இருதரப்பு கூட்டங்களுக்கு தனது மகன் வருகை தந்த படங்கள் உண்மை என அமைச்சர் தனது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

"வெளிவிவகார அமைச்சர் என்ற வகையில் ஜனாதிபதியின் உயர் மட்ட நடவடிக்கைகளுக்கு ஆதரவளிக்கும் எனது பொறுப்புகளுக்கு மேலதிகமாக,

நான் ஐ.நா பொதுச்சபை மற்றும் வொஷிங்டனுக்கான எனது வருகைகளின்போது, மூன்று பொதுவான நிகழ்வுகள், மற்றும் பல இருதரப்பு மற்றும் பலதரப்பு சந்திப்புகளில் கலந்து கொண்டு வருகிறேன்.

விரிவான வேலைக்கு ஆழ்ந்த ஆராய்ச்சி, எழுத்து மற்றும் நுட்பமான தயாரிப்பு தேவைப்படுகிறது.

அமைச்சர்கள் தங்கள் கடமையை செய்ய அமைச்சு பணம் செலுத்தும், தன்னார்வ பணியாளர்கள் என இருவர் உள்ளனர். என் மகன் நீண்ட காலமாக எனது ஆராய்ச்சி உதவியாளராகவும், வரைவு எழுத்தாளராகவும் என் வேண்டுகோளின்படி தன்னார்வ அடிப்படையில் செயற்பட்டவர்.

தற்போது அமெரிக்காவில் படிப்பை மேற்கொண்டு வருவதால், ஐ.நா பொதுச் சபை கூட்டத் தொடர் பருவத் தில் சில நாட்களுக்கு தனது நேரத்தை யும் நிபுணர் அறிவையும் வழங்க முன்வந்தார்.

அவரது பங்களிப்பு இந்த முக்கியமான விவகாரங்களுக்குத் தயாராக எனக்கு உதவியது என்பதை ஒப்புக் கொள்வதில் மகிழ்ச்சி அடைகிறேன்.

இந்த நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்கோ அல்லது வேறு எந்த சந்தர்ப்பத்திலோ அவர் வெளிவிவகார அமைச்சின் சார்பாகவோ அல்லது இலங்கை அரசாங்கத்தின் சார்பாகவோ ஒரு ரூபாய் கூட பெறவில்லை என்பது மிக முக்கியமான விடயம். அவரது பங்களிப்பு முற்றிலும் தன்னார்வமானது.

பொதுமக்கள் தங்கள் பிரதிநிதி களிடமிருந்து பொறுப்புக்கூறலைக் கோருவதற்கு ஒவ்வொரு உரிமையும் இருப்பதாக நான் உறுதியாக நம்புகி றேன், மேலும் உங்களின் தகவல் அறியும் உரிமைக்கு உண்மைகளை வழங்க நான் கடமைப் பட்டிருக்கிறேன்" - என தெரிவித்துள்ளார். (அ)

## பயங்கரவாத..

இந்த சட்டமூலம் தயாரிக்கப்பட்டுள்ளதாக அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இந்த சட்டமூலத்தின் ஊடாக மக்களுக்கு பொறுப்புக்கூறுதல், வெளிப்படைத்தன்மையுடன் செயற்படல் என்பவற்றை அரசாங்கம் ஏற்றுக் கொள்ளவில்லை என்பது தெளிவாவதாக சட்டத்தரணிகள் ஒன்றிணைவு விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

பயங்கரவாதம், தவறான அறிக்கைகள், அதனுடன் தொடர்புடைய தவறான விளக்கங்கள் ஆகியவற்றின் வரையறைகள் இரண்டு சட்ட மூலங்களிலும் மிகவும் சிக்கலானதாகக் காணப்படுவதாக சட்டத்தரணிகள் சுட்டிக் காட்டியுள்ளனர்.

மக்களின் இயல்பான செயற்பாடுகள் மீது நிர்வாகக் கட்டுப்பாட்டை உருவாக்கி , கடுமையான சட்டங்களைத் திணிக்கும் இந்த சட்டமூலங்கள் விரும்பத்தகாத, தன்னிச்சையான முயற்சி என்று அந்த அறிக்கையில் கூறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த இரண்டு சட்டமூலங்களும் நீதித்துறையின் விடயங்களுக்கு அச்சுறுத்தலாக காணப்படுவதாக சட்டத்தரணிகள் ஒன்றிணைவு தெரிவித்துள்ளது.

மக்களின் மீற முடியாத சுதந்திரத்தைப் பாதுகாக்கும் பொறுப்பு சட்ட வல்லுநர்களுக்கு இருப்பதையே அந்த அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

ஒன்றுகூடல், பேச்சு, கருத்து மற்றும் சிந்தனைச் சுதந்திரத்தை பறித்து, நிறைவேற்று அதிகாரத்திற்கு வரம்பற்ற அதிகாரங்களை வழங்கும் இத்தகைய சட்டங்கள், அரசியலமைப்பின் கீழ் மக்களின் இறையாண்மையை ஆக்கிரமிப்பதாக சட்டத்தரணிகள் ஒன்றிணைவு விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (அ)

## அடுத்த...

பங்களாதேஷ் தலைநகர் டாக்காவில் நடைபெற்றதுடன், இதில் வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரியும் பங்கேற்றிருந்தார்.

இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ்.ஜெய்சங்கர், இந்த மாநாட்டில் கலந்துகொள்வது இறுதி தருணத்தில் ஒத்திவைக்கப்பட்டது.

இலங்கையில் சீனாவின் பிரசன்னம் அதிகரித்துவரும் பின்புலத்தில் "அயோரா" மாநாடு இலங்கையில் நடைபெற உள்ளது. இது சர்வதேச ரீதியில் பெரும் அவதானம் மிக்க மாநாடாக மாறியுள்ளது.

பிராந்தியத்தில் பலம் வாய்ந்த நாடான இந்தியாவைப் பிரதிநிதித் துவப்படுத்தி இந்த மாநாட்டில் இந்திய வெளிவிவகார அமைச்சர் ஜெயசங்கர் பங்கேற்பாரா இல்லையா என்பதுதான் தற்போது எழுந்துள்ள சிக்கல்.

அவர் மாநாட்டில் பங்கேற்பதை அவரது அலுவலகம் உறுதி செய்திருந் தாலும், உருவாகி வரும் நெருக்கடிகளை கருத்தில் கொண்டு அவரது இலங்கை விஜயம் ஒத்திவைக்கப்படுவதற்கான வாய்ப்புகள் அதிகமாக உள்ளதாக இந்திய செய்திகள் தெரிவிக்கின்றன.

அரசாங்கத்தின் சீன சார்பு கொள்கை காரணமாக இந்தியா சில அரசியல் நெருக்கடிகளை இலங்கைக்கு கொடுத்து வருகிறது.

இந்திய பாதுகாப்பு அமைச்சர் ராஜ்நாத் சிங் கடந்த 2ஆம் திகதி இலங்கைக்கு விஜயம் செய்ய இருந்த நிலையில், கடைசி நிமிடத்தில் தவிர்க்க முடியாத காரணத்தால் ராஜ் நாத் சிங்கின் இலங்கை பயணம் ஒத்திவைக் கப்பட்ட இந்திய வெளியுறவு செயலகம் அறிவித்தது.

இவ்வாறானதொரு பின்னணியில் இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ். ஜெயசங்கர் இலங்கையில் அயோரா மாநாட்டில் பங்கேற்பது நிச்சயமற்ற நிலையை ஏற்படுத்தியுள்ளது. (அ)

## மற்றுமொரு...

ஹொங் 6' என்ற கப்பல் அடுத்த ஆண்டு ஜனவரி மாதம் இலங்கை வர வுள்ளதாக செய்திகள் வெளியாகியுள் என.

இந்த செய்தியால் இந்தியா மீண்டும் கிளர்ந்தெழக் கூடுமென அரசியல் ஆய்வாளர்கள் கூறுகின்றனர்.

இவ்வாறானதொரு பின்னணியிலேயே ஷின் யான் 6 கப்பலின் இலங்கைக்கான பயணத்தை எப்படியாவது நவம்பர் மாதம் வரை ஒத்திவைக்குமாறு அரசாங்கம் தரப்பிலிருந்து சீனாவிடம் கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டன.

ஆனால் சீனா இந்த கோரிக்கையை புறக்கணித்து திட்டமிட்டபடி கப்பலை இலங்கைக்கு அனுப்பு முயற்சியை இன்னமும் கைவிடவில்லை. சீனாவின் கப்பலை தடுத்து நிறுத்தினால் இலங்கை கடும் இராஜதந்திர நெருக்கடியை சந்திக்க வேண்டிய சூழ்நிலையும் உருவாகுமென சர்வதே அரசியல் ஆய்வாளர்கள் தெரிவிக்கின்றனர்.

இதேவேளை, சீனாவின் உளவு கப்பல்கள் இலங்கைக்கு வரவில்லை எனவும் சீனாவுடன் இலங்கை மேற் கொண்டுள்ள ஒப்பந்தத்தின் பிரகாரமே இந்தக் கப்பல்கள் இலங்கைக்கு வருவதாகவும் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க அமெரிக்காவில் கருத்து வெளியிட்டிருந்தார்.

"உளவுக் கப்பல்கள் இலங்கைக்கு வருவதை நிரூபிக்க எவரிடமும் ஆதாரம் இல்லை.

சீன அறிவியல் கழகம் தேசிய நீர்வள ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு நிறுவனம் (நாரா) மற்றும் பல பல்கலைக்கழகங்களுடன் ஒப்பந்தம் செய்துள்ளதாலேயே சீன ஆராய்ச்சிக் கப்பல்கள் இலங்கைக்கு வந்துள்ளன.

கடந்த 10 வருடங்களாக ஆராய்ச்சிக் கப்பல்கள் இலங்கைக்கு வருகின்றன. இதனால் எந்தப் பிரச்சினையும் இல்லை. இந்த ஆராய்ச்சிக் கப்பல்களை உளவு பார்க்க பயன்படுத்தலாமா என்று ஒரு நாடு கேள்வி எழுப்பியது.

வெளிநாட்டு கப்பல்களுக்கு அனுமதி வழங்குவதற்கு இலங்கை நிலையான செயல்பாட்டு நடைமுறையை கொண் டுள்ளது. இது இலங்கை கடற்படையினரால் உருவாக்கப்பட்ட ஓர் அமைப்பாகும்.

நிலையான செயல்பாட்டு நடைமுறை தொடர்பாக அண்மையில் இந்தியாவுடன் கலந்துரையாடல் நடத்தப்பட்டதுடன், இந்தியா பரிந்துரைத்த திருத்தங்களுக்கு இலங்கை இடமளிக்கப் பட்டுள்ளது.

எனவே, இப்போது வரும் எந்தவொரு கப்பலும் இந்தியாவுடன் கலந்தாலோசித்து நாங்கள் கொண்டு வந்த நடைமுறைக்கு உட்பட்டது.

இந்தியாவுக்கு அச்சுறுத்தலாக இருக்கும் எந்தவொரு கப்பலும் இலங்கைக்கு வருவதை அனுமதிக்க மாட்டோம்" என்றும் அவர் கூறியிருந்தார்.

இவ்வாறான பின்புலத்திலேயே "ஷின் யான் 6", 'சியாங் ஹொங் 6' கப்பல்களின் வருகை மற்றும் ஜனாதிபதியின் சீன விஜயம் என்பன இடம்பெற உள்ளன. (அ)

## 3 இலங்கை இளைஞர்கள்...

சடலமாக கண்டெடுக்கப்பட்டனர்.

இந்த கொலைகளுடன் இருவருக்கு தொடர்பு இருப்பதாகவும், சம்பவம் நிகழ்ந்த இடத்திற்கு பொலிஸார் சென்றடைவதற்கு முன்னதாகவே இலங்கையைச் சேர்ந்த அவர்கள் தப்பியோடி விட்டதாக கோலாலம்பூர் பொலிஸ் தலைவர் கமிஷனர் டத்தோ அலாவுதீன் அப்துல் மஜித் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

நேற்று முன் தினம் இரவு 11 மணியளவில் நான்கு மாடிக் கடை வீதியில் உள்ள ஒரு வீட்டில் சண்டை நடந்ததாக பொதுமக்களிடமிருந்து பொலிஸாக்கு அழைப்பு வந்தது.

அந்த வீட்டின் இரண்டாவது மாடியில் மூன்று ஆண்கள் இறந்து கிடந்தனர். அவர்கள் அனைவரும் அவ்வீட்டின் களஞ்சிய அறையில், அவர்களின் வலது கைகள் மற்றும் கால்கள் ஒன்றாக இணைக்கப்பட்டு, தலைகள் பிளாஸ் ரிக்கால் சுற்றப்பட்ட நிலையில் காணப் பட்டன. அவர்களில் ஒருவரின் சடலம் நிர்வாணமாக காணப்பட்டது.

வீட்டைச் சோதனை செய்ததில், 40 வயதுடைய இலங்கைத் தம்பதிகள் வீட்டை வாடகைக்கு எடுத்திருந்தமை தெரியவந்தது. பலியான மூன்று பேரில், அந்த தம்பதியின் 20 வயது மகனும் உள்ளடங்குகிறார்.

இலங்கை தம்பதியர் விசாரணைக்கு உதவுவதற்காக கைது செய்யப்பட்டனர். அவர்கள் 7 நாட்கள் தடுத்து வைக்கப்படுவார்கள்.

கொல்லப்பட்ட ஏனைய 2 இலங்கை இளைஞர்களும் அந்த வளாகத்தில் அறையொன்றை வாடகைக்கு பெற்று தங்கியிருந்தவர்கள்.

கொல்லப்பட்ட மூவரும் 20 வயதுக்கும் 30 வயதுக்கும் உட்பட்டவர்கள் . இந்த படுகொலையில் முக்கிய சந்தேகநபர்கள் இருவர் தப்பியோடியவர்கள் என பொலிஸார் சந்தேகிக்கின்றனர்.

சம்பவம் நிகழ்ந்த இடத்தில் இருந்து கத்தி ஒற்றையும் பொலிஸார் கைப் பற்றினர்.

தலைமறைவாகியுள்ள சந்தேக நபர்கள் இருவரும், கொலையுண்ட ஒரு இளைஞனின் பெற்றோருடன் பழகியவர்கள். ஆறு மாதங்களாக அவர்கள்

அறிமுகமான நண்பர்களாக இருந்தவர்கள். 2 நாட்களாக அந்த வீட்டில் தங்கிருந்துள்ளனர்-என்றார். (அ)

## சரியான...

யாழ்ப்பாணத்தில் நேற்று இடம் பெற்ற ஊடக சந்திப்பின் போதே அவர் இவ்வாறு கூறினார்.அவர் மேலும் தெரிவிக்கையில்-

உலகில் சீனா குறைந்த பணத்தை கூடுதல் வட்டிக்கு வழங்கும் நாடாக திகழ்கின்ற நிலையில் தனது அடி மடியில் கை வைக்காத நிலையில் சீனா நடந்து கொள்கிறது.

நாங்கள் அறிந்த வரையில் முன்னர் ஆப்கான் காரர்களே குறைந்த பணத்தை கூடுதல் வட்டிக்கு கொடுப்பவர்களாக அறிந்திருக்கிறோம். ஆனால் இந்நிலை மாறி சீனா தற்போது உலகில் குறைந்த பணத்தை கூடிய வட்டிக்கு கொடுக்கும் நாடாக மாறி வருகிறது.

இலங்கைக்கு கடன் வழங்கிய நாடுகளில் சீனாவே அதிக கடன்களை வழங்கியுள்ள நிலையில் தான் வழங்கிய கடனை எந்த வழியிலும் சீனா மீளப் பெறுவது நிச்சயம்.

சர்வதேச நாணய நிதியம் சீனா இலங்கைக்கு வழங்கிய கடன் தொடர்பில் சரியான பொறிமுறை ஒன்றை ஏற்படுத்துமாறு கூறி வரும் நிலையில் இது வரை அவ்வாறு நடந்ததாக தெரியவில்லை.

நாங்கள் ஒன்றை கூறுகிறோம், இலங்கையில் இடம்பெற்ற மனித உரிமை மீறல்களுக்கு சரியான பொறி முறை ஏற்படுத்தப்படாத நிலையில் இதனை காரணமாக வைத்து கடன் வழங்குவது தொடர்பில் சர்வதேச நாணய நிதியம் பரிசீலனை செய்ய வேண்டும்.

ஆகவே சீனாவிடம் இலங்கை பெற்ற கடனை எந்த வழியிலும் சீனா மீளப் பெறுமே தவிர கொடுத்த கடனுக்காக தனது அடிமடியில் கை வைக்கவிடாது- என்றார். (அ)

ஈழநாடு
Eelanadu

# ரணில் வேட்பாளராக களமிறங்கினால் பொதுஜன பெரமுன ஆதரவளிக்காது!

ரஞ்சித் பண்டார திட்டவட்டம்



கொழும்பு, செப். 24

**ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க எதிர்வரும் தேர்தலில் வேட்பாளராக களமிறங்கினால் பொது ஜன பெரமுன ஆதரவளிக்காது என பாராளு மன்ற உறுப்பினர் ரஞ்சித் பண்டார தெரிவித் துள்ளார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில்-

பொதுஜன பெரமுனவின் ஆதரவு ரணில் விக்கிரம சிங்கவுக்கு வழங்கப்படுமென எவரும் கூறவில்லை.

ஜனாதிபதி வேட்பாளராக கள மிறங்கக்கூடிய பல தகுதியான வேட்பாளர்கள் எமது கட்சியில் உள்ளனர். ஆகவே, ரணிலுக்கு ஆதரவளிப்போமென நாம் ஒரு போதும் கூறவில்லை.

பொதுஜன பெரமுனவின் சார்பில் வேட்பாளர் ஒருவரை நிறுத்துவமே எமது நோக்கமாகும் - என்றார்.

பொதுஜன பெரமுனவின் பொது வேட்பாளராக ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவை களமிறக்க வேண்டு மென சில முக்கிய உறுப்பினர்கள் பொது வெளியில் கருத்துகளை வெளியிட்டு வருகின்றனர்.

என்றாலும், கட்சியின் தேசிய அமைப்பாளர் பஸில் ராஜபக்ஷவை ஜனாதிபதி வேட்பாளராக நிறுத்த வேண்டுமென கட்சியின் மற்றுமொரு தரப்பினர் போர்க்கொடி உயர்த்தியுள்ளனர்.

இந்நிலையில், அக்கட்சியின் முக்கிய உறுப்பினரான ரஞ்சித் பண்டாரவின் இந்த கருத்து அரசியல் அரங்கில் பேசுபொருளாக மாறியுள்ளது. (அ)

# இலவச பாடப்புத்தகங்கள் வருட இறுதியில் விநியோகம்

கொழும்பு, செப். 24

2024ஆம் ஆண்டு ஆரம்பமாவ தற்கு முன்னர், அடுத்த வருடத்திற் கான இலவச பாடப்புத்தகங்களை பாடசாலை மாணவர்களிடையே விநியோகிக்க ஏற்பாடுகள் முன்னெ டுக்கப்பட்டுள்ளதாக கல்வி அமைச் சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித் தார்.

ஹோமாகம, பிட்டிபனவில் அமைந்துள்ள கல்வி வெளியீட்டு திணைக்களத்தின் பிரதான களஞ் சியசாலையில் இருந்து நாடளாவிய ரீதியில் உள்ள பிராந்திய மத்திய நிலையங்களுக்கு பாடப்புத்தகங்கள் விநியோகிக்கப்படும் செயற் பாட்டை பார்வையிட்டபோதே அவர் இதனை குறிப்பிட்டார்.

அத்துடன், தேர்ந்தெடுக்கப் பட்ட எண்ணிக்கையிலான மாண வர்களுக்கு மட்டுமே பாடசாலை சீருடைத் துணிகள் வழங்கப்படும் என பல்வேறு தரப்பினர் முன்வைக்கும் ஆதாரமற்ற குற்றச்சாட்டுகளை நிராகரிப்பதாக அமைச்சர் தெரிவித்தார்.

சீருடைத் துணிகள் மற்றும் மதிய உணவு ஆகிய இரண்டும் வழமை போன்று தாமதமின்றி வழங்கப்படும் எனவும் கல்வி அமைச்சர் உறுதியளித்தார்.

இந்த அனைத்து பௌதீக வசதிகளையும் வழங்குவதன் ஊடாக, 2024 ஆம் ஆண்டின் இறுதிக்குள் சரியான நேரத்தில் பாடத்திட்டத்தை நிறைவு செய்வ தற்கும், கொவிட் 19 தொற்று பரவலால் சீர்குலைந்த அனைத்து கல்வி நடவடிக்கைகளையும் மீட்டெடுப்பதற்கும் எதிர்பார்ப்ப தாக அவர் தெரிவித்தார்.

கடந்த ஆண்டுடன் ஒப்பிடும் போது, இந்த ஆண்டு பாடசாலை இலவச பாடப்புத்தக அச்சிடும் பணியை, குறைந்த செலவில், உரிய நேரத்தில் செய்து நிறைவு செய்துள்ளதாகவும் 4,000 மில்லி யன் ரூபாவை அரசாங்கத்தினால் சேமிக்க முடிந்துள்ளது எனவும் கல்வி அமைச்சர் சுசில் பிரேம ஜயந்த குறிப்பிட்டார். (அ)

# வாகனங்கள் தவிர்ந்த அனைத்து பொருட்களின் இறக்குமதி கட்டுப்பாடுகளை நீக்க நடவடிக்கை

கொழும்பு, செப். 24

வாகனங்கள் தவிர்ந்த ஏனைய அனைத்து பொருட்க ளுக்கான இறக்குமதி கட்டுப்பாடுகளை எதிர்வரும் மாதம் நீக்க நடவடிக்கை எடுக்கப்படும் என நிதி இரா ஜாங்க அமைச்சர் செஹான் சேமசிங்க அறிவித்துள்ளார்.

இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில்-

இந்த நாட்டில் மிகப்பெரிய நெருக்கடியாக இருந்த ரூபாவின் பெறுமதி, இன்று சாதாரண நிலைக்கு உயர்த் தப்பட்டுள்ளது. நமது அத்தியாவசிய இறக்குமதிகளுக் கான நமது இருப்பு அளவு வலுப்பெற்று வருகிறது.

அடுத்த மாதத்திற்குள் வாகனங்களுக்கான ஏறக் குறைய 270 எச்.எஸ்.பி ஹோட் தவிர மற்ற அனைத்து இறக்குமதி கட்டுப்பாடுகளையும் அடுத்த மாதத்திற்குள் தளர்த்தும் திறன் எங்களிடம் உள்ளது. எதிர்வரும் மாதமளவில் அது இடம்பெறும்.

அதனூடாக, விலை நிலைத்தன்மைக்கு பாரிய நிவார ணம் கிடைக்கக்கூடும். ஏனென்றால், தற்போது அவற் றில் சிலவற்றுக்கு கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ள தால், சந்தையில் தேவைக்கு ஏற்ற வழங்கல் இல்லை. அதுமட்டுமின்றி விலை உயர்வும் ஏற்பட்டுள்ளது.

எனவே, எதிர்காலத்தில் அரசாங்கம் இந்த திறந்த சந்தைக் கொள்கை தொடர்பில் செயற்படுமே தவிர தேவையற்ற தலையீட்டை செய்ய எதிர்பார்க்காது. அங்கிருந்து, அனைத்து வணிக சமூகமும் நியாயமான வர்த்தகத்திற்கு நகரும் என்று நாங்கள் நம்புகிறோம்-என் றார். (அ)

# இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவிலும் மோசடியா?

கொழும்பு, செப். 24

இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவினால் கடந்த ஆண்டு தாக்கல் செய்யப்பட்ட 89 வழக்குகளில் 45 வழக்குகள் பல்வேறு காரணங்களுக்காக வாபஸ் பெறப்பட்டுள்ள தாக தேசிய கணக்காய்வு அலுவலகம் தெரிவித்துள்ளது.

இதேவேளை, இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவினால் தாக்கல்செய்யப்பட்ட18 வழக்குகளில் 11 வழக்குகளுக் குரிய சந்தேகநபர்கள் குற்றமற்றவர்கள் என 2021 ஆம் ஆண்டு விடுவிக்கப்பட்டுள்ளனர்.

2021 ஆம் ஆண்டில் இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழு 69 வழக்குகளை தாக்கல்செய்த நிலையில், அவற்றில் 40 வழக்குகள் வாபஸ் பெறப்பட்டதாகவும், இது மொத்த வழக்குகளின் எண்ணிக்கையில் 58 சதவீதமாகும் என்றும் கணக்காய்வு அறிக்கையில் தெரிவித்துள்ளது.

இதற்கிடையில், குறித்த ஆணைக்குழுவின் சட்டப் பிரிவில் 1508 தீர்வு காணப்படாத கோப்புகள் இருப்ப தாகவும் அவற்றில் 489 கோப்புகள் ஐந்தாண்டுகளுக்கு மேலாக தீர்வு காணப்படாமல் இருப்பதாக அந்த அறிக்கை சுட்டிக்காட்டுகிறது.

கடந்த ஆண்டு டிசெம்பர் 31ஆம் திகதிவரை 926 கோப்புகள் நிலுவையில் உள்ளதாகவும், அது குறித்த அறிக்கைகள் சமர்ப்பிக்கப்படவில்லை என்றும் கணக் காய்வு அலுவலக அதிகாரிகள் சுட்டிக்காட்டுகின்றனர்.

இலங்கையில் இலஞ்சம் மற்றும் ஊழலை ஒழிப்பதற்கான தேசிய செயற்திட்டம் ஆரம்பிக்கப் பட்டு மூன்றரை வருடங்கள் கடந்துள்ள போதிலும், அதில் குறிப்பிடப்பட்டுள்ள 27 பணிகளில் 11 பணிகள் மாத்திரமே நிறைவேற்றப்பட்டுள்ளதாக அந்த அறிக்கை யில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதேவேளை, கடந்த வருடம் இலஞ்ச ஊழல் குற்றச்சாட்டு விசாரணை ஆணைக்குழுவில் 36 சிரேஷ்ட நிலை வெற்றிடங்கள், 203 மூன்றாம் நிலை வெற்றிடங் கள், 158 இரண்டாம் நிலை வெற்றிடங்கள், 56 ஆரம்ப நிலை வெற்றிடங்கள் மற்றும் 15 புலனாய்வு பணியாளர் வெற்றிடங்கள் காணப்படுவதாக கணக்காய்வு அலுவல கம் தெரிவித்துள்ளது. (அ)

# சாதாரண தரப் பரீட்சையும் ஒன்றரை மாதம் தாமதமாகும்

கொழும்பு, செப். 24

கல்வி பொது தராதர சாதாரணத் தரப் பரீட்சை சுமார் ஒன்றரை மாதமளவில் தாமதமாகும் என கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்தார்.

ஹோமாக பகுதியில் இடம்பெற்ற நிகழ்வில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இதனை கூறினார்.

இதேவேளை, நவம்பர் மாதம் நடத்துவதற்கு திட்ட மிட்டிருந்த கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சை யும் பிற்போடப்பட்டுள்ள நிலையில் கல்விப் பொது தராதர உயர்தரப் பரீட்சை நடத்தப்படும் புதிய திகதி அடுத்த வாரம், பரீட்சைகள் ஆணையாளர் நாய சுத்தி னால் அறிவிக்கப்படும் எனவும் கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த கூறினார். (அ)

# அவுஸ்திரேலியாவிலும் திலீபனுக்கு நினைவேந்தல்

மெல்பேர்ன், செப். 24

தியாக தீபம் திலீபனின் 36 ஆவது நினைவேந்தல் நிகழ்வுகள் அவுஸ்திரேலியாவிலும் அனுஷ்டிக்க ஏற் பாடுகள் இடம்பெற்றுள்ளன.

இந்நிகழ்விற்கான ஏற்பாடுகளை அவுஸ்திரேலியா வில் வாழும் தமிழர்கள் மற்றும் தமிழ் அமைப்புகள் இணைந்து செய்துள்ளன.

இதன்படி அவுஸ்திரேலியாவின் நான்கு நகரங்களில் நினைவேந்தல் நிகழ்வுகள் இடம்பெறவுள்ளன.

இன்று மெல்பேர்னிலும், 26 ஆம் திகதி பிரிஸ் பேர்ண் மற்றும் சிட்னியிலும், செப்ரெம்பர் 30 ஆம் திகதி பேர்த்திலும் நினைவேந்தல் நிகழ்வுகளுக்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

இதேவேளை சிட்னியில் இடம்பெறவுள்ள நினை வேந்தல் நிகழ்வில் காலை 10 மணி முதல் மாலை 6 மணி வரையில் உண்ணாவிரத நோன்பும், இரவு 7 மணிக்கு வணக்கம் செலுத்தும் நிகழ்வும் இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

# நாட்டின் அனைத்து குடும்பங்களும் தலா 47 இலட்சம் ரூபா கடனாளிகள்!

கொழும்பு, செப். 24

நாட்டில் வாழும் நான்கு பேரை கொண்ட அனைத்து குடும்பங்களும் தலா 47 லட்சத்து 24 ஆயிரம் ரூபாவுக்கு கடனாளிகளாக்கப்பட்டுள்ளதாக பேராதனை பல்க லைக்கழகத்தின் விஞ்ஞான மற்றும் புள்ளிவிபர கற்கைப் பிரிவின் பேராசிரியர் வசந்த அத்துக்கோரள மற்றும் ஓ. ஜீ.தயாரத்ன பண்டா ஆகியோர் மேற்கொண்ட புதிய ஆய்வில் தெரியவந்துள்ளது.

இலங்கை அரசு பெற்றுக்கொண்ட மிக அதிகளவான தேசிய மற்றும் சர்வதேச கடன் காரணமாக இந்த குடும் பங்கள் கடனாளிகளாக மாறியுள்ளனர் என பேராசிரியர் அத்துக்கோரள கூறியுள்ளார்.

இதனடிப்படையில் தனிநபர் கடன் தொகையான இந்த வருடம் ஏப்ரல் மதம் வரை 11 லட்சத்து 81 ஆயி ரம் ரூபாவாக காணப்பட்டது எனவும் அவர் குறிப்பிட் டார்.

இந்த தனிநபர் கடன் தொகையானது கடந்த 2020 ஆம் ஆண்டு 6 லட்சத்து 90 ஆயிரம் ரூபாவாக காணப் பட்டது.

2023 ஆம் ஆண்டின் தேசிய தனிநபர் கடன் தொகை யானது 6 லட்சத்து 90 ஆயிரத்து 64 ரூபா எனவும் தனி நபர் வெளிநாட்டு கடன் தொகையானது 4 லட்சத்து 90 ஆயிரத்து 972 ரூபா எனவும் அவர் மேலும் கூறினார்.

# வீரவில திறந்தவெளி சிறையில் கைதிகள் இருவர் தப்பியோட்டம்

கொழும்பு, செப். 24

வீரவில திறந்தவெளி சிறைச்சாலையில் புனர்வாழ் வளிக்கப்பட்டு வந்த கைதிகள் இருவர் தப்பிச் சென்றுள் ளனர்.

கொலன்னாவ மற்றும் களனி வனவாசல பிரதேசங்க ளை சேர்ந்த 27 மற்றும் 29 வயதுடைய இரு கைதிகளே தப்பிச் சென்றுள்ளனர்.

போதைப்பொருள் வைத்திருந்ததாக அவர்கள் மீது குற்றம் சுமத்தப்பட்டுள்ளதாக சிறைச்சாலைகள் ஊடகப் பேச்சாளர் சந்தன ஏக்கநாயக்க தெரிவித்தார். (அ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 24.09.2023 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# மூன்றாவது பெண்..!

குரு அரவிந்தன்



அந்தச் சிறுமி சட்டென்று எனது கவனத்தைத் தன் பக்கம் திருப்பினாள், காரணம் அவளது அந்தக் குரலில் பாசம் இழையோடியிருந்தது.

மூத்த மகளாக இருக்க வேண்டும் மற்றப் பிள்ளைகளைவிடச் சற்றுப் பெரியவளாகத் தெரிந்தாள். பத்து வயதிருக்கலாம்.

'டாட் எனக்கு ஒரு ஸ்சூமூதி' என்று இங்கிருந்தே குரல் கொடுத்தாள்.

அந்தச் சிறுமியின் குரலில் இருந்த கவர்ச்சி போலவே அவளிலும் அப்படி ஒரு கவர்ச்சி இருந்தது. நன்றாக உடை அணிந்து அழகாக, சிரித்த முகத்தோடு, அமைதியாக இருந்தாள்.

அந்தக் குடும்பத்தினர் எனக்கு அருகே இருந்த மேசையில் தான் சுற்றிவர அமர்ந்திருந்தார்கள். தாய் தகப்பன் மூன்று பிள்ளைகள்.

தகப்பன் பிள்ளைகளிடம் 'என்ன சாப்பிடப் போறீங்க..?' என்று அவர்களது விருப்பத்தைக் கேட்டார். நியோன் விளக்கு வெளிச்சத்தோடு இருந்த பதாகையில் உணவு வகைகளின் பெயர்களும், அதற்கான படங்களும், விலைப் பட்டியலும் மின்னிக் கொண்டிருந்தன.

அவர்கள் அதை உன்னிப்பாகப் பார்த்து ஆளுக்கொரு உணவைக் குறிப்பிட, தகப்பன் பொறுமையாக கேட்டுக் கொண்டிருந்தார். யாருக்கு என்ன தேவை என்பது எல்லாவற்றையும் உள்வாங்கிக் கொண்டபின், மனைவியிடம் கேட்டு, மனைவியின் விருப்பத்தையும் அறிந்து, அவர்களுக்கு உணவு எடுப்பதற்காக 'மக்டொனால்ட்' உணவக வரிசையில் சென்று நின்றார்.

உணவைப் பெறுவதற்காக வரிசையில் பொறுமையாக தந்தை நிற்பதை இங்கிருந்தே மூத்தமகள் பார்த்த வண்ணம் இருந்தாள். மற்ற இருவரும் தாயும் தங்களுக்குள் ஏதோ பேசிக் கொண்டிருந்தனர். வரிசையில் நின்று உணவைப் பெற்றுக் கொண்ட தந்தை அவர்களுக்கான உணவுத் தட்டைக் கொண்டு வந்து மேசையில் வைத்தார். தாயார் அவற்றை எடுத்த அவரவர் விருப்பப்படி உணவைப் பங்கிட்டுக் கொடுத்தார். மூத்த மகள் தகப்பனைத் திரும்பிப் பார்த்து 'தாங்ஸ் டாட்' என்று சொல்ல, அவர் அவளை அணைத்து முத்தம் கொடுத்தார்.

எப்பொழுதுமே மூத்த மகள் தகப்பனின் செல்லப் பிள்ளையாக இருப்பது வழக்கம் என்பதால் அதை நினைத்து நான் மனதுக்குள் சிரித்தேன். ஊரிலே என்றால் இதெல்லாம் சகஜம், யாரும் கண்டு கொள்ள மாட்டார்கள். ஆனால் புலம்பெயர்ந்த இந்த நாட்டில் பொது இடத்தில் இப்படிச் செய்தால், அதாவது ஓரளவு வளர்ந்த பெண் குழந்தைகளுக்கு முத்தம் கொடுத்தால் என்ன நடக்கும் என்பதையும் நானறிவேன்.

இப்படித்தான், எனது நண்பர் ஒருவர் இந்தியாவில் இருந்து வந்து சமீபத்தில் தான் கனடாவில் குடியுரிமை பெற்றிருந்தார். அவரது மகள் படிப்பில் கெட்டிக்காரி என்பதால், பாடசாலையில் நல்ல பெறுபேறு எடுத்து சித்தியடைந்திருந்தாள். தனது தேர்ச்சி அறிக்கையை தந்தையிடம் காட்டிய போது அவர் மகிழ்ச்சி பொங்க மகளைப் பாசத்தோடு அணைத்து 'படிப்புத்தான் முக்கியம் செல்லம், உன்னுடைய எதிர்காலம் அதில்தான் தங்கி இருக்கிறது. இன்னும் நன்றாய் படிக்கணும்' என்று சொல்லி மகளின் முன்நெற்றியில் ஒரு முத்தம் ஒன்று கொடுத்துப் பாராட்டியிருந்தார்.

மறுநாள் தோழிகள் பாடசாலையில் சந்தித்த போது ஒவ்வொரு பெண்ணும் தங்களுக்குப் பெற்றோரிடம் இருந்து பரீட்சையில் சித்தி அடைந்ததற்காக என்ன பரிசு கிடைத்தது என்று பீற்றிக் கொண்டார்கள். ஆளுக்காள் தங்களுக்குக் கிடைத்த பரிசைப் பற்றிச் சொன்னார்கள். இவளைக் கேட்ட போது, 'அப்பா சந்தோஷத்தில் என்னை அணைத்து எனக்கொரு முத்தம் தந்தார்' என்று அவள் சாதாரணமாகச் சொன்னாள்.

'முத்தமா, என்னடி சொல்கிறாய்?'

'அப்பாவுக்கு என்னை ரொம்பப் பிடிக்கும், எனக்கும் அப்பா என்றால் ரொம்பப் பிடிக்கும்' என்றவளை, எல்லோரும் ஆச்சரியத்தோடு பார்க்க, தந்தையின் பாசத்தின் வெளிப்பாட்டைச் சொல்லிக் காட்டியதில் அவள் பெருமையோடு வெட்கப்பட்டுத் தலையைக் குனிந்து கொண்டாள்.

எங்கே, எப்போ, எதைச் சொல்ல வேண்டும், எதைச் சொல்லக்கூடாது என்பதைக்கூட அவள் அப்போது தெரிந்து வைத்திருக்கவில்லை.

இந்த நாட்டுச் சட்ட திட்டங்கள் பற்றிப் புதிதாகப் புலம் பெயர்ந்த அவளுக்குத் தெரிந்திருக்கவில்லை. அவளுக்கு மட்டுமல்ல, அவளது பெற்றோருக்கும் அது தெரிந்திருக்கவில்லை. உண்மையாகவே பாசம் என்று வரும் போது, சட்டத்தை யாரும் கணக்கெடுப்பதில்லை. அன்பு, பாசம், காதல் என்பதை எல்லாம் வெளிக்காட்ட வரும் போது, சில சமயங்களில் சில நாடுகளில் சமூகத்தின் கட்டமைபில் சட்டம் என்ற வரையறையொன்று இருப்பதையே சிலர் நினைத்துப் பார்ப்பதில்லை.

எப்படியோ இந்தச் செய்தி அங்கு நின்ற ஒரு மாணவி மூலம் வகுப்பு ஆசிரியையிடம் சென்றடைந்தது. இப்படி ஒரு செய்தியைக் கேள்விப்பட்டபின் சிறுவர் பாதுகாப்புச் சட்டப்படி ஆசிரியை மௌனம் காக்க முடியாது. நடந்ததை முறையிடாவிட்டால், வேண்டும் என்றே ஒரு குற்றத்தை மறைத்ததாக ஆசிரியர் மீது சட்டம் திரும்பலாம். எனவே அதிபரிடம் அவர் சென்று முறையிட்டார். அதிபரிடம் இருந்து தகவல் உயர் மட்டத்திற்குச் சென்றது. அன்று சற்று நேரம் கழித்து தந்தையின் வேலைத் தளத்திற்குச் சென்ற பொலிஸார் அவரிடம் இது பற்றி விசாரனை செய்தனர். பாசத்தின் வெளிப்பாடாய் நடந்த ஒரு சின்ன விடயம் என்றுதான் எல்லோரும் நினைத்தார்கள், அனால் அது சிறுவர் பாதுகாப்புச் சட்டப்படி குற்றமாகையால் இவ்வளவும் நடந்து முடிந்தது மட்டுமல்ல, அதிகாரிகளின் நடவடிக்கை காரணமாக அந்தப் பெண்ணும் தந்தையிடம் இருந்து பிரிக்கப்பட்டுத் தனிமைப் படுத்தப்பட்டார். பிள்ளைகளைப் பாதுகாக்கிறோம் என்ற மேலைத் தேசத்து சட்ட திட்டங்கள் காரணமாக, தந்தையின் பாசம் புறம் தள்ளப்பட்டதால், அந்தக் குடும்பமே செய்வதறியாது உடைந்து போய்விட்டது. மகளிடம் இருந்து பிரிக்கப்பட்டது மட்டுமல்ல, இதற்காகவே காத்திருந்த சமூகம் அவரைக் கண்டபோதெல்லாம் முகம் சுழித்ததாலும் அவர் மனநோயாளியாக்கப்பட்டார்.

உண்மைதான், அனேகமான குடும்பத்தில் மூத்த மகள் மீது தகப்பனுக்குப் பாசம் இருப்பது பொதுவான அனுபவத்தில் தெரிந்ததே! பாசத்தைக் கொட்டுவதற்கு மகனைவிட மகள்தான் எப்பொழுதும் முதலில் நிற்பதும் தெரிந்ததுதானே. இங்கே கனடாவில் மாற்றாந் தாய், மற்றும் மாற்றாந் தகப்பனிடம் இருந்து பிள்ளைகளைப் பாதுகாப்பதற்காகப் பிள்ளைகளின் நலன் கருதி இப்படியான சட்டங்களை நடைமுறையில் வைத்திருக்கிறார்கள். சில சமயங்களில் சமூகம் இதையெல்லாம் கண்டும் காணாத மாதிரி நடந்து கொண்டாலும், முறைப்பாடு என்று வந்தால் அப்புறம் நடவடிக்கை எடுத்துத்தான் தீரவேண்டும்.

அருகே உட்கார்ந்திருந்த அந்தக் குடும்பத்தினர் சந்தோஷமாக உணவருந்தினார்கள். தகப்பன் யாருடனோ செல்பேசியில் பேசிக் கொண்டிருந்தார். உணவருந்திக் கொண்டே சிறிது நேரம் எல்லோரும் உட்கார்ந்து பேசிக் கொண்டிருந்தார்கள். உணவருந்தி முடித்ததும் மிகுதி எல்லாவற்றையும் குப்பைத் தொட்டியில் போட்டு, மேசையைத் துப்பரவு செய்து விட்டு அங்கிருந்து அவர்கள் எல்லோரும் கிளம்பி வெளியே உள்ள வண்டிகளின் தரிப்பிடத்தை நோக்கிச் சென்றார்கள்.

இவர்களையே வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்த நானும் உணவருந்தி முடித்து விட்டதால், வெற்றுப் பெட்டிகளை குப்பைத் தொட்டியில் போட்டு விட்டு, வெளியே வந்தேன். பொலிஸாரின் வண்டி ஒன்று வாசலில் நிற்க, ஒரு அதிகாரி இறங்கி உள்ளே சென்றார். அவர்களும் உணவு வாங்க வந்திருக்கலாம் என்ற நினைப்போடு, அங்கே தரிப்பிடத்தில் நின்ற எனது வண்டியை நோக்கி நடந்தேன்.

கறுப்பு நிறத்திலான பிஎம்டபிள்யூ வண்டி ஒன்று அப்போது அவர்களுக்கு அருகே வந்து நின்றது.

'டாட் பாய்..!' என்று சொல்லிக் கையை அசைத்து எல்லோருக்கும் காட்டி விட்டு அந்தச் சிறுமி அருகே வந்து நின்ற அந்தக் காரில் ஏறி அமர்ந்தாள். அந்த வண்டி என்னைக் கடந்து சென்ற போது, இதுவரை இருந்த புன்னகை மறைந்து, அவளது முகம் வாடிப்போயிருப்பதை அவதானித்தேன்.

எனக்கு என்ன நடக்கிறது என்று ஒரு கணம் புரியவில்லை. தரிப்பிடத்தில் எனது வண்டிக்கு அருகே அவர்களது வண்டியும் நின்றதால், அருகே முன் கதவைப் பிடித்தபடி நின்ற அந்தத் தாயைப் பார்த்து புன்னகை உதிர்த்தேன். அவரும் சினேகிதமாகப் பதிலுக்குப் புன்னகைத்தார்.

கேட்பதா விடுவதா என்று ஒரு கணம் யோசித்தேன். எனக்குள் எழுந்த கேள்விக்கு விடைதெரியாமல் அங்கிருந்து நகர, மனம் இடம் தரவில்லை. முதலில் தயங்கினாலும் ஆர்வம் காரணமாகத் தாயிடம் கேட்டேன்.

'எங்கே அவா போகிறா, அவுட்டிங்கா?' என்று கேட்டேன்.

'இல்லை, இப்போ அவளை அழைத்துச் செல்வது அவளுடைய ஸ்டெப் பாதர். இன்னிக்கு அப்பாவும் மகளும் மாதத்தில் ஒருக்கால் சந்திக்கிற தினம். அதுதான் இன்று எங்க கூட அவள் வந்தாள்' என்றாள் அந்தத் தாய்.

'அப்படியா?' என்றேன்.

'அதனாலதான் அப்பாவைப் பார்க்கக் காலையிலே கூட்டிக் கொண்டு வந்து விட்டாங்க, இங்கே சாப்பிட வந்தோம். இப்ப நேரம் முடிஞ்சு போச்சு, அதுதான் வந்து கூட்டிட்டுப் போறாங்க..!'

'அப்போ அந்தப் பெண்ணு..?'

'அந்தப் பெண்ணா.. அவள் இவருடைய மூத்த பெண்ணு..! இவள் என்னுடைய மூத்த பெண்ணு..!

எனக்குப் புரிந்தும் புரியாதது போலிருந்தது.

'அப்போ, இவள்தான் உங்க மூத்த பெண்ணா?' என்றேன்.

'ஆமாம், இவள்தான் என்னோட பெண்ணு, வாறகிழமைதான் இவளோட டேட், வாறகிழமை இவளை நான் இவளோட அப்பாகிட்ட இதுபோல அனுப்பணும்!' என்று சொல்லிக் கொண்டே அருகே நின்ற தன் மகளை அணைத்து உச்சி முகர்ந்தாள் அந்தத் தாய்!

எனக்கு என்ன சொல்வதென்றே புரியவில்லை. இரண்டு பெண்களைப் பற்றிச் சொன்னதையே என்னால் உள்வாங்க முடியாமல் இருந்தது. சற்றுத் தள்ளித் தகப்பனுடன் நின்ற அந்த மூன்றாவது சிறிய பெண்ணை 'உவள் யார்?' என்று கேட்கவோ, அந்தச் சிறுமியின் உறவு முறையைத் தெரிந்து கொள்ளவோ எனக்குத் தோன்றவில்லை.

அந்தப் பெண் அவருடையது, இந்தப் பெண் என்னுடையது, உந்தப் பெண் 'எங்களுடையது' என்றுதான் பதில் வரும். பல்கலாச்சார சூழலில் நாங்களும் சமாளித்துக் கொண்டு வாழப் பழகிக் கொண்டாலும், மேற்கொண்டு எதுவும் பேசாமல் நான் மௌனமாய் எனது வண்டி நோக்கி நகர்ந்தேன். இந்தக் கதையெல்லாம் அங்கே நின்று கேட்டுக் கொண்டிருந்தால், என் மனசு தாங்கா தோய்..!

(தமிழில் அ, இ, உ என்ற மூன்று சுட்டெழுத்துக்கள் இருக்கின்றன. அகரம், இகரம், உகரம் என்று சொல் வார்கள். அவள், இவள் என்ற சொற்கள் பாவனையில் இருந்தாலும், இடைப் பட்ட 'உவள்' என்ற சொல் பாவனை யற்றுப் போய்க் கொண்டிருக்கின்றது. எனவே உவள் என்ற சொல்லை இச்சிறுகதையில் பாவித்தேன்.)




**திரைப்படம் : ஆர். யு. ஓகே. பேபி**
**இயக்கம் : லட்சுமி ராமகிருஷ்ணன்**
**இசை : இளையராஜா**
**நடிப்பு : சமுத்திரக்கனி, அபிராமி, முல்லையரசி**

குடும்ப உறவுகளை மையப்படுத்திய கதைகளை நெடுந் தொடர்களில்தான் அதிகம் பார்க்க முடிகிறது. திரைப்படமாக எடுத்தால் புறம் தள்ளிவிடுகிறார்கள். இருந்தாலும், அதைப் பற்றியெல்லாம் கவலைப்படாமல் நாம் அனைவரும் தெரிந்து கொள்ள வேண்டிய ஒரு விஷயத்தை கதையாக எடுத்துக் கொண்டு அதை சுவாரசியமாகக் கொடுத்திருக்கிறார் இயக்குநர் லட்சுமி ராமகிருஷ்ணன்.

"குழந்தை தத்தெடுப்பு" என்பது அவ்வளவு சீக்கிரத்தில் நடந்துவிடாத ஒன்று. அதற்காக சட்ட ரீதியாக சில பல விஷயங்களை தெளிவாகச் செய்ய வேண்டும் என்பதை அழுத்தமாக பதிவு செய்திருக்கிறார் இயக்குநர். அதில் பெற்ற குழந்தைக்காகப் போராடும் ஒரு தாய், பெறாத குழந்தைக்காகக் போராடும் ஒரு தம்பதி என பாசப் பிணைப்பை உணர்வுபூர்வமாக கொடுத்திருக்கிறார்.

முல்லையரசி, அசோக் இருவரும் திருமணம் செய்து




கொள்ளாமலேயே குழந்தை ஒன்றைப் பெற்றுக் கொள்கின்றனர். அந்தக் குழந்தையை வளர்க்கும் அளவுக்கு வருமானம் இல்லாத முல்லை அந்தக் குழந்தையை யாருக்கோ தத்து கொடுத்து விடுகிறார். சென்னையில் இருந்து அந்தக் குழந்தை கேரளாவில் இருக்கும் குழந்தையில்லாத நடுத்தர வயது தம்பதியினரான சமுத்திரக்கனி, அபிராமியால் தத்தெடுக்கப்படுகிறது. ஒரு வருடம் கழித்து திடீரென தனது குழந்தையைத் தனக்குத் திருப்பித் தர வேண்டும் என "சொல்லாததும் உண்மை" என்ற தொலைக்காட்சி நிகழ்ச்சி மூலம் பரபரப்பை ஏற்படுத்துகிறார் முல்லை. விவகாரம் குழந்தை நல குழு வரை செல்கிறது. சி. பி. சி. ஐ. டி. விசாரணையும் ஆரம்பமாகிறது. அதன்பின் என்ன நடக்கிறது என்பதுதான் படத்தின் மீதிக் கதை.

நாயகன்கள், நாயகிகள் பின்னால் செல்லாமல் தனது கதைக்காகவும், கதாபாத்திரங்களுக்காகவும் பொருத்தமான நடிகர்களைத் தேர்வு செய்து தொடர்ந்து படங்களை இயக்கி வருபவர் லட்சுமி ராமகிருஷ்ணன். இந்தப் படத்திலும் அதையே தொடர்ந்திருக்கிறார். நல்ல நடிகர்களின் தேர்வே அவரது வேலையை பாதியாகக் குறைத்துவிடுகிறது.

நடுத்தர வயதைத் தொட்ட பின்னும் குழந்தை இல்லாமல் தவிக்கும் சமுத்திரக்கனி, அபிராமி ஒரு குழந்தையைத் தத்தெடுத்து வளர்த்து அதைத் திடீரென பிரியும் மன நிலையை நமக்கும் பதற்றம் ஏற்படும் அளவுக்கு வெளிப்படுத்தி இருக்கிறார்கள். தான் பெற்ற குழந்தை தனக்கே வேண்டுமென தவிக்கும் முல்லையரசியின் தவிப்பும் நம்மைக் கண் கலங்க வைக்கிறது. பெற்றெடுத்து விட்டவர் ஒரு பக்கம், தத்தெடுத்து வளர்ப்பவர்கள் மறுபக்கம் என இருவரது பாசப் போராட்டத்தையும் சமநிலையாக ஆகக் கொண்டு சென்றிருக்கிறார் இயக்குநர்.

அந்த மையக் கதையுடன் "சொல்லாததும் உண்மை" என்ற தொலைக்காட்சி நிகழ்ச்சியின் முன்புலம், பின்புலம் என ஒரு காலத்தில் நிஜத்தில் அவர் பல வருடங் கள் தொகுத்து வழங்கிய "சொல்வதெல்லாம் உண்மை" நிகழ்ச்சியையும், அதே தொகுப்பாளர் கதாபாத்திரத்தில் நடித்து தன் பங்குக்கு வெளிச்சம் போட்டுக் காட்டி இருக்கிறார் லட்சுமி ராமகிருஷ்ணன்.

ஓரிரு காட்சிகளில் வரும் மிஷ்கின், அசோக், பாவல் நவகீதன், ஆடுகளம் நரேன், அனுபமா குமார், அந்த விசாரணை அதிகாரி என ஒவ்வொருவருமே அவர்களது கதாபாத்திரங்களில் இயல்பாய் நடித்திருக்கிறார்கள்.

இளையராஜவின் பின்னணி இசை வழக்கம் போல உணர்வுபூர்வமான காட்சிகளுக்கு உயிரூட்டியிருக்கிறது. கிருஷ்ணசேகர் ஒளிப்பதிவு, பிரேம்குமார் படத்தொகுப்பு இயக்குநருக்கு சரியாக இருந்திருக்கிறார்கள்.

ஒரு சில காட்சிகளில் உள்ள நாடகத்தனத்தை மட்டும் கொஞ்சம் குறைத்திருக்கலாம்.

# விஜய் - தத் மோதல்

விஜய் நடிக்கும் 'லியோ' படத்தின் இந்தி போஸ்ரரை படக்குழு வெளியிட்டுள்ளது. கடந்த சில நாட்களாக வெவ்வேறு மொழி போஸ்ரர்களும் வெளியான நிலையில் தற்போது ஹிந்தி போஸ்ரர் வெளியிடப்பட்டுள்ளது.

தமிழ் போஸ்டரில், 'KEEP CALM AND PREPARE FOR BATTLE' என குறிப்பிடப்பட்டிருந்தது. இந்த போஸ்ரரில் விஜய் ஆக்ரோஷத்துடன் கத்தியை கூர்தீட்ட தீப்பொறி பறக்கிறது. இந்நிலையில், தற்போது ஹிந்தி போஸ்ரர் வெளியாகியுள்ளது. இதில் சஞ்சய் தத்தின் கழுத்தை விஜய் நெரிப்பதான புகைப்படம் இடம்பெற்றுள்ளது. 'KEEP CALM AND FACE THE DEVIL' என எழுதப்பட்டுள்ளது.



# திரு. மாணிக்கம்



நந்தா பெரியசாமி இயக்கத்தில், சமுத்திரக்கனி கதையின் நாயகனாக நடிக்கும் படத்துக்கு 'திரு.மாணிக்கம்' என்று தலைப்பு வைத்துள்ளனர்.

நீண்ட இடைவெளிக்குப் பிறகு அனன்யா இதில் நடிக்கிறார். பாரதிராஜா, நாசர், தம்பி ராமையா, சிறீமன், வடிவுக்கரசி, கருணாகரன், இளவரசு முக்கிய கதாபாத்திரத்தில் நடிக்கின்ற னர். விஷால் சந்திர சேகர் இசை அமைக்கிறார்.


இந்தப் படத்தின் முதல் தோற்றம் வெளியாகி ரசிகர்களிடையே வரவேற்பைப் பெற்றுள்ளது. மாணிக்கம் என்ற மனிதன் எப்படி 'திரு. மாணிக்க' மாக உயர்கிறான் என்பது இந் தப் படத்தின் கதை என படக்குழுத் தெரிவித்தது.

# சண்டை பிடிக்கும்

நடிகை சமந்தா, விஜய் தேவரகொண்டாவுடன் நடித்து கடந்த மாதம் வெளியான 'குஷி' படம் வரவேற்பை பெற்றது. தசை அழற்சி நோயிலிருந்து மீண்டுள்ள சமந்தா, இப்போது நடிப்புக்கு இடைவெளி விட்டு ஓய்வு எடுத்து வருகிறார். இன்னும் சில மாதங்கள் அவர் ஓய்வு எடுப்பார் என்று கூறப்படுகிறது. இதனால் அவர் புதிய படங்களில் ஒப்பந்தமாகவில்லை.

இந்நிலையில் தனது இன்ஸ்டாகிராமில் ரசிகர்களுடன் உரையாடினார். ரசிக்களின் கேள்விக்குப் பதிலளித்த அவர், சிட்டாடெல் வெப் தொடரில் சண்டைக் காட்சியில் பங்கேற்றுள்ளேன் என்று தெரிவித்துள்ளார்.

"சண்டைக் காட்சியில் நடிப்பது எனக்குப் பிடிக்கும். அதுபோன்ற காட்சிகளில் நடிக்கும்போது உற்சாகமாகி விடுவேன். அது ஏன் என்று தெரியவில்லை. சிட்டாடெல் தொடரில் சண்டைக் காட்சியில் நடித்துள்ளேன். அது கடினமாக இருந்தது. இருந்தாலும் அந்தச் சவாலை நேசித்தேன். அந்தக் காட்சிகள் ரசிகர்களுக்குப் பிடிக்கும் என நினைக்கிறேன்" என்று சமந்தா தெரிவித்துள்ளார்.





# விஜயுடன் அரவிந்த்சாமி

நடிகர் அரவிந்த்சாமி 90 களில் நடித்து ரசிகர்களிடையே நீங்கா இடம்பிடித்தவர். அதன் பிறகு அவர் கதா நாயகனாக நடித்த படங்கள் பெரிதாக வெற்றி பெறவில்லை. நீண்ட வருடங்களுக்கு பிறகு தனி ஒருவன் படத்தில் வில்லனாக மீள வந்தார்.

இந்த நிலையில் வெங்கட் பிரபு இயக்கத்தில் நடிகர் விஜயின் 68ஆவது படத்தில் நடிக்கவுள்ளார். ஏ. ஜி. எஸ். நிறுவனம் தயாரிக்கும் இந்தப் படத்துக்கு யுவன் சங்கர் ராஜா இசையமைக்கிறார்.

தற்போது இதன் முன் தயாரிப்பு பணிகள் நடைபெற்று வருகிறது. இந்த படத்தில் முக்கிய கதாபாத்திரத்தில் அரவிந்த்சாமி நடிக்க ஒப்பந்தம் ஆகியுள்ளதாக கூறப்படுகிறது.

# சத்தமின்றி நடிக்கும் நயன்



நயன்தாரா தற்போது தயாரிப்பாளர் சசிகாந்த் இயக்கும் "டெஸ்ட்" என்ற படத்தில் நடித்து வருகிறார். இதில் மாதவன், சித்தார்த், மீரா ஜாஸ்மின் ஆகியோர் நடிக்கிறார்கள். இது தவிர டியூட் விக்கி இயக்கும் 'மண்ணாங்கட்டி' என்ற படத்திலும் நடித்து வருகிறார்.

இந்த படங்கள் தவிர்த்து நயன்தாரா சத்தமின்றி தனது 75ஆவது படத்தில் நடித்து வருகிறார். அறிமுக இயக்குநர் நிலேஷ் கிருஷ்ணா இயக்குகிறார். நாயகிக்கு முக்கியத்துவம் கொண்ட இந்த படத்தில் ஜெய் நடித்து வருகிறார்.

ராஜா ராணி படத்துக்குப் பிறகு நயன்தாராவுடன் அவர் நடிக்கும் படம் இதுவாகும். இவர்களுடன் சத்யராஜ், கே.எஸ்.ரவிக்குமார், கார்த்திக் குமார், அச்சுத் குமார், சச்சு, பூர்ணிமா ரவி, ரேணுகா, சுரேஷ் சக்கரவர்த்தி மற்றும் ரெடின் கிங்ஸ்லி உள்ளிட்ட பலர் நடிக்கின்றனர். சத்யன் சூரியன் ஒளிப்பதிவு செய்கிறார். தமன் இசையமைக்கிறார்.

# இங்கிலாந்தின் கவலை!

இங்கிலாந்து அணியின் முன்னிலை வீரர் ஜோ ரூட். அனைத்து வடிவ வீரர் என்றாலும், இருபது - 20 சர்வதேச போட்டிகளில் அவர் இப்போதெல்லாம் ஆடுவதில்லை. ஆனால், டெஸ்ட் மற்றும் ஒருநாள் கிரிக்கெட்டில் ஜோ ரூட் பெரும் வீரர் என்று ஏற்கெனவே நிரூபித்து விட்டார். ஒருநாள் போட்டிகளில் 162 போட்டிகளில் 6,246 ஓட்டங்களை 48.79 என்ற சராசரியில் எடுத்துள்ளார். 16 சதங்கள் 36 அரைச்சதங்கள் அதிகபட்ச ஓட்டமாக ஆட்டமிழக்காமல் 132 ஓட்டங்கள். இந்நிலையில் ஜோ ரூட் போன்ற ஒரு வீரர் ஒரு வடிவத்தில் தாதாவாக இருந்து கொண்டு ஒருநாள் கிரிக்கெட்டில் நிலையின்றி ஆடுவதை நம்ப முடிகிறதா?




ஆம்! ஜோ ரூட் ஒருநாள் சர்வதேச கிரிக்கெட் போட்டிகளில் சதம் எடுத்து 4 ஆண்டுகள் ஆகின்றன. 2019இல் மே.இ.தீவுகளுக்கு எதிராக சௌதாம்ப்டனில் 100 ஓட்டங்கள் எடுத்ததே ஜோ ரூட் எடுத்த கடைசி சதம். அதன் பிறகு 88, 79, கடைசியாக 86 ஓட்டங்களை எடுத்ததே சதத்துக்கு நெருக்கமாக அவர் எடுத்த ஸ்கோர்களாகும். அவுஸ்திரேலியாவுக்கு எதிராக 1, 39,0, இந்தியாவுக்கு எதிராக 0, 11, 0. சமீபத்தில் நியூசிலாந்துக்கு எதிராக 6,0,4, 29.

அதுவும் நியூசிலாந்துக்கு எதிராக அவர் மிகமிக மெதுவாகவே ஆடினார். குறைந்த ஓட்டங்களிலேயே இரு முறை பிடிகொடுத்து தவற விடப்பட்டது. மேலும் ஸ்லாக் ஸ்வீப்பில் அவுட் ஆனதும் அவரது போர்ம் இன்மையை அறிவுறுத்துகிறது. இந்நிலையில் இந்தியாவில் நடைபெறும் உலகக் கிண்ணக் கிரிக்கெட் தொடரில் ஜொன்னி பெயர்ஸ்ரோ, ஜோ ரூட், பென் ஸ்டோக்ஸ் 2ஆவது இடம் முதல் 4வது இடம் வரை ஆக்கிரமிக்கிறார்கள். மிகவும் முக்கியமான துடுப்பாட்ட இடங்கள் இவை. இவர்கள் மூவருமே இங்கிலாந்து ஒருநாள் அணியில் சீரான முறையில் இடம்பெறவில்லை. இதற்கு காயம் உட்பட பல்வேறு காரணங்கள் இருக்கலாம்.

ஜோ ரூட் கடந்த 4 ஆண்டுகளில் 15 ஒருநாள் போட்டிகளில் மட்டுமே ஆடியுள்ளார். டெஸ்ட் அணியின் தலைவராக இருந்ததால் ஒருநாள் கிரிக்கெட்டில் அவர் கவனம் செலுத்தாமல் இருந்தார். இங்கிலாந்து அணியின் ஒருங்கிணைந்த அங்கத்தினர்களில் ஜோ ரூட் ஒருவர் என்பதால் அவரின் ஓட்ட வறட்சி அங்கு ஒரு பின்னடைவாகவே பார்க்கப்படும். மேலும் திடீரென ஜோ ரூட் போன்ற ஒரு வீரருக்கு மாற்று வீரரை அவ்வளவு எளிதில் உலகக் கிண்ணம் போன்ற பெரிய தொடர்களில் களமிறக்கி விட முடியாது. பெயர்ஸ்ரோ ஆரம்பக்கட்டத்தில் தாக்குதல் ஆட்டம் ஆட, லியொாம் லிவிங்ஸ்ரன் அணித்தலைவர் பட்லர் இருவரும் முடிவு ஓவர்களை கவனித்துக் கொள்ள இவர்களை ஒருங்கிணைக்கும் இடத்தில் ஆடுவது ஜோ ரூட்தான்.

ஜோ ரூட் இந்த இடத்துக்கு மிகவும் பொருத்தமானவர். ஏனெனில் இவரது ஆட்டத்தில் அதிகடின சவால் இருக்காது. பாதுகாப்பான முறையில் கட்டுப்பாட்டுடன் கூடிய ஆக்ரோஷம் காட்டுவார் ஜோ ரூட். இவரைப்போன்ற ஒருவர் கிரீசில் இருந்தால் எதிர்முனை வீரர்களின் பதற்றம் குறையும். அமைதியான சூழலில் இங்கிலாந்து வெற்றி பெறாமல் இருந்ததில்லை.

மேலும் டேவிட் மலன் இப்போது பிரமாதமாக ஆடுவதால் ஜசன் றோயும் அணியில் இடத்தை இழந்து விட்டார். இதனையடுத்து ஜோ ரூட் பார்ம் மிக முக்கியமானதாகப் பார்க்கப்படுகிறது. கடந்த உலகக்கிண்ணத்தில் பாகிஸ்தானுக்கு எதிராக ஒரு முக்கியமான கட்டத்தில் சதமெடுத்தார் ரூட். அவுஸ்திரேலியாவுக்கு எதிராக அரையிறுதியில் ஆட்டமிழக்காத வீரராகத் திகழ்ந்தார். அந்த உலகக்கிண்ணத்தில் இங்கிலாந்து அணியில் அதிக ஓட்டங்களை எடுத்தவரே ஜோ ரூட்தான்.

ஆனால், 2020இல் 16 ஒரு நாள் போட்டிகளில் ஜோ ரூட்டின் சராசரி 27.85. நான்கு முறை டக் அவுட் ஆகியுள்ளார். ஒருநாள் போட்டிகளில் எப்போதாவது ஆடுவது, கடந்த ஓராண்டுக்குப் பிறகு திடீரென 4 போட்டிகளில் நியூசிலாந்துக்கு எதிராக ஆடியது ஜோ ரூட்டின் துடுப்பாட்டத் திறமைக்கான விஷயமாகத் தென்படவில்லை. ஜோ ரூட் பழைய நிலைக்கு வரவில்லை எனில், இங்கிலாந்தின் 3ஆம் நிலையில் பெரிய ஓட்டை ஒன்று இருப்பதை எதிரணியினர் பயன்படுத்திக் கொண்டு அந்த அணியைக் கவிழ்க்கவே முயல்வார்கள்.

# சம்பியனாகும் அணிக்கு 132 கோடி ரூபாய் பரிசு!



எதிர்வரும் கிரிக்கெட் உலகக் கோப்பை தொடரில் சாம்பியன் பட்டம் வெல்லும் அணிக்கு இலங்கை மதிப்பில் சுமார் 132 கோடி ரூபாய் (40 இலட்சம் டொலர்கள்) பரிசு தொகையாக வழங்கப்படும் என சர்வதேச கிரிக்கெட் சபை (ஐ. சி. சி.) அறிவித்துள்ளது.

'உலகக் கிண்ணக் கிரிக்கெட்-2023' தொடர் ஒக்ரோபர் 5ஆம் திகதி முதல் நவம்பர் 19ஆம் திகதி வரை இந்தியாவில் உள்ள 10 நகரங்களில் நடைபெறவுள்ளது.

தொடரை இந்தியா நடத்துகிறது. மொத்தம் 48 போட்டிகள். தொடரில் இலங்கை, இந்தியா, நடப்பு சம்பியன் இங்கிலாந்து, அவுஸ்திரேலியா, பாகிஸ்தான், தென்னாபிரிக்கா, நியூசிலாந்து, பங்களாதேஷ், ஆப்கானிஸ்தான், நெதர்லாந்து ஆகிய 10 நாடுகள் பங்கேற்கின்றன. இந்த நிலையில் பரிசுத் தொகை குறித்த அறிவிப்பை ஐ. சி. சி. வெளியிட்டுள்ளது.

தொடரில் பங்கேற்கும் அணிகள் மற்றும் 48 போட்டிகளுக்கு பரிசுத் தொகை வழங்கப்படுகிறது. நொக் - அவுட் சுற்றுக்கு முன்னேற தவறும் ஆறு அணிகளுக்கு சுமார் 3. 28 கோடி ரூபாய் வழங்கப்படவுள்ளது. அதேபோல குழு சுற்றில் ஒவ்வொரு போட்டியிலும் வெற்றி பெறும் அணிக்கு சுமார் 1.32 கோடி ரூபாய் அறிவிக்கப்பட்டுள்ளது. அரையிறுதியில் தோல்வியை தழுவும் 2 அணிகளுக்கு சுமார் 24 கோடி ரூபாய் வழங்கப்படவுள்ளது.

இறுதிப் போட்டியில் இரண்டாவது இடம் பிடிக்கும் அணிக்கு சுமார் 64 கோடி ரூபாயும், சம்பியன் பட்டம் வெல்லும் அணிக்கு சுமார் 132 கோடி ரூபாயும் வழங்கப்பட உள்ளது.

# அழிவின் விளிம்பில் டெஸ்ட்




உலகெங்கும் பல்வேறு நாடுகளில் இருபது - 20 கிரிக்கெட் லீக் தொடர்கள் நடைபெறுகின்றன. இங்கிலாந்தில் 'தி ஹண்ட்ரட்' எனும் இருபது - 20 கிரிக்கெட் மோகத்தால் அடுத்த தலைமுறை வீரர்களுக்கு டெஸ்ட் கிரிக்கெட் மீது ஆர்வம் குறைந்து வருவதாக தெரிகிறது. இவர்கள் அனைவரும் இருபது - 20 கிரிக்கெட்டைத்தான் விரும்புகின்றனர். அதிக பணம் கிடைக்கும் லீக் தொடர்களில் விளையாடவே விரும்புகின்றனர். இதன் சமீபத்திய உதாரணம் நமது நாட்டின் சகலதுறை வீரரான வனிந்து ஹசரங்கா. கடந்த ஓகஸ்ட் மாதம் டெஸ்ட் கிரிக்கெட்டே வேண்டாம் என்று ஓய்வு பெற்றிருந்தனர்.

இதற்கு முன்பாக நியூசிலாந்தின் ட்ரெண்ட் போல்ட்டும் இதே முடிவை எடுத்தார். முன்னதாக, இதற்கெல்லாம் மூலகர்த்தாவாக இலங்கையின் லஷித் மலிங்க டெஸ்ட் கிரிக்கெட்டே வேண்டாம் என்று சிறு வயதிலேயே முடிவு எடுத்து செயல்பட்டார். மேற்கு இந்தியத் தீவுகளின் சில பல வீரர்களும் டெஸ்ட் கிரிக்கெட் என்றாலே தூரம் ஓடி விடுவதைத்தான் பார்க்கிறோம். 26 வயதில் ஹசரங்கா டெஸ்ட் கிரிக்கெட் வேண்டாம் என்று முடிவெடுக்கிறார். மலிங்க, போல்ட் ஆகியோரும் இந்தப் பட்டியலில் உள்ளார்கள் என்றால் தனியார் கிரிக்கெட் செலுத்தும் ஆதிக்கத்தை நாம் குறைத்து மதிப்பிட முடியாது.

இருபது - 20 கிரிக்கெட்டில் 4 ஓவர் வீசினால் போதும். 30-35 ஓட்டங்களை குறைந்த பந்துகளில் குறித்த நேரத்தில் அடித்தால் போதும். ஒரே போட்டியில் உலக பிரபலம் ஆகிவிடலாம். அனைத்துக்கும் மேலாக நாட்டுக்காக டெஸ்ட் கிரிக்கெட்டில் ஆடி நேரத்தையும் உடல் உழைப்பையும் செலுத்தும் போதும் கிடைக்காத பணம் இந்த இருபது- 20 லீக் கிரிக்கெட்டில் சகல 'வசதி'களுடன் கிடைத்து விடுகிறது. பொதுவாகவே நிறைய அலைபேசி செயலிகள் வந்து விட்ட காலத்தில் நாம் உடலுழைப்பைக் குறைத்து, குறைந்த உழைப்பில் அதிக பணம் என்ற மனநிலைக்கு வந்து விட்டோம். இதில் கிரிக்கெட் மட்டும் என்ன விதிவிலக்கா என்று கேட்பவர்களும் உண்டு.

இது ஒருபுறம் என்றால் கிரிக்கெட்டின் 'பிக் 3' என்று வர்ணிக்கப்படும் மூன்று பெருசுகளான இந்தியா, அவுஸ்திரேலியா, இங்கிலாந்து அணிகள் அதிக டெஸ்ட் கிரிக்கெட்டை தங்களுக்குள்ளே ஆடி வருகின்றனர். இதனால் மற்ற ஏழை கிரிக்கெட் சபைகளுக்கு டெஸ்ட் கிரிக்கெட் வாய்ப்பு குறைந்து கொண்டே வருகின்றன. இதனால்தான் அருமையான அரிய திறன் படைத்த வீரர்கள் டெஸ்ட் கிரிக்கெட்டுக்கு கிடைக்காமல் தனியார் லீக் விளையாட சென்று விடுகின்றனர்.

மேற்கு இந்தியத் தீவுகள் அணி கடந்த 6 ஆண்டுகளாக வருடத்துக்கு 7 டெஸ்ட் போட்டிகளே ஆடுகிறது. 2026ஆம் ஆண்டின் பிற்பகுதி வரை தென்னாபிரிக்கா அணி 3 டெஸ்ட் போட்டிகள் கொண்ட தொடரில் ஆடப்போவதில்லை. மாறாக பணபலம் மிகுந்த இங்கிலாந்து அவுஸ்திரேலியா, இந்தியா அணிகள் தங்களுக்குள்ளே உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் 5 டெஸ்ட் போட்டிகள் கொண்ட இரு தரப்பு தொடரில் வரும் ஆண்டுகளில் ஆடுகின்றன. ஐ. சி. சி. டெஸ்ட் கிரிக்கெட்டில் இந்தியாவின் ஆதிக்கத்துக்கு உட்பட்டு எதிர்காலப் பயணத் திட்டத்தை வடிவமைக்கின்றது.

சமீபத்தில் இந்தப் பிரச்னைகளை அலசும் ஒரு நேர்காணலில் மே.இ.தீவுகள் வேகப்பந்து வீச்சாளர் கிமார் ரோச், டெஸ்ட் கிரிக்கெட் எப்படி அழிக்கப்படுகிறது என்பது குறித்து தெரிவித்திருந்தார்.

"ஐ. சி. சி. நிறைய செய்தாக வேண்டும், என்ன நடக்கிறது என்று பலரும் எழுதியும், பேசியும், விமர்சித்தும் வருகின்றனர். றிக்கி பொண்டிங்கே டெஸ்ட் கிரிக்கெட்டின் நிலை குறித்து வருந்துகிறார். நாம் என்ன வேண்டுமானாலும் பேசலாம், எழுதலாம், விமர்சிக்கலாம். ஆனால், ஐ. சி. சி. முடிவெடுக்கவில்லை எனில் நாம் பேசியும் பயனில்லை.

நிறைய தனியார் கிரிக்கெட்டுகள் முளைத்துவிட்டன. வீரர்கள் வாழ்வாதார செல்வம் சேர்ப்பதிலும் குறியாக உள்ளனர். இதனால் டொலர்களை விரட்டிக் கொண்டிருக்கின்றனர். பணத்தை நோக்கி படையெடுக்கின்றனர். கிரிக்கெட்டில் கொஞ்ச காலம்தான் ஆட முடியும். ஆகவே காற்றுள்ள போதே தூற்றிக்கொள் என்று இருப்பதை நான் குறைகூறவில்லை. ஆனால், கவலை என்னவென்றால் மேற்கிந்தியா, தென்னாபிரிக்கா டெஸ்ட் கிரிக்கெட் அழிந்து வருகின்றன.

வருடத்துக்கு 6 டெஸ்ட் போட்டிகள் என்பது எப்படி போதும். இந்தியா, அவுஸ்திரேலியா, இங்கிலாந்து தங்களுக்குள்ளேயே 15 போட்டிகளில் ஆடுகின்றனர். இது நிச்சயம் நல்லதல்ல. நான் கடைசியாக இந்தியாவுக்கு எதிராக ஜூலையில் டெஸ்ட் ஆடினேன், அடுத்த ஆண்டு ஜனவரி வரை நான் டெஸ்ட் ஆடமாட்டேன். இது மிக நீண்ட இடைவெளி. டெஸ்ட் கிரிக்கெட் அழிந்து வருகின்றது, கிரிக்கெட்டை தனியார் நிறுவனங்கள் கையகப்படுத்தி விட்டனர். டெஸ்ட் கிரிக்கெட்டில் சிறந்து விளங்கும் வீரர்கள் எந்த வடிவத்திலும் சிறந்து விளங்க முடியும் என்பதே என் கருத்து" என்று அவர் தெரிவித்தார்.

# புதிய அரச தொழில்முயற்சிகளை ஆரம்பிக்க அரசாங்கம் முயற்சி?

கொழும்பு, செப். 24

புதிய அரச தொழில்முயற்சிகளை ஆரம்பிக்க அரசாங்கம் தலையீடுகளை மேற்கொள்ளவில்லையென நிதி இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்க தெரிவித்தார்.

இலங்கையில் சுமார் 400 அரச நிறுவனங்கள் உள்ளதாகவும், அந்த அரச நிறுவனங்களை மறுசீரமைத்து, இலாபம் ஈட்டாத பகுதியை இனங்காணும் முயற்சியில் ஈடுபட்டு வருவதாகவும் அவர் கூறினார்.



அரசாங்கத்தின் புதிய வரிக் கொள்கை, சர்வதேச நாணய நிதியத்தின் வேலைத்திட்டம், அரச வருமானம் மற்றும் பொருளாதார ஸ்திரப்படுத்தல் வேலைத்திட்டம் ஆகியவற்றின் முன்னேற்றம் குறித்து அறிவிக்கும் மாநாடொன்றிலேயே இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்க இதனை குறிப்பிட்டார். (அ)

# பால்மா விலை உயராது!

கொழும்பு, செப். 24

இறக்குமதி செய்யப்படும் பால்மாவுக்கான வரி அதிகரிக்கப்பட்டுள்ள போதிலும் சந்தையில் பால்மாவின் விலை அதிகரிக்கப்படமாட்டாது என பால்மா இறக்குமதியாளர் சங்கம் தெரிவித்துள்ளது.

இறக்குமதி செய்யப்படும் பால்மாவுக்கான துறைமுக மற்றும் விமான நிலைய வரி 10 வீதத்தால் அதிகரிக்கப்பட்டுள்ளது.

வர்த்தக அமைச்சர் நாளின் பெர்னாண்டோவினால் நேற்று முன் தினம் இந்த அறிவிப்பு விடுக்கப்பட்டது.

வரி அதிகரிப்பு காரணமாக இறக்குமதி செய்யப்படும் பால்மாவின் விலை அதிகரிக்கப்படமாட்டாது எனவும், அதற்கு அனுமதி வழங்கப்படமாட்டாது எனவும் அமைச்சர் நாளின் பெர்னாண்டோ தெரிவித்திருந்தார்.

இருப்பினும், இறக்குமதி செய்யப்படும் பால்மாவுக்கான விலை அதிகரிக்கப்படுமென எதிர்பார்க்கப்பட்ட நிலையில், பால்மா இறக்குமதியாளர் சங்கம் இந்த அறிவிப்பை விடுத்துள்ளது. (அ)

# ஹரக் கட்டாவுக்கு உதவிய கான்ஸ்டபிள் காவலில்!

கொழும்பு, செப். 24

ஹரக் கட்டாவை தப்பிக்க வைக்க முயன்றதாக கூறப்படும் காவல்துறை கான்ஸ்டபிளுக்கு, உதவிய குற்றச்சாட்டில் கைதான இருவரை, 72 மணி நேரம் தடுப்புக்காவலில் வைத்து விசாரிப்பதற்கு அனுமதி கிடைத்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

குற்றப்புலனாய்வு திணைக்களத்தில் தடுப்பு காவலில் வைத்து விசாரிக்கப்பட்டு வரும் போதைப்பொருள் வர்த்தகரான ஹரக்கட்டா எனப்படும் நதுன் சிந்தகவை, தப்பிக்க வைக்க முயன்றதாக கூறப்படும் பொலிஸ் விசேட அதிரடிப் படையின் கான்ஸ்டபிள் ஒருவர் தற்போது தலைமறைவாகியுள் ளார்.

இது தொடர்பில், விசாரணைகளை முன்னெடுத்த கொழும்பு குற்றத்தடுப்பு பிரிவினரால் குறித்த கான்ஸ்டபிளுக்கு உதவி புரிந்ததாக சந்தேகிக்கப்படும் இருவர் கைது செய்யப்பட்டனர்.

அத்துடன், குறித்த கான்ஸ்டபிள் தப்பிச்செல்வதற்கு பயன்படுத்தியதாக கூறப்படும் வாகனமொன்றையும் பொலிஸார் கைப்பற்றியுள்ளனர். (அ)

# மொட்டு எம்.பிக்களுக்கு பஸில் போட்ட உத்தரவு



கொழும்பு, செப். 24

எதிர்வரும் தேர்தலில் பொது ஜன பெரமுன 51 வீதம் அல்லது அதற்கு மேற்பட்ட வாக்குகளைப் பெற்று வெற்றியீட்டுவதற்கு அனைவரும் ஒன்றிணைந்து செயற்பட வேண்டுமென கட்சியின் தேசிய அமைப்பாளர் பஸில் ராஜபக்ஷ தெரிவித்தார்.

பிரசார நடவடிக்கைகளில் மற்ற கட்சிகளை ஊக்குவிக்கும் வகையில் செயல்பட வேண்டாம் என கட்சி எம்.பி.க்களுக்கு தெரிவிக்க வேண்டும் என அவர் சுட்டிக்காட்டினார்.

பெரமுனவின் தலைவர் மகிந்தவுடன் கலந்தாலோசித்து கட்சி எடுக்கும் தீர்மானங்கள் தொடர்பில் மேலும் கலந்துரையாடவுள்ளதாக தெரிவித்த பஸில் ராஜபக்ஷ, மேலும் சீர்திருத்தங்கள் தேவைப்பட்டால் தெரிவிப்பதாகவும் குறிப்பிட்டார். (அ)

